பக்கங்கள்: 20

விலை: 30.00

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:25 16.10.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



மலையக மக்களின் நிலவுரிமை ஏன் இன்னும் கவனத்தில் கொள்ளப்படவில்லை?

பக்கம் 06



மருத்துவத்தை மக்கள் மயப்படுத்திய சேவையாளர்கள்

பக்கம் 11

## மக்களின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளாத அரசும்!




தாமிரன்

இலங்கை இன்று குழப்பகரமான அல்லது போராட்ட களமாக மாறிவருகின்றது. இந்த அரசின் மீதான மக்களின் நம்பிக்கைகள் சடுதியாகத் தகர்ந்து வருகின்றன. சிங்கள பௌத்த அரசாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள எண்ணிய அரசு அந்த மக்களிடமிருந்தே தன்னை அந்நியப்படுத்தத் தொடங்கியிருக்கின்றது. அரசின் வினைத்திறனற்ற செயற்பாடுகளும் கொள்கைகளும் தொடர்ச்சியாக அதன் மீது மக்கள் அதிருப்தி கொள்ளக் காரணமாகின்றன. மறுபுறமாக அரசைக் காப்பாற்றுவதற்காக அதன் ஜனநாயகமற்ற செயற்பாடுகளை மறைப்பதற்கு முயல்கின்ற அரசில் அங்கம் வகிக்கின்ற அரசியல்வாதிகளும் தொடர்ச்சியாக அரசை நியாயப்படுத்தியே வருகின்றனர். இந்த நிலையில் கைவிடப்பட்ட மக்களால் வேறு என்னதான் செய்ய முடியும்? அவர்கள் போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். இது அரசை ஆரோக்கியமான செல்வழியில் ஒரு போதும் கொண்டு செல்லாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிதல் அரசிடமோ அரசியல்வாதிகளிடமோ இருக்கின்றதா? என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது.

பொருட்களின் நியாயமற்ற விலையேற்றம் மக்கள் மீது பெருஞ்சுமையாகத் தினந்தினம் சுமத்தப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் அது விவசாயம்,

▶ 19

நா.தம்பித்துரை

## பொருட்களின் விலையுயர்வு உளவியலையும் வாழ்வியலையும் சிதைக்கப் போகிறது



இலங்கையில் வாழுகின்ற ஒவ்வொரு சாமானிய மக்களும் உள நெருக்கடிக்கு உள்ளாகிவரும் காலம் இது. நாட்டினை ஆளும் அரசு அண்மைக் காலங்களாக முன்னெடுத்துவரும் செயற்பாடுகளைப் பார்த்தால் தொடர்ந்து வரப் போகும் காலங்கள் இப்போது இருப்பதனை விடவும் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தி, மக்களின் இயல்பான வாழ்க்கை முறையினைச் சிதைவுக்குள்ளாக்கிவிடும் போல் தெரிகின்றது. இது மக்கள் மத்தியில் அச்சமாக எழத் தொடங்கியதனைத் தொடர்ந்தே அவர்கள் அரசுக்கெதிரான போராட்டங்களை முன்னெடுக்க முனைப்புக் காட்டி வருகின்றனர். இத்தகைய போராட்டங்களுக்கு அரசு நேர்மயமாக முகம் கொடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதனை அரசில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. தற்போதைய அரசுக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட

▶ 04

# ஆப்கானிஸ்தானைப் போல அமெரிக்கா தாய்வானைக் கைவிடுமா?

ஜ.வி.மகாசேனன்



உலக அரசியலில் சில நிலப்பரப்புகள் சிறிய தீவாக காணப்படுகின்ற போதிலும், அதன் புவியியல் அமைவிடம் அந்நிலப்பரப்புக்குக் கணதியான பெறுமதியை வழங்குகின்றது. இதனை விளங்கிக்கொள்ளும் விதத்தில், கியூபா அரசியல் அமைவிடம் சார்ந்து பனிப்போர் காலத்தில் சர்வதேச ஈர்ப்பை பெற்றிருந்தது. அவ்வாறே இந்தோ-பசுபிக் மூலோபாய அரசியலில் இலங்கையும் சர்வதேச சக்திகளின் விருப்புக்குரிய நிலமாக அமைகின்றது. இவ்வாறே தென்சீனக்கடலில் தாய்வானும் சீனாவிற்கெதிரான அமெரிக்க தலைமையிலான மேற்கின் அரசியலுக்கு துணைபோவதால் ஒரு உலகப்போர் பற்றிய உரையாடல்கள் மற்றும் எதிர்பார்க்கைகளில் தாய்வான் நிலப்பரப்பு முதன்மையாக உள்ளது. இக்கட்டுரை தாய்வான் நிலப்பரப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள பதட்டம் மற்றும் அதனால் ஏற்படும் அரசியல் விளைவுகளை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்வான் ஜலசந்தியில் கடந்த இரண்டு ஆண்டுகளில், சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் அதன் செயற்பாட்டை அதிகரித்துள்ளது. தினசரி தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்கு (ADIZ) போர் விமானங்களை அனுப்புதல் மற்றும் அருகிலுள்ள கடல் பகுதிகளில் இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் கண்காணிப்பு விமானங்கள் அடிக்கடி அனுப்பப்பட்டாலும் தற்போது போர் விமானங்களூடாக ஆதிக்கம் செலுத்த முனைந்துள்ளது. அணு ஆயுதங்களைச் சுமக்கும் திறன் கொண்ட குண்டுவீச்சுக்காரர்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. பெரிய அளவிலான நடவடிக்கைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட நிகழ்வுகளுடன் இணைக்கப்படுகின்றன. ஒக்ரோபர்-01 அன்று சீனாவின் தேசபக்தி விடுமுறை தினமாகும். அன்றைய தினம் சீன இராணுவம் தாய்வான் மீதான பதட்டத்தை உயரளவில் அதிகரித்தது. ஒக்ரோபர்-01 அன்று 39 விமானங்களிலும் மற்றும் ஒக்ரோபர்-02 அன்று 38 விமானங்களிலும் தாய்வானின் ஏ.டி.ஐ.எஸ் பகுதிக்கு ஊடுருவல்களை மேற்கொண்ட சீனாவை அமெரிக்கா கண்டித்த பிறகு, ஒக்ரோபர்-04 அன்று 56 விமானங்களை ஏ.டி.ஐ.எஸ் பகுதிக்கு அனுப்பி இருந்தது. இது தாய்வான் ஜலசந்தியின் பதட்டத்தை அதிகரித்துள்ளது.

சீனா தாய்வான் மீது ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகள் தொடர்பில் கருத்துரைத்த தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் சியு குவோ-செங் சீனாவின் நெருக்கடிகள் ஒரு எச்சரிக்கைக்கு வழிவகுப்பதாக குறிப்பிடுகின்றார். அவர் தாய்வான் ஜலசந்தி முழுவதும் ஏற்பட்டுள்ள பதற்றம், தனது 40 ஆண்டுகளுக்கும் மேலான இராணுவ சேவையில் பார்த்த மிகக் கடுமையானதென விபரித்துள்ளார். தாய்வான் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில், 2025-க்குள் தாய்வான் மீது முழு அளவிலான படையெடுப்பை பெய் ஜிங் செய்ய முடியும்.

> **"ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள பதட்டமானது உண்மையில் அமெரிக்க-சீன போரினையே தாய்வான் எதிர்கொள்கின்றது. எனினும், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறியதன் பிற்பாடு அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் சர்வதேச நாடுகளிடையே அதிக சந்தேகப்பார்வையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தாய்வானுக்கான பாதுகாப்பை அமெரிக்கா இதயசுத்தியுடன் மேற்கொள்கின்றதா? என்பதை நுணுக்கமாக அவதானிக்க வேண்டி உள்ளது."**

தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்திற்குள் சீனாவின் ஊடுருவல்களுக்கு பிரதான காரணமாக அமைவது, தென்சீனக்கடலை மையப்படுத்தி சமீபத்தில் எழுந்து வரும் சீனாவிற்கான நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான உபாயமாக தாய்வான் ஜலசந்தி பதட்டத்தைப் பிரயோகிக்க சீனா முற்படுகின்றமையாகும். அமெரிக்கா தனது இந்தோ-பசுபிக் மூலோபாயத்தில் சமீபத்தில் அதிகரித்து வரும் பாதுகாப்புக் கூட்டுக்களின் முன்னேற்பாடுகள் சீனாவிற்கான தென்சீனக் கடலில் நெருக்கடியாக அமைகின்றது. குறிப்பாக அமெரிக்க, பிரிட்டன் கூட்டில் அவுஸ்ரேலியா மேற்கொண்டுள்ள ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தமும் அதன் உள்ளடக்கங்களும் சீனா-தாய்வானின் சமகால முரண்பாட்டில் ஒருவகையிலான தாக்கத்தை செலுத்தியுள்ளது. ஆக்கஸ் எனும் ஒரு புதிய இந்தோ-பசிபிக் மூலோபாய கூட்டணியின் ஒரு பகுதியாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற அவுஸ்ரேலியாவுக்கு உதவுவதாக அமெரிக்கா அறிவித்தது. இது சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை எதிர்கொள்வதற்காக வாஷிங்டனின் நடவடிக்கையாக இருக்கும் என்று பெயர் தெரியாத நிலையில் பேசிய ஒரு அமெரிக்க அதிகாரி ஊடகங்களில் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை முதன்மைப்படுத்தி அமெரிக்க தலைமையில் முன்னெடுக்கப்படும் குவாட் மற்றும் ஆக்கஸ் போன்ற பாதுகாப்பு கூட்டுக்களை சீனாவிற்கு எதிராக கட்டமைக்கப்படும் நேட்டோ-2 என்ற புதிய பார்வையையும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். ஆக்கஸ் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டதிலிருந்து, தாய்வானுக்கு அருகில் சீன விமானங்கள் கணிசமாக அதிகரித்து வந்துள்ளன.



எனவே தாய்வான் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட மானது உண்மையில் அமெரிக்க-சீன போரினையே தாய்வான் எதிர்கொள்கின்றது. எனினும், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா இராணுவம் வெளியேறியதன் பிற்பாடு அமெரிக்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் சர்வதேச நாடுகளிடையே அதிக சந்தேகப் பார்வை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தாய்வானுக்கான பாதுகாப்பை அமெரிக்கா இதயசுத்தியுடன் மேற்கொள்கின்றதா? என்பதை நுணுக்கமாக அவதானிக்க வேண்டி உள்ளது.

முதலாவது, அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தாய்வானின் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் அதிகரித்து வரும் சீனாவின் பாதுகாப்பு படை ஊடுருவல்கள் தொடர்பில் பிரசல்ஸில் பி.பி.சி.யின் இராஜதந்திர நிருபர் ஜேம்ஸ் லாண்டேல் எழுப்பிய கேள்விகளுக்கு வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதிகம் அமெரிக்க சீனாவுடனான மோதலிலிருந்து விலகி இருப்பதையே உறுதி செய்கின்றது. தாய்வானைப் பாதுகாக்க இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா தயாரா? என்று சல்லிவனிடம் கேட்டிருந்தார். அதற்கு அவர், "நான் இதைச் சொல்கிறேன், அந்த நாள் எப்போதாவது நடக்காமல் தடுக்க நாங்கள் இப்போது நடவடிக்கை எடுக்கப் போகிறோம்." எனத் தெரிவித்திருந்தார். மேலும், ஆப்கானிஸ்தானில் இருந்து சமீபத்தில் வெளியேறியதை அடுத்து, அமெரிக்கா தனது சக்தியைப் பயன்படுத்த தயங்குகிறதா? என்று ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். சல்லிவன், அந்த மோதலில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள முயன்றது மிகப்பெரிய தவறு. ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிவருவது எப்படியாவது எந்த நாட்டிற்கும் அமெரிக்காவின் அர்ப்பணிப்பின் ஆழம் மற்றும் நிலை பற்றி ஏதாவது சொல்கிறது என்பது மிகப்பெரிய தவறு." என்று கூறினார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் கருத்துக்கள் முழுமையான தெளிவில்லாது தர்மசங்கடமான நிலைமையினை கடந்து செல்லும் பதிலாகவே காணப்படுகின்றன. இது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையும் ஆப்கான் விவகாரத்தால் பெரும் தர்ம சங்கட நிலைக்குள் உள்ளமையையே உறுதி செய்கிறது.

இரண்டாவது, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் தாய்வான் ஜலசந்தி அருகே சமீபத்திய நடவடிக்கைகள் பற்றி பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி செய்தி மாநாட்டில் வெளியிட்டுள்ள கருத்துக்களும் தாய்வான் தொடர்பிலான அமெரிக்காவின் உறுதியற்ற நிலைப்பாட்டையே உறுதி செய்கிறது. தாய்வான் ஜலசந்தியில் அண்மையில் சீன பலம் காட்டினாலும், அதன் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா உறுதியாக உள்ளது என்றும் தாய்வானுக்கு போதுமான சுய பாதுகாப்பு திறனைப் பராமரிக்க தொடர்ந்து உதவப்போகிறோம் என்றும் கிர்பி கூறினார். அதே நேரம் தாய்வானைப் பாதுகாக்க பென்டகன் ஏதேனும் உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமா? என்றும், இதுபோன்ற செயல்களுக்கு காங்கிரஸின் ஒப்புதல் தேவையா? என்றும் கேட்டதற்கு, அவர் கருதுகோள்களுக்குப் பதிலளிக்க மாட்டார் என்று குழப்பகரமான வினாக்களுக்கு உறுதிப்பாடான நிலைப்பாடின்மையால் கடந்து செல்லவே முற்பட்டுள்ளார். மேலும், ஊடகவியலாளர், வாஷிங்டன் பெய்ஜிங்கின் 'ஒரு சீனா கொள்கை'யிலிருந்து வேறுபட்ட அமெரிக்காவின் 'ஒரு சீனா கொள்கைக்கு' இணங்க வாஷிங்டன் செயல்படுகிறது. இதன் கீழ் தாய்வான் மீது சீன கம்யூனிஸ்ட் கட்சி இறையாண்மையை உறுதிப்படுத்துகிறது என்பதை வலியுறுத்தினார். ஜான் கிர்பி "தாய்வான் மீதான இறையாண்மை குறித்து, நாங்கள் எந்த நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை" என்று கூறினார். தாய்வானின் இறையான்மை குறித்த எந்த நிலைப்பாடும் இல்லாத அமெரிக்கா சீனாவின் தாய்வான் மீதான நெருக்கடிக்கு உறுதியான பாதுகாப்பளிக்கும் என்ற உறுதிப்பாட்டோடு முரண்படுவதையே உறுதி செய்கிறது.

மூன்றாவது, ஒக்ரோபர்-05 அன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செய்தியாளர்களிடம் கூறியபோது அவரும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும், தாய்வான் விவகாரங்களுக்கு உடன்படுவதாக ஒப்புக்கொண்டனர் எனத் தெரிவித்த விடயம் சர்வதேச அரசியல் பரப்பில் அதிக குழப்பத்தை உருவாக்கியது. சீனாவின் நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்களிடம் பைடன் கூறுகையில், "நான் தாய்வானைப் பற்றி ஷியுடன் பேசியுள்ளேன். நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். நாங்கள் தாய்வான் ஒப்பந்தத்திற்கு கட்டுப்படுவோம்." என்று தெரிவித்தார். அவரது கருத்து அச்சங்களை அமைதிப்படுத்தும் நோக்கில் தோன்றினாலும், அது குழப்பத்தை மட்டுமே ஏற்படுத்தியது. ஏனெனில் பெய்ஜிங்கிற்கும் வாஷிங்டனுக்கும் இடையே தாய்வான் பற்றி அதிகாரபூர்வ உடன்பாடு இல்லை. தாய்வான் மீதான அமெரிக்க கொள்கை குறித்து பைடன் குழப்பத்தை ஏற்படுத்தியது இது இரண்டாவது முறையாகும். மார்ச் மாதத்தில், ஆப்கானிஸ்தானில் இருந்து துருப்புக்களைத் திரும்பப் பெறுவதற்கான முடிவை அடுத்து, ஆசிய பசுபிக்கில் அதன் நட்பு நாடுகளுக்கு அமெரிக்காவின் உறுதிப்பாட்டைப் பற்றி கேட்டபோது, சீனாவின் தாக்குதலுக்கு உள்ளானால், தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் என்று பைடன் பரிந்துரைத்தார். அதில் நேட்டோ கூட்டாளிகளுக்கு ஒப்பான பாதுகாப்பு ஒப்பந்தம் தாய்வானுடன் மேற்கொண்டிருப்பதாக குறிப்பிட்டார். எனினும் தாய்வானுடன் அமெரிக்காவுக்கு முறையான பாதுகாப்பு ஒப்பந்தம் இல்லை என்பதை வெள்ளை மாளிகை அதிகாரிகள் பின்னர் தெளிவுபடுத்தியிருந்தனர். அமெரிக்காவின் ஹார்வர்டின் பேர்பேங்க்ஸ் மையத்தின் முதுகலை ஆய்வாளர் லெவ் நாச்மேன், தாய்வான் ஜலசந்தியில் பதற்றத்தை பைடன் நிர்வாகம் தீவிரமாக எடுத்துக்கொள்வதாக தெரிகிறது. ஆனால் தாய்வான் ஒப்பந்தத்தை குறிப்பிடுவதில், அமெரிக்க ஜனாதிபதி வெறுமனே தவறாகப் பேசியிருக்கலாம். ஆனால் மொழி துல்லியமாக உண்மையில் இருக்க வேண்டிய நேரத்தில் துல்லியமாக இல்லாததைப் பார்க்க வெறுப்பாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். பைடனின் கருத்து தாய்வான் சார்ந்து அமெரிக்காவிடம் மூலோபாய தெளிவின்மையை உறுதி செய்கின்றது.

எனவே, தாய்வானின் நிலைப்பாடு அதிகம் அமெரிக்க தேசிய நலனுக்குள் சிதைந்து செல்லக்கூடிய வாய்ப்பே அதிகமாக உள்ளது. அமெரிக்காவின் கடந்த கால அனுபவங்களில் தேசிய இனங்களின் உரிமைப்போராட்டங்களை தமது தேசிய நலனுக்காகப் பயன்படுத்தி கைவிட்டு செல்லும் இயல்புகள் அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக மேற்கு ஆசியாவில் தாயக மீட்புக்காக போராடும் குர்து மக்களின் போராட்டத்தை அமெரிக்கா தனது தேசிய நலனுக்காக ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதக்குழுக்களுக்காக பயன்படுத்தி அக்குழுவின் தலைமைகளை அழித்து தனது தேவை பூர்த்தியடைந்த பின்னர் குர்து மக்களுக்கு எத்தீர்வையும் பெற்றுக்கொடுக்காது நட்டாற்றில் விட்டுச் சென்றனர். இவ் அனுபவம் நாளை தாய்வானுக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களையே களநிலவரங்கள் உறுதி செய்கின்றன. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# அதிகாரமற்ற மாகாணசபையைக் கொடுத்து நாட்டை சுபீட்சத்துக்குக் கொண்டுவர முனைகிறது அரசு?..

நாட்டின் ஜனாதிபதி அண்மைக் காலமாக நாட்டினை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கான திட்டங்களை தனது அரசு கொண்டுள்ளதான அறிவிப்புக்களை வெளியிட்டவண்ணம் உள்ளார். நாட்டினை சுபீட்சமாக்குவதற்கு தயாராக இருக்கும்படி தனது அரசியல் அங்கத்தவர்களை கேட்டுக் கொண்டதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன அதனைவிடவும் மாகாணசபைத் தேர்தலை விரைவுபடுத்தி நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது, புதிய அரசமைப்பு உருவாக்குவது பற்றியும் பேசியுள்ளார். இவரது இத்தகைய அறிவிப்புக்கள் எதன் பாற்பட்டது? நாடு அதலபாதாளத்துக்குள் வீழ்ந்துகிடக்கும் நிலையில் அதனை மீட்டெடுப்பதற்கு வெறும் வார்த்தைகள் அல்லது கருத்து வெளியிடுதல்கள் மட்டும் போதுமானதா? அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாமா? என்ற கேள்விகள் சாதாரணமான மக்களிடமிருந்தும் எழத் தொடங்கியிருக்கின்றது.

அண்மையில் இந்திய வெளி விவகார அமைச்சர் ஸ்ரீ வர்ஷ் வர்தன் ஷ்ரிலங்காவைச் சந்தித்ததன் பின்னர் இந்தியா இலங்கை மீது செலுத்தவிருக்கும் அழுத்தத்தினைத் தணிக்கும் விதமானதாகவே மாகாண சபைத் தேர்தல் நடத்துவது தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இற்றைக்கு மாகாணசபைக் காலங்கள் முடிவடைந்து மூன்று வருடங்களை அண்மித்துள்ள நிலையில் இதுவரைகாலமும் அதனைப்பற்றி சிந்திக்காத நாட்டின் தலைவர் இந்தியா வெளிவிவகாரச் அமைச்சரின் வலியுறுத்தலைத் தொடர்ந்து மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்வதான அறிக்கை ஒருவகையில் அவர் இந்தியாவினைப் பகைக்காது தனது ஆட்சியினை நடாத்திச் செல்வதற்கு விரும்புவதாகவே குறிகாட்டுகின்றது. ஆனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் எத்தகைய கலந்துரையாடல்களையும் மேற்கொண்டதாக அறியமுடியவில்லை.

அப்படியென்றால் இந்தியா வெறுமனே தனது ஆதிக்கத்தினை இலங்கையில் உறுதிப்படுத்துவதற்கு மட்டும் விரும்புகின்றதே தவிர நாட்டு மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் நலன் தொடர்பில் எந்தவகையான கரிசனையும் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரியும் ஒன்று. அதனைச் சரியாகப் புரிந்து கொண்ட ஜனாதிபதி கோத்தபாய ராஜக்ஷ இத்தகைய தருணத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி முடித்துவிட்டால் இந்தியாவிடம் இருந்து மாகாணசபை அதிகாரம் தொடர்பிலான அழுத்தங்கள் எதுவும் எப்போதும் வரப்போவதில்லை என்ற மனோநிலையில் மாகாணசபைத் தேர்தலை விரைவுபடுத்தி நடத்தி முடித்துவிடலாம் என்று எண்ணம் கொண்டிருக்கலாம். அல்லது இந்தியாவின் வார்த்தைகளை நாங்கள் எப்போதும் மீறுவதில்லை என்ற செய்தியை இந்தியாத்தரப்புக்குச் சொல்ல முனைப்புக் கொள்வதாக இருக்கலாம்.

இது இவ்வாறு இருக்க எமது தமிழ் அரசியல் தரப்பினர் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தங்களது காய்நகர்த்தல்களை மேற்கொள்ளத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இப்போது அதிகமான கட்சிகளிடம் மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற வாதப் பிரதிவாதங்கள் மிகவும் இரகசியமாக ஏற்படத் தொடங்கியிருக்கின்றன என்பது நம்பிக்கை தரும் தரப்பிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. அதிலும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசா தான் என்று ஆணித்தரமாக அடித்துக் கூறியிருக்கின்றார்.

மாகாணசபை தேர்தலை எதிர் கொண்டு வெற்றி கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் அதிகாரம் அற்ற மாகாணசபையில் இருந்து கொண்டு என்ன செய்ய முடியும் என்பதுதான் பிரச்சினை. கடந்த கால மாகாணசபை ஆட்சிக் காலத்தில் மாகாண சபைக்கென்று இருக்கும் அதிகாரங்களையே பயன்படுத்தி ஆரோக்கியமான செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு மத்திய அரசு விடுவதாயில்லை என்று முன்னாள் முதலமைச்சரும் தமிழ் தரப்பு மாகாணசபை உறுப்பினர்களும் கண்ணீர் வடித்திருந்த நிலையில், அமையப்போகும் மாகாணசபையைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்பதனை யோசிக்க வேண்டும். மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அழுத்தம் கொடுத்த குறித்த வெளியுவுச் அமைச்சரிடம் மாகாணசபை அதிகாரத்தினை வலுப்படுத்துவது தொடர்பில் பேசி தீர்க்கமான முடிவினை முன்னெடுப்பதற்கான முயற்சியினை மேற்கொண்டிருக்க வேண்டும். குறைந்த பட்சம் மாகாணசபைக்கு இருக்கின்ற தற்போதைய அதிகாரத்தினைப் பிரயோகித்து செயற்படக் கூடிய சாத்தியமான நிலைமைகள் தொடர்பில் பேசியிருக்க வேண்டும். அதனை விடுத்து அதிகாரமற்ற, இருக்கும் அதிகாரத்தினைப் பிரயோகித்துச் செயற்பட முடியாத மாகாணசபை தொடர்பில் அதிகளவு சிரத்தை காட்டவேண்டுமா? என்ற கேள்வி எழுகின்றது. கடந்த மகாணசபைத் தேர்தலில் இத்தகைய காரணத்தினைச் சொல்லித்தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணித்திருந்தனர். தொடர்ந்து அவர்கள் எத்தகைய நிலைப்பாட்டினை எடுப்பார்கள்? என்பது இன்னும் வெளிச்சமாக இல்லை. ஆனாலும் காலவோட்டத்தில் தமிழ் மக்களுக்கென்று இருக்கும் ஒரேஒரு அதிகார அரசு மாகாணசபைதான் என்ற எண்ணமும் பொதுவாக எல்லாத் தமிழ் அரசியல் தரப்பினரிடமும் ஏற்பட்டு இருக்கின்றது. இத்தகைய எண்ணத்தில்தான் கடந்த மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு மலர்ந்தது. தமிழர்களின் அரசு என்று சொல்லிக் கொண்டு விளையாட்டுக் கிரீடங்களைத் தலையில் சூடி பத்திரிகைகளில் சிரித்துக் கொண்டிருந்த நிகழ்வும் நடைபெற்றிருக்கின்றது. அவ்வாறு மலர்ந்த தமிழர்களின் அரசு, மத்திய அரசு மாகாணசபையை சுதந்திரமாக இயங்க விடவில்லை என்று குறைப்பட்டுக் கொண்ட நிகழ்வுகளும் மாகாணசபை ஆட்சி முடிவுக்கு வந்த தறுவாயில் சொல்லிக் கொண்டது.

இதனால் மாகாணசபை அதிகாரம் எப்போதும் மத்திய அரசுக்கு உட்பட்டது என்பது வெளிப்படை. அதனை தற்போதைய ஆளும் அரசும் இன்னும் அழுத்தமாகவே கடைப்பிடித்துவரும் என்பதும் வெளிப்படை. இத்தகைய இறுக்குப்பிடிக்குள் வைத்துக் கொண்டுதான் நடைமுறை அரசு நாட்டினை சுபீட்சமாக்கப் போவதாகச் சொல்லிக் கொள்கின்றது. தனது நாட்டு மக்களுக்கு அதிகாரத்தினைச் சரியான வகையில் பகிர்ந்தளிக்க விருப்பம் இல்லாத அரசும் தமிழ் மக்கள் மீது எந்தக் கரிசனையுமற்று தனது அதிகாரத்தினை மட்டும் இலங்கையில் நிலைநிறுத்த எண்ணம் கொண்டுள்ள இந்திய அரசும் இணைந்து வனைந்து வைத்திருக்கும் ஓட்டைப்பானைதான் மாகாணசபை அரச அதிகாரம் என்பதனைப் புரிந்து கொண்டு செயற்பட்டால்தான் சரியான வகையில் பயன்படுத்துவது தொடர்பில் சிந்தித்துச் செயற்பட முடியும். ■

# மண்ணெண்ணை அடுப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் சமையலறைகள்

தந்திரன்

காட்டை அழித்து விறகு இருந்தும் எரிவாயு வாங்கினோம் டும் டும் டும்... அரசை நம்பி எரிவாயுவையும் தொலைத்தோம் டும் டும் டும்.. மின் சார அடுப்பு வாங்கினோம் டும் டும் டும்... மண்ணெண்ணை அடுப்பு வாங்கினோம் டும் டும் டும்.. இனி மண்ணெண்ணை விலை ஏறப் போகுது டும் டும் டும்.. இனி இல்லாத காட்டில் விறகைத் தேடப் போகிறோம் டும் டும்...

சமையல் எரிவாயு சிலிண்டர் விலையேற்றத்தை அடுத்து நாட்டின் சகல பாகங்களிலும் மண்ணெண்ணெய் அடுப்பிற்கான கேள்வி சடுதியாக உயர்வடைந்துள்ளது. அதுமாத்திரமன்றி முன்னைய விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் சிறிய மண்ணெண்ணெய் அடுப்பின் விலை 500 ரூபாவினாலும் பெரிய மண்ணெண்ணெய் அடுப்பின் விலை 1,000 - 1,500 ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

அதன்பிரகாரம் முன்னர் 2800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட சில்வர் மண்ணெண்ணெய் அடுப்பு இப்போது 4200 ரூபாவிற்கும் முன்னர் 2,500 விற்பனை செய்யப்பட்ட ஸ்டவ் அடுப்பு இப்போது 4,000 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் புதிய விலைகள் வெளியிடப்பட்டன. அதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 1,182 ரூபாவினாலும் 5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 473 ரூபாவினாலும் 2.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 217 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.



அதேபோன்று லாப் ரக சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளைப் பொறுத்தமட்டில், 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 984 ரூபாவினாலும் 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 393 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கோவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாகப் பலர் தொழில்வாய்ப்பையும் வருமானத்தையும் இழந்திருந்த சூழ்நிலையில், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினால் பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து கொண்டு வருகின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பினால் மக்கள் மாற்றுவழிகளைத் தேடி இன்னல்படுகின்றனர்.

அந்தவகையில் நாட்டில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையங்களில் இவ்வாரத்தில் மண்ணெண்ணெய் அடுப்பைக் கொள்வனவு செய்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அது மாத்திரமன்றி மண்ணெண்ணெய் அடுப்பிற்கான கேள்வி உயர்வடைந்ததைத் தொடர்ந்து அதன் விலைகளும் அதிகரித்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

அதுமாத்திரமன்றி சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகள் அதிகரிக்கப்பட்டமையினால், சிறிய அடுப்பிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது கண்கூடு.

இந்த நிலையில்தான் இன்னொரு ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறது. IOC எண்ணெய் நிறுவனங்கள் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறன. அதற்கான சாத்தியப்பாடுகளும் தென்படுவதாகவே படுகின்றன.



சரி அடுத்து தூசி அடுப்புக்களும் விறகடுப்புக்களும் மாற்றுத் தீர்வாகுமா? என யோசித்தால், எல்லா இடங்களுக்கும் எல்லோருக்கும் அது நடைமுறை சாத்தியமற்றது என்ற உண்மை அனைவருக்கும் தெரிந்ததே. அதனைவிட காட்டை அளித்து கட்டடங்களை வளர்த்து விட்டோம். விறகுகளும் விறகுக் காலைகளும் இப்பொழுது அரிதாகவே காணப்படுகின்றன.

எனவே இலங்கை ஒரு மனிதன் அன்றாடம் வாழ்வதற்கு அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பொருத்தமற்ற நாடாகவே காணப்படுகின்றது. எதிர்வரும் நாட்கள் எல்லா வகையிலும் மிகவும் நெருக்கடி மிகுந்த நாட்களாகவே அரசுக்கும் மக்களுக்கும் இருக்கப் போகிறது என்ற அச்சம் எல்லோரிடத்திலும் எற்பட்டுள்ளமை இயல்பானதே. ■

# பொருட்களின் விலையுயர்வு உளவியலையும் வாழ்வியலையும் சிதைக்கப் போகிறது




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போராட்டம் போல் முன்னெப்போதும் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை என்பது வெளிப்படையான செய்தி. அதற்காக முன்னைய அரசாங்கங்கள் நேர்மையாக, மக்களின் நலன் சார்ந்து செயற்பட்டு வந்திருக்கின்றது என்பதான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியாது. அன்றைய காலங்களிலும் மக்கள் போராட்டங்கள் நிகழ்ந்துதான் வந்திருக்கின்றன. ஆனால் இப்போது எண்ணிக்கையில் அதிகமான போராட்டங்களை சதாகாலமும் மக்களால் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலையை தற்போதைய அரசு உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

மிக அண்மையில் நாட்டின் பலபாகங்களிலும் இருக்கும் விவசாயிகள் தங்கள் நிலங்களிலும் தெருக்களிலும் பதாதைகளுடன் நின்று தாம் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குமான தீர்வினை அரசு பெற்றுத் தரவேண்டும் என்று போராட்டம் நடத்தியிருக்கின்றார்கள், தொடர்ந்து எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதியில் வடக்கு, கிழக்கு விவசாயிகள், மீனவர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டிப் போராட்டம் நடத்த இருக்கின்றார்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டம் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பேச்சுக்கள் சுமூகமாகாத நிலையில் மீண்டும் தொடரப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைவிட ஏற்கனவே தொடர்ந்து கொண்டிருக்கும் காணாமற் போனோர் தொடர்பிலான போராட்டங்கள், தமது சொந்த நிலங்களை இராணுவத்திடமிருந்து மீளப்பெறுதல் தொடர்பான போராட்டங்கள் என தொடர் போராட்டங்களை மக்கள் தங்கள் வசம் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் எந்தப் போராட்டங்களுக்கும் அரசு இதுவரை சுமூகமான தீர்வினை வழங்கவில்லை அல்லது வழங்க விரும்பவில்லை. தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருக்கும் நிலையில் மக்கள் மேலுமொரு போராட்டத்தினை முன் னெடுக்க வேண்டிய இக்கட்டான சூழலுக்கு உள்ளா கியிருக்கின்றனர். போராட்டங்கள் எதற்கும் அரசு முடிவு தராதநிலையில் புதிய போராட்டங்கள் முன் னெடுப்பதில் என்ன பயன் என்றொரு கேள்வி எழு கின்ற போதும் மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரத் தினை நெருக்கடியில்லாத நிலையில் நகர்த்திச் செல்வ தற்குத் தொடர்ந்தும் அரசுடன் போராடிக் கொண்டே தான்இருக்க வேண்டும்என்ற நிலையே காணப்படுகின்றது.

கொரோனாப் பெருந்தொற்றினைத் தொடர்ந்து நாளுக்கு நாள் அரசு பொருட்களின் விலையை அதிகரித்து வருகின்றது. பொதுவாகச் சொன்னால் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை பொருட்களின் விலையினை அரசு அதிகரித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது. பொருளாதார அமைப்பாக்கம் தொடர்பில் சரியான திட்டமிடலற்ற தன்மையே இதற்குக் காரணம். உலக பொருளாதார மாற்றநிலைகளைக் கொண்டு பொருட்களின் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்துவது இயல்பானதுதான், ஆனால் அது ஆண்டுக்கொரு தடவை பொருளாதார வல்லுநர்களின் ஆய்வினையும் ஆலோச னையினையும் அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப் பட்ட வரவு செலவுதிட்டத்தின் அடிப்படையில் மேற்கொள் ளப்படும் நடவடிக்கையாகவே அமைதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் மக்களின் வாழ்வாதாரம் எவ் வகையிலும் பாதிக்கப்படாத வகையில் மேற்கொள்வது தொடர்பிலேயே சிந்திக்கப்படும். மக்கள் தமது வருமானத்தினைக் கொண்டு அத்தகைய பொருட்களைக் கொள்வனவு செய்து தமது அன்றாட வாழ்க்கையினை நடத்தக் கூடியதாகவே அமைதல் வேண்டும். ஆனால் தற்போது பொருட்களின் விலை நிர்ணயத்தினை நோக்கும் போது நாட்டின் கடன் நெருக்கடியையும், அரசின் உள நெருக்கடியையும் மட்டும் கருத்தில் கொண்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் எதனையும் கருத்தில் கொள்ளாது அரசு செயற்படுவதாகத் தெரிகின்றது.

> **மக்கள் சாதாரணமான பொருள் விலைகளின் போதுகூடத் தமது வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பெரிதும் இடர்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எதிர்பார்த்திராத அளவிலான பொருள் விலையேற்றம் மேலும் பல நெருக்கடி நிலைக்கு உள்ளாவதற்கு வழியேற்படுத்தப் போகின்றது.**

உண்மையில் மக்கள் சாதாரணமான பொருள்விலைகளின் போதுகூடத் தமது வாழ்வாதாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு பெரிதும் இடர்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எதிர்பார்த்திராத அளவிலான பொருள் விலையேற்றம் மேலும் பல நெருக்கடி நிலைக்கு உள்ளாவதற்கு வழியேற்படுத்தப் போகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய சொந்த உழைப்பிலேயே தனது குடும்பத்தினைப் பராமரிக்க வேண்டியிருக்கின்றது. மேலை நாடுகளைப் போல் அரச உதவிகள் எதனையும் பெற்று வாழ்வாதாரத்தினை நடத்தும் நிலை இங்கு இல்லை. அதேவேளை வேலையில்லாப் பிரச்சினைகள் காரணமாக இடர்படும் குடும்பங்கள் பல இன்னும் இருக்கின்றது. அதனைவிடவும் வேலைக்கு ஏற்ப ஊதியம் கிடைக்காத நிலையும் காணப்படுகின்றது. இந்நிலையில் பொருளாதார முன்னனேற்றம் அல்லது வாழ்வாதாரத்தினை சரியான வகையில் முன்னெடுக்க முடியாத சூழலில் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் வன்முறைகள் விரவிக் காணப்படுவது பொதுவாக எல்லோரும் அறிந்த ஒன்றாகின்றது. பொருட்களின் சடுதியான உயர் விலையேற்றமானது தற்போது பெறும் வருமானத்தினைக் கொண்டு இலங்கையில் வாழும் எந்த சாமானிய மகனும் குடும்பத்தினை திருப்திகரமானதாகக் வழிநடத்த முடியாத நிலைக்கே இட்டுச் செல்லும். இது அவர்களின் உளவியலைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்குவதோடு குடும்பங்களுக்கிடையில் நெருக்கடி நிலையினை உருவாக்கி அமைதியான வாழ்வினை சீர்குலைத்துவிடும் ஒன்றாகவும் மாற்றம் பெறுவதற்குரிய சாத்தியங்களை ஏற்படுத்தும். கடந்தகாலங்களில் பத்திரிகைகளில் செய்திகளை பார்க்கும் போது பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு, நுண்கடன் நெருக்கடியால் குடும்பப்பெண் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு என்று அறியக்கிடைத்திருக்கின்றது. இத்தகைய செய்திகளை எதிர்வரும் காலத்தில் அதிகம் காணக்கிடைக்கும் போலவே இன்றை மோசமான பொருள் விலையேற்றம் குறிகாட்டுகின்றது.

பொருள் விலையேற்றத்துக்குப் பின்னான காலத்தில் சாதாரணமாக ஒரு குடும்பத்தினை நடாத்திச் செல்வதற்கு குறைந்தது ரூபா 25000 அதிகமாகத் தேவைப்படும் நிலையில் அத்தகைய பணத்தினை எவ்வாறு பெற்றுக் கொள்வது. வேலையில்லாப்பிரச்சினை, வேலைக்கேற்ப ஊதியமில்லாத பிரச்சினை, பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக விவசாயம் தொடக்கம், மேசன் தொழில், கடற்றொழில், போன்ற இதர தொழில்களை மேற்கொள்ளமுடியாது ஒவ்வொருவரும் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் பொருட்களை விலைகொடுத்து வாங்கக் கூடிய வல்லமை இல்லாமல் போகும் சூழல் ஏற்பட்டுட்டுள்ளது. இதனால் பட்டினி வாழ்வு தலைதூக்கத் தொடங்க நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களை ஏற்படுத்த வழி சமைக்கப்போகின்றது. ஏற்கனவே இருக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாத இன்றைய சூழலில் தொடர்ந்து எதிர்ப்படப்போகும் குற்றச் செயல்கள் மேலும் சமூகத்தில் நெருக்கடி நிலையினை ஏற்படுத்தப் போகின்றது. இவை எல்லாம் ஆட்சியதிகாரத்தில் இருக்கும் தலைமைகளுக்கு எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்தப்போவதில்லை. எல்லாப் பிரச்சினைகளையும் எல்லாச் சுமைகளையும் மக்கள் மீது ஏற்றி விட்டு குடும்பத்தோடு குதூகலமாக இருக்கலாம் என்று அரசு எண்ணுகின்றது போல் தோன்றுகின்றது.

இந்நிலையில் அமெரிக்கா போய் வந்தவுடன் என்ன ஞானம் பிறந்ததோ தெரியவில்லை. நாட்டினை சுபீட்சமாக்குவதற்கு எல்லோரும் தயாராக இருங்கள் என்று தனது கட்சி அங்கத்தவர்களிடம் தெரிவித்திருக்கின்றார் நாட்டின் தலைவர். நாட்டினை பல்வேறு இக்கட்டுக்குள் தள்ளிவிட்டு எவ்வாறு நாட்டினை சுபீட்சமாக்கப் போகின்றார் என்பது புரிவதாய் இல்லை. நாடு என்பது அவரது கருத்துப்படி எது என்பதும் தெரியவில்லை. வீடே தனது நாடு என்று எண்ணுகின்றாரோ என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

பொருட்களின் விலையேற்றம் தொடர்பிலான நியாயப்படுத்தலை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கு பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் ‘வயிறு பற்றி சிந்திக்கும் போது நாடு பற்றியும் சிந்திக்க வேண்டும்’ என்று மக்களை நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வாறான வேண்டுகோள் மக்கள் தங்கள் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாது நாட்டினை வளமாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்ற சாராம்சமாகவே படுகின்றது. ஒருவன் தனது குடும்பம் பட்டினியில் கிடக்கும் போது அவர்களுக்கு தன்னால் எதுவும் செய்ய முடியவில்லையே என்ற வேதனையுடன் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவனால் வேறெதனையும் சிந்திக்க முடியுமா? உண்மையில் குறித்த பொதுச் செயலாளர் முதலில் தனது வீட்டைப்பற்றிச் சிந்திப்பதனை விடுத்து நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும் சிந்திப்பதற்குத் தயாராக வேண்டும். தங்களுடைய வங்கிக் கணக்குகளை அதிகரிக்கச் செய்வதற்கும், சொத்துக்களை வாங்கிக் குவிப்பதற்குமான குறிப்பான நோக்கங்களை விடுத்து பொதுத்தளத்தில் மக்கள் பற்றிச் சிந்திப்பதற்கு முன்வரவேண்டும். மக்களைப் பசித்திருக்கச் சொல்லிவிட்டு தங்களுடைய சுய இலாபங்கள் பற்றிச் சிந்திப்பது எவ்வளவு முட்டாள் தனமானது. பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்துதான் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று சிந்திப்பது எத்தகைய மனநிலைக்குரியது. சரியான வகையில் திட்டமிட்டு குறித்த நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களின் கருத்துக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் போது நாட்டின் பல்வேறு நெருக்கடிகளை குறைப்புச் செய்ய முடியும். அதேபோல வரவு செலவுத் திட்டத்தினை சரியானவகையில் ஒழுங்கமைக்கப்பட்ட பங்கீட்டுடன் மேற்கொள்ளும் போது வீணாண விரயங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். அவற்றினையெல்லாம் விட்டுவிட்டு மக்களை பசித்திருக்கும்படி கேட்பதோ, பொருட்களின் விலையேற்றத்தினை இரவோடு இரவாக அதிகரிப்புச் செய்வதோ நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்திற்கு உதவக்கூடியதாக இருக்காது.

அரசு மக்களின் வாழ்வாதாரச் சுமைதொடர்பில் கூடிய கவனங் கொண்டு செயற்படவேண்டிய காலத்திலேயே இருக்கின்றது. வாழ்வாதாரச்சுமை அதிகரிக்கும் என்றால் ஏற்கனவே குறிப்பிட்டது போல மக்கள் உள நெருக்கீட்டுக்கு உள்ளாகுவதனையோ அதனால் சமூகத்தில் பாரிய நெருக்கடி நிலை உருவாகுவதனையோ தடுத்துவிட முடியாது. நாட்டினை எப்போதுமே சுபீட்சத்துக்குக் கொண்டுவர முடியாது. மக்களின் மனத் திருப்தியே நாட்டினை வளமானதாக மாற்றுவதற்குப் பெரிதும் துணையுடையதாக இருக்கும் என்பதனை அரசும் அரச தலைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

■

அவதானி





# மீண்டும் பிரஜைகள் குழுக்களை உயிர்ப்பித்தல் வேண்டும்!

மாமாவின் கையை வெட்டி வீசிவிட்டு தற்கொலைக்கு முயன்ற மருமகன். கிளிநொச்சியில் சம்பவம். காரணம் காணித் தகராறு.

ஆறு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி யுடைய போதை மாத்திரை வைத்திருந்த நபர் ஏழாலை யில் கைது. காரணம் பேராசை.

மட்டக்களப்பில் மாத்திரம் கடந்த 2020 ஆம் ஆண்டில் 150 பேர் தற்கொலை. காரணம் மன அழுத்தம்.

மட்டக்களப்பில் பண்ணை ஒன்றின் காவலாளி சடலமாக மீட்பு. காரணம் தகராறு.

பருத்தித்துறை புனித நகர் பிரதேசத்தில் வன் முறைக் கும்பல் அட்டகாசம். காரணம் : சமூகத்தினுள் முரண்பாடுகள்.

மாதகலில் மீனவரின் படகை எரித்தது ஒரு கும்பல். காரணம் தனிப்பட்ட கோபம்.

திருகோணமலை தனியார் விடுதியில் நஞ்சருந்திய நிலையில் இரண்டு பெண்கள் மீட்பு.

அரியாலையில் ஒரு வீட்டுக்குத் தீவைத்த மர்ம நபர்கள்.

கிளிநொச்சிப்பிரதேசத்தில் சிறுவர்மீது பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிப்பு.

கிளிநொச்சி மருத்துவமனைக்குள் புகுந்து ஏற்கனவே வாள்வெட்டில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர் மீது மீண்டும் வாள் வெட்டுத்தாக்குதல்.

அப்பளம் எடுத்துச்சாப்பிட்டதற்காக ஐந்து வயதுக்குழந்தையின் வாயில் நெருப்பால் சுட்டுக் காயப்படுத்திய தாய். இதற்குக்காரணம் கண்டிப்பு என்பதா..? குரூரம் என்பதா..?

இச்செய்திகள் யாவும் கடந்த சில நாட்களுக்குள் வடக்கு - கிழக்கில் தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து கிடைத்துள்ள செய்திகள்.

> **ஈழத்தமிழ் மக்கள் கொடிய போர்க் காலத்தைக் கடந்து வந்தவர்கள். ஆனால், தமிழ்ச் சமூகத்துள் இன்னமும் ஆளை ஆள் தாக்கும் துன்புறுத்தும், மனஅழுத்தங்களினால் தற்கொலைக்குத் தயாராகும் மனவக்கிரத்தினால் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் மற்றும் ஒரு வடிவத்துள் போர்க் காலம் இன்னமும் தொடருகின்றது.**

ஈழத்தமிழ் மக்கள் கொடிய போர்க்காலத்தைக் கடந்து வந்தவர்கள். ஆனால், தமிழ்ச் சமூகத்துள் இன்னமும் ஆளை ஆள் தாக்கும், துன்புறுத்தும், மனஅழுத்தங்களினால் தற்கொலைக்குத் தயாராகும், மனவக்கிரத்தினால் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் மற்றும் ஒரு வடிவத்துள் போர்க்காலம் இன்னமும் தொடருகின்றது.

இக்காலத்தில் எறிகணை வீச்சுக்களோ, குண்டு வீசும் தாக்குதல்களோ இல்லை. ஆனால், ஆளையாள் தாக்கிக் கொல்லும், படுகாயப்படுத்தும் அல்லது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் செயல்கள்தான் தொடருகின்றன.

இதனைச்செய்பவர்கள் இலங்கை அரசின் ஆயு தப்படையினரோ அல்லது பொலிஸாரோ அல்ல. தமிழர்களே சக தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் வன்முறைகள்.

இந்தப்பின்னணிகளுக்கு மத்தியில் இலங்கை அரசு, அத்தியாவசிய உணவுப்பொருட்களான பால் மா, பாண் மற்றும் எரிவாயு உட்பட எரிபொருளின் விலையை உயர்த்தியுள்ளது. அதனால் பதுக்கல் வர்த் தகமும் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம். அதனால் என்ன நடக்கும்..? திருட்டும், கொள்ளையும் பெருகும்.

சமகாலத்தில் சமூகம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடிகளிலிருந்து மீண்டு, ஆரோக்கியமான சமூகம் தோன்றவேண்டுமாயின், ஊருக்கு ஊர் பிரதேசத்திற்கு பிரதேசம் விழிப்புணர்வுப் பிரஜைகள் குழுக்கள் தோன்றவேண்டும்.

முன்னர் போர் நெருக்கடி நீடித்த காலத்தில் பல பிரஜைகள் குழுக்கள் வடக்கிலும் கிழக்கிலும் அர்ப் பணிப்புடன் இயங்கின. போர் நிறுத்த கண்காணிப் புக்குழுவும் இயங்கியது.

போராளிகளுக்கும் ஆயுதப்படைகளுக்கும் மத்தியில் கத்திமீது நடப்பது போன்று முடிந்த வரையில் சமாதா னத்தை நிலைநாட்ட அந்தக் குழுக்கள் பாடு பட்டன.



இந்தப்பத்தியின் தொடக்கத்தில் சொல் லப்பட்ட துன்பியல் நிகழ்வுகள் இரண்டு வெவ்வேறு தரப்புக ளுக்கு மத்தியில் நடக்கவில்லை.

ஒரே மொழி பேசும் ஒரே இனத்தின் மத்தியில் தான் நடக்கின்றன.

அவ்வாறாயின் இந்த, சமகால நெருக்க டிகளை நிறுத்த அல் லது தணிப்பதற்கு என்ன செய்யலாம்...? அதற்குப் பொலிஸாரை மாத்திரம் நம்பியி ருப்பதா..?

குற்றச்செயல்களினால் சந்தேகத்தின்பேரில் கைதானவர்களும் பொலிஸ் காவலில் இறந்திருக் கின்றனர் என்பதையும் மறப்பதற்கில்லை.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் முன்னர் இணக்க சபைகள், சமாதானக் குழுக்கள் இயங்கின. குடும்பங்களுக்குள் ஏற்படும் காணி - சொத்துத் தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு அவை முன்வந்தன.

இலங்கையில் தமிழ்ப்பிரதேசங்களில் அன்றாடம் நாம் காணும் காட்சிகள் ஆரோக்கியமான சமூகத்திற் கான அறிகுறியல்ல. இங்கு சமூக நலன் விரும்பிகளாக இருப்பவர்கள் பலர் ஆசிரியர்கள், அதிபர்களாகவும் பொது அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்களாகவும், ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகளில் அறங்காவ லர்களாகவிருப்பவர்கள், ஊடகவியலாளர்கள், கலை ஞர், படைப்பாளிகளாகவும் முன்னாள் பல்கலைக்கழக பேராசிரியர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்கள் மத்தியிலிருந்து மீண்டும் பிரஜைகள் குழுக்கள் தோன்ற வேண்டும். அவை சமூக விழிப் புணர்வு வேலைத்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தல் வேண்டும்.

சமூக விரோதச்செயல்களில் ஈடுபடுபவர்கள் கைதானால், அதற்குரிய தண்டனையை சிறையில் கழித்துவிட்டுத்திரும்பி நல்லவர்களாக மாறிவிடுவார்கள் என்று மாத்திரம் சமூகம் நம்பியிருக்க இயலாது.

பிரஜைகள் குழுக்கள் தத்தம் பிரதேசங்க ளில் குடும்பங்களிடையேயான ஒற்றுமை, சமூக ரீதியிலான நல்லிணக்கம் முதலான வற்றில் அடிக்கடி சந்திப்புகளையும் கலந்து ரையாடல்களையும் நடத்தல் வேண்டும்.

முப்பது ஆண்டு கால கொடிய போர்க் காலத்தை கடந்து வந்துள்ளது எமது தமிழ் சமூகம் என்பதை மறந்துவிடாமல், குறிப் பிட்ட போரின் இறுதிக்காலத்தில் பிறந் துள்ள குழந்தைகளுக்குத் தற்போது பன்னிரண்டு வயதா கிறது என்பதையும் கவனத்தில் கொண்டு, இந்தப் பிள்ளைகளின் எதிர்காலமாவது சுபீட்சமாக அமையவேண்டும் என்பதற்காகவாவது மீண்டும் பிரஜைகள் குழுக்கள் உயிர்ப்புடன் இயங்கத் தொடங்கவேண்டும்.

“ நாளை நமதே... நாளை நமதே...
தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம்
ஓர் வழி நின்று நேர் வழி சென்றால்
நாளை நமதே...” என்று தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இந்தப் பிரஜைகள் குழுக்கள் பாடவேண்டிய காலத்தின் விளிம்பில் நிற்கின்றோம்.

வீட்டில் உணவுக்காகப் பொரித்த அப்பளத்தை குழந்தை எடுத்து உண்டால், அது மிகப்பெரிய குற் றமா..? அதற்காக அதன் மென்மையான இதழ்களில் சூடுவைத்து ஒரு தாய் துடிதுடிக்கச்செய்கிறாளென்றால், அதற்காக அவளுக்குச் சட்டப்படி தண்டனை கொடுத்துவிட்டால் மாத்திரம்போதுமா..? அது ஏதோ ஒரு குடும்பத்திற்குள் நிகழ்ந்த சம்பவம் என்று சமூகம் வெறும் பார்வையாளராக மாறிவிடலாகாது.

இவ்வாறு குரூரமாக வளர்க்கப்படும் குழந்தைகள் தான் எதிர்காலத்தில் உளவியல் சிக்கல்களுக்கு ஆளா கும். அதுவே சமூக நோயாக மாறிவிடும்.

எனவே சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளில் பிரஜைகள் குழுக்கள் அர்ப்பணிப்புடன் இயங்கவேண்டியிருக்கிறது.

சமகால கோவிட் பெருந்தொற்றினால் ஏராளமான உயிரிழப்புகள் நேர்ந்துள்ளன. அவ்வாறு தங்கள் குடும்ப உறவுகளை இழந்து தவித்துள்ளவர்களை ஆற்றுப்படுத்தும் பணிகளிலும் இந்தப் பிரஜைகள் குழுக்கள் ஈடுபடமுடியும்.

சமூகத்தின் மத்தியில் மலிந்திருக்கும் குரோதங்களைக் களைவதற்கு பேச்சுவார்த்தைகள்தான் அவசியமானது. அந்தப்பேச்சுவார்த்தைகள் கோபத்தைத் தணிக்கும்.

அயலானை நேசிக்கும் எண்ணம் மனதில் துளிர்விட்டால், அயலானின் சொத்துக்களை எரித்து சேதமாக்கும் எண்ணம் வராது. தமிழ்ப்பிரதேசங்களில் பிரஜைகள் குழுக்களை அமைப்பதற்காக நல்லெண் ணம் படைத்தவர்கள் அனைவரும் ஒன்றிணையே வேண்டிய காலம் கனிந்துள்ளது. ■

# மலையக மக்களின் நிலவுரிமை ஏன் இன்னும் கவனத்தில் கொள்ளப்படவில்லை?



போ.சந்திரமதி
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

> **“ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டக் காணிகள் அனைத்தும் அரசின் பொறுப்பிலேயே காணப்பட்டன. இக்காணிகளில் விவசாயத்திற்கு உதவாத ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே தொழிலாளர்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. சில குடியிருப்புகள் அவர்களின் வேலை இடத்திற்கு நீண்ட தூரம் பயணத்துக்குரியதாகவும் அமைந்திருந்தன.”**

மனிதனின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் என்பன காணப்படுகின்றன. இவ் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் போதுதான் வாழ்வின் அடுத்த கட்டத்தைப் பற்றி சிந்திக்க முயற்சிப்பார்கள். 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட மலையக மக்கள் இன்று வரையில் தமக்கென்று எவ்வித நிலவுரிமை, வீட்டுரிமை மற்றும் முகவரி அற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

அனைத்துத் தேவைகளுக்கும் அடிப்படையான விடயமாகப் பொருளாதாரம் காணப்படுகின்ற போதும் மலையக மக்களுடைய பிரச்சினையாக ஆயிரம் ரூபாய் சம்பளம் பற்றி மட்டுமே பேசப்படுகின்றது. ஆனால் அவர்களின் இருப்பிடம், வாழ்வு முறை பற்றிய விளக்கம் பெரும்பாலான மக்களுக்குப் புரியவில்லை.

மலையக மக்கள் வாழக்கூடிய லயம் வீடுகள் அவர்களுக்கு உரிமையானது என ஆவணப்படுத்தப்படவில்லை என்பதோடு பாதுகாப்பு அற்றதாகவும் காணப்படுகின்றது. மழை காரணமாக ஏற்படக் கூடிய வெள்ளப்பெருக்கு, மண் சரிவு மற்றும் புயல் காற்று போன்ற இயற்கை அனர்த்தங்களால் பெரும்பாலான மக்கள் பாதிக்கப்பட்டு தமது சொத்து மற்றும் இருப்பிடத்தை இழந்து அகதிகளாக நிற்கின்ற நிலையும் உண்டு.

சமீபகாலமாக லயம் குடியிருப்புக்களில் ஏற்படக்கூடிய தீ விபத்துக்களாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு வீட்டில் ஏற்படக்கூடிய தீ விபத்து, லயம் தொடர் வீடுகள் என்பதால் பக்கத்து வீடுகளுக்கும் தீ பரவி குறிப்பிட்ட லயம் அமைப்பில் காணப்படக்கூடிய அனைத்து வீடுக ளும் அங்குள்ள மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ் இருபத்தோராம் நூற்றாண்டிலும் இரு வீட்டிற்கு ஒரு சுவர் என்ற நிலையி-லேயே மலையக மக்களின் வாழ்க்கை நகர்கின்றது.

1815 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட மலையக மக்கள் தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற பயிர் செய்கையில் ஈடுபட்டனர். அக்காலப்பகுதியில் அனைத்துத் தோட்டங்களிலும் லயம் காம்பிராக்களே காணப்பட்டன. இது 10-12 காம்பிராவும் ஒரு குசினியும் ஒரு வராந்தாவும் கொண்டது. இதுவே இவர்களின் காணியாகவும் வீடாகவும் இருந்து வந்தது.

1985 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கம் நாடற்ற மலையக மக்களுக்கு ஒரு சத்தியக் கடதாசியை வழங்கியதன் மூலம் இலங்கையர் என்ற பிரஜா உரிமையை வழங்கியது. அதனூடாகவே தற்போது தோட்ட மக்கள் இலங்கையர் என்ற அந்தஸ்தைப் பெற்றனர். அன்றிலிருந்தே தோட்ட மக்களின் காணி, வீட்டு உரிமை பற்றி பேசப்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலத்தில் பெருந்தோட்டக் காணிகள் அனைத்தும் அரசின் பொறுப்பிலேயே காணப்பட்டன. இக்காணிகளில் விவசாயத்திற்கு உதவாத ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே தொழிலாளர்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. சில குடியிருப்புகள் அவர்களின் வேலை இடத்திற்கு நீண்ட தூரம் பயணத்துக்குரியதாகவும் அமைந்திருந்தன.

1992 ஆம் ஆண்டிலிருந்து இக்காணிகள் சுமார் 23 கம்பனிகளுக்கும் அரச பெருந்தோட்டம் (SLPC), மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (JEDB) போன்றவற்றின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான காணிகள் தனியார் வசமே உள்ளன. ஆனால் பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் 80% காணிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. இந்நிலையில் தோட்ட மக்களுக்கு கடந்த அரசாங்கங்கள் காணி உரிமையை முறையாகப் பெற்றுக் கொடுக்காதது வேதனைக்குரிய விடயமாகும்.



இருப்பினும் மலையக மக்களின் காணி உரிமையையும் தனி வீட்டு உரிமையையும் மையப்படுத்தி அந்தந்தச் சந்தர்ப்பங்களில் பலர் பல வேலைத்திட்டங்களை முன் வைத்துள்ளனர். இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்தன 1977 ஆம் ஆண்டு தோட்ட மக்களின் 7 பேர்ச் காணி தனி வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்தார்.

அதனை தொடர்ந்து அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் 2 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, 3 ஆவது ஜனாதிபதி டீ.பி. விஜயதுங்க, 4 ஆவது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருடன் இணைந்து மலையக மக்களின் காணி, வீட்டு உரிமை, தொடர்பில் குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மலையக மக்களின் காணியுடன் கூடிய வீடு என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போது அதற்கு அவர், தனி வீடு இல்லை மாடி வீடு தான் தீர்வு என்று கூறினார். மலையகத்தின் தரைத் தோற்ற அமைப்பில் மாடி வீடு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது அவரால் கவனத்தில் எடுக்கப்படவில்லை. ஏற்கனவே மாடி வீடுகள் மலையகத்தில் அமைக்கப்பட்ட போதும் அவை வெற்றி அளிக்கவில்லை என்பதும் கவனத்துக்குரியது.

இந்நிலையில் 6 ஆவது ஜனாதிபதிக்கான தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்படி மைத்திரி அரசு வெற்றி பெற்றதனால் மலையகத்தில் காணி உரித்துடன் தனிவீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறாக பல்வேறு கட்டங்களைக் கடந்து மலையக மக்களுக்கான பசுமைப் பூமி திட்டம் தொடர்பான பேச்சுக்கள் தற்போது வலுவடையத் தொடங்கின. ஏற்கனவே கடந்த காலங்களில் மலையகத்தில் இவ்வாறான பல்வேறு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவை முறையாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுக்கப்படாமையினால் அவை வெற்றியளிக்கவில்லை.

“மலையக மக்களின் இந் நிலவுரிமை தொடர்பில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மலையகப் பிராந்திய செயலாளரும் மாத்தளை உக்குவளை பிரதேச சபையின் உறுப்பினரும் மாஃ எல்கடுவ. தமிழ்.மகா. வித்தியாலயத்தின் ஆசிரியருமான டேவிட் சுரேன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மலையக மக்களுடைய நிலவுரிமை தொடர்பாக பேசும் போது 12 மாவட்டங்களில் பரந்து விரிந்திருக்கும் பெருந்தோட்ட மக்கள் இன்று ஓரளவு வளர்ச்சி அடைந்துள்ளனர். இருப்பினும் அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதாவது மலையக மக்களுக்கு நாட்டின் நிலப்பரப்பில் சொந்த நிலம் இருக்கிறதா? என்ற வினாவை எழுப்பும் போது அவர்களுக்கு அது வழங்கப்படவில்லை. அவர்கள் இன்னும் லயத்து வாழ்க்கைக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.”

இம்முறையில் இருந்து மீள பல குரல்கள் எழுப்பப்பட்டன. கடந்தகால அரசாங்கங்களால் முன் முயற்சியாக லயத்து வாழ்வில் இருந்து விடுபட தனிவீடு, இரட்டை கோடஸ் மற்றும் மாடி வீடு போன்ற திட்டங்களைச் செய்துள்ளனர். இதில் மாடி வீடு திட்டத்தை தவிர ஏனைய திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டம் இன்னும் விருத்தி அடைய வேண்டும்.

“இந்த மலையகத்தில் பிறந்து வளர்ந்து மலையக அமைப்பைக் கட்டி வளர்கின்ற புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மலையகப் பிராந்திய செயலாளர் என்ற அடிப்படையில் மலையக மக்களுக்கு கிராமிய அடிப்படையிலான குடியிருப்பு திட்டம் அமைக்கப்பட வேண்டும்” என்ற கருத்தை முன்வைக்கிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது கிராமிய குடியிருப்பு திட்டம் எனும் போது உதாரணமாக ஒரு கிராமத்தில் வாழக்கூடிய 70 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 20 பேர்ச் இட ஒதுக்கீடு அடிப்படையில் வழங்க வேண்டும். இவ்விடயம் ஏற்கனவே சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது குத்தகைக்கு வழங்கப்படும் பெருந்தோட்ட நிலங்களை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு மீள ஒப்படைக்கும் போது பெருந்தோட்ட மக்களுக்குக் குடியிருப்பு அமைத்துக் கொள்வதற்கு நிலம் வழங்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு உள்ளது.



இதற்கமைய 20 பேர்ச் அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு நிலம் வழங்கப்பட்டு ஒரு முழுமையான கிராமிய குடியிருப்புத் திட்டம் ஒன்றினை புதிய ஜனநாயக மாக்சியக் கட்சியினர் முன்மொழிந்துள்ளனர். வைத்திய சாலை, நூலகம், உபதபால் நிலையம், வழிபாட்டுத் தலம், பாதைக் கட்டமைப்பு, இதர விடயங்களை உள்ளடக்கிய கிராமிய குடியிருப்புத் திட்டமே அது. இதுதான் அரசாங்கம் எந்த ஒரு குடிமக்களையும் வாழ வைக்கும் முறையாகும். இதனை அரசாங்கத்தால் செய்ய முடியும்.

மலையகத்தில் இதற்கான நிலப்பரப்பு உள்ளது. பெருந்தோட்டங்களில் பயிரிடப்படாத நிலங்கள் பெரும்பாலும் உள்ளது. அவை தற்போது அதிகரிக்கின்றது. காரணம் கம்பனிகள் நிறைய பெருந்தோட்டங்களைக் கைவிடுகின்றன. இதனால் நிலங்கள் பற்றைக் காடுகளாக உள்ளது. இவ்வாறான நிலங்களைப் பொருத்தமான முறையில் மக்களுடன் கலந்துரையாடி கிராமியக் குடியிருப்புத் திட்டத்தை மேற்கொள்ளும் போது பெருந்தோட்ட மக்களின் எதிர்காலத்தை சிறப்பாக மாற்றியமைக்கலாம்.

2.5 லட்சம் குடும்பங்கள் என்றாலும் கிட்டத்தட்ட 11 ஆயிரம் ஏக்கர் நிலங்களே தேவைப்படும். அந்நிலங்கள் மலையகத்தில் உள்ளது. வெறுமனே நிலங்களை மாத்திரம் வழங்காமல் கிராமிய குடியிருப்புத் திட்டத்தை அமைக்க அரசாங்கத்தால் உதவ முடியும்.

மலையக மக்களின் அடிப்படைத் தேவையாக இந்த நில உரிமை உள்ளது. ஆனால் அவை தொடர்பான கலந்துரையாடல், எழுச்சிகள், போராட்டங்கள் மக்கள் மத்தியில் குறைவாகவே உள்ளது. இருப்பினும் சில போராட்டங்கள் நடைபெற்றது. அதனை மேலும் இளைஞர்கள் முன்கொண்டு செல்ல வேண்டும்.

இந்த, கிராமியக் குடியிருப்புத் திட்டம் வெறுமனே பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு மட்டுமில்லை அங்கு வேலை செய்கின்ற வேலை செய்யாத ஓய்வு பெற்றவர்களையும் இணைத்தே மேற் கொள்ளப்பட வேண்டும்.

மலையக மக்களின் குடியிருப்புகளை அமைத்து அதற்கு பிறகு மீதமாக கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 33 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் காணப்படும். அவற்றோடு 22 பிராந்திய கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் இருந்து 3 லட்சம் ஏக்கர் என்ற அடிப்படையில் பெற்று அதனை மலையக மக்களின் பொருளாதார தேவை கருதி அவர்களுக்கு நீண்ட நாள் குத்தகைக்கோ அல்லது உரிமை உடையதாக வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் போது இது மலையக மக்களின் பொருளாதாரத்தை மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரத்தையும் ஊக்குவிக்கும்.

கிராமிய கம்பனிகளுக்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால் நிலங்கள் வழங்கப்பட முடியாது என ஒரு சாட்டினைத் தெரிவிக்கலாம் ஆனால் கடந்த மாதம் 6 ஆம் திகதி இடம் பெற்ற கெபினட் பேச்சில் 1500 ஏக்கர் உட்பட்ட நிலம் தனியாருக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளதாக அறிய முடிகின்றது. இது சாத்தியம் எனில் அதே முறையை பயன்படுத்தி ஏன் மலையக மக்களுக்குப் பொருளாதார முயற்சிக்கு ஓர் ஏக்கர் அடிப்படையில் நிலம் வழங்க முடியாது என்ற கேள்வி எழுகின்றது.

இது மலையக மக்களின் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல இதனால் வழங்கப்படும் வரி மூலம் அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரம் வளர்ச்சியடையும் மலையக மக்களின் வாழ்வில் அபிவிருத்திப் பொருளாதார வளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்பட்டு ஓர் நாகரீகமான வளர்ச்சியடைந்த சமுதாயத்தை உருவாக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதனைக் கவனத்தில் கொள்ளலாம்.

பல வருடங்களாக மலையகத்தில் வாழக்கூடிய இம் மக்களுக்கான நிலவுரிமை என்பது தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை பிரச்சினையாகும். ஆகவே மலையக மக்களின் நிலவுரிமை தொடர்பான கருத்துக்களை அரசாங்கத்திடம் கொண்டு சேர்த்து அதனைத் தேசிய மயமாக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். ■

# தொடரும் அநீதி
# நீதி மறுப்பும் கோரலும்

கருணாகரன்

**இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.**
**- ஆசிரியர்**

*நீ யார்? நான் யார்? நாம் யார்? ஒடுக்குமுறையின் முன்னே நாம் ஒன்று. விடுதலையில் நாம் வேறா?*
*14*

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வடபுலத்தினரால் கையாளப்பட்டதைப்போல வடக்கு நோக்கி வந்த அல்லது வடக்கிலிருக்கும் மலையகத் தமிழர்களையோ இந்திய வம்சாவழி மக்களையோ இன்று முழுமையாகக் கையாள முடியாது. அதாவது வெறும் கூலிகளாக நடத்த முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது. சிறார்களை வேலைக்கு அமர்த்தவும் முடியாது.

இதற்குக்காரணம், முன்னரே நாம் குறிப்பிட்டுள்ளதைப்போல படிப்படியாகத் தங்களுக்கான நிலத்தைப் பெற்றுக் கொண்டதும் இடதுசாரிகளின் மென்னாதரவு உட்பட இயக்கங்களின் ஆதரவு கிடைத்ததுமாகும். இன்னொன்று, பலத்த போராட்டங்கள், கடினமான முயற்சிகளின் வாயிலாக மெல்ல மெல்ல இவர்களுடைய அடுத்த தலைமுறையினர் கல்வியைப் பெற்றதும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டதுமாகும்.

இது சிந்திக்கவும் சுயமாக நிற்கவும் கூடியதொரு சமூக வளர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும் ஒட்டு மொத்த சமூகத்தினரும் இந்த வளர்ச்சிக்குட்பட்டனர் என்றில்லை. இருந்தாலும் இந்தச் சமூகத்திற்குள் இத்தகைய ஒரு வளர்ச்சி நிலை சிறிய அளவிலேனும் உருவாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வளர்ச்சியை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதில் வடக்கு வாழ் சமூகத்தினருக்கு உளச் சிக்கலாகவே இருந்தது. இதனால் தங்களால் முடிந்த அளவுக்கு இந்தச் சமூகத்தினரைத் தொடர்ந்தும் ஒடுக்கினர்.

1. நகர எல்லைக்கு அப்பால் இந்த மக்களுடைய குடியிருப்புகளைத் தள்ள முயற்சித்தனர். இந்த மக்களின் குடியிருப்புகளைப் பட்டியலிட்டு, அவற்றின் அமைவிடம் எங்கே உள்ளது? அவை எத்தகைய நிலையில் உள்ளன? என்பதை அவதானித்தால் இதன் உண்மை தெளிவாகப் புரியும்.

2. கோயில்கள், பொது நிறுவனங்கள், அமைப்புகள் போன்றவற்றில் இவர்களுக்கான உரிமையையும் இவர்களுடைய பிரதிநிதித்துவத்தையும் இல்லாமற் செய்ய முயற்சித்தனர். அது இயலாதவிடத்து முடிந்தவரையில் அதைக் குறைக்க முற்பட்டனர். வன்னியில் உள்ள கோயில்களின் விவரங்களைத் திரட்டி, அவற்றில் யார் யாரெல்லாம் தலைமைப் பொறுப்பில் உள்ளனர். இந்த மக்களுக்கு இவற்றில் வழங்கப்பட்டுள்ள இடம் என்ன? அது எவ்வளவு என்று பார்க்கலாம். அதைப்போல வன்னி மாவட்டங்களில் உள்ள அரசுசார் பொது அமைப்புகள், அரசு சாராத அமைப்புகள் போன்றவற்றில் இவர்களுக்கான இடம் எந்தளவில் உண்டு? அதற்கு மேல் செல்ல முடியாததற்கான காரணம் என்ன? என இரண்டு பக்கத்தினரையும் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

3. நீர்ப்பயன்பாட்டிலிருந்து - பாசன நீர்ப்பாவனையிலிருந்து அகற்றினர். குளமும் நிலமும் தமக்கே தவிர, வந்தேறிகளுக்கில்லை என்ற மனப்பாங்கின் வெளிப்பாடே இது. இதை எதிர்த்துக் குரல் எழுப்பவோ இதைக்குறித்துக் கேள்வி கேட்கவோ முடியாத நிலையே இன்றளவும் உள்ளது. அப்படிக் கேள்வி எழுப்பப்பட்டாலும் அதற்கு உரிய பதில் எதுவும் எவரிடமிருந்தும் கிடைக்கப் போவதில்லை.

4. கல்வி மூலமாகப் பெற்ற உத்தியோகம் மற்றும் பதவி நிலைகளில் பாரபட்சமாக நடத்தினர். முடிந்தளவுக்கு ஓரம்கட்டினர். தவிர்க்க முடியாமல் இவர்களை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் சமூக அடிப்படையிலான மனப்பாங்கில் புறக்கணித்தனர். பாரபட்சம் காட்டி நடத்தினர். முடிந்தளவுக்கு இவர்களை பின்தங்கிய பிரதேசங்களை நோக்கித் தள்ளினர். அல்லது தனிமைப்படுத்தி நெருக்கடிக்குள்ளாக்கினர். அண்மைக்காலத்திற்கூட இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கங்கே தொடர்ச்சியாக அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

5. வணிக ரீதியாக வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகளைத் தடுத்தனர். வர்த்தகர் சங்கங்களில் இதனை நன்றாக அவதானிக்கலாம். வன்னி மாவட்டங்களிலும் சரி, யாழ்ப்பாணத்தில் உள்ள பல வர்த்தக சங்கங்களிலும் இந்த மக்களின் பிரதிநிதிகள் என்போர் விரல் விட்டு எண்ணி விடக்கூடிய அளவில் அருந்தலாகவே உள்ளனர். அதுவும் மிகப் பிந்திய அண்மைக்காலத்தில்தான் கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் சிறிய அளவிலான பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது. அதிலும் இவர்கள் எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாதவர்களாகவே உள்ளனர். இதனால் எதையும் அனுசரித்துப் போக வேண்டிய நிலையே தொடர்கிறது.



> **கல்வி மூலமாகப் பெற்ற உத்தியோகம் மற்றும் பதவி நிலைகளில் பாரபட்சமாக நடத்தினர். முடிந்தளவுக்கு ஓரம்கட்டினர். தவிர்க்க முடியாமல் இவர்களை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் சமூக அடிப்படையிலான மனப்பாங்கில் புறக்கணித்தனர். பாரபட்சம் காட்டி நடத்தினர். முடிந்தளவுக்கு இவர்களை பின்தங்கிய பிரதேசங்களை நோக்கித் தள்ளினர். அல்லது தனிமைப்படுத்தி நெருக்கடிக்குள்ளாக்கினர். அண்மைக் காலத்திற்கூட இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கங்கே தொடர்ச்சியாக அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.**

6. அரசியலில் உரிய பிரதிநிதித்துவம் மறுதலிக்கப்பட்டது. அல்லது தந்திரோபாய ரீதியாக தமது அரசியல் வேட்கைக்கு இந்த மக்கள் பலியிடப்பட்டனர்: பாவிக்கப்பட்டனர். 2009 வரையில் இவர்கள் எத்தகைய அரசியல் விடயங்களிலும் தனித்தோ கூட்டாகவோ செயற்படவும் இல்லை. தீர்மானம் எடுக்கவும் இல்லை. அதுவரையிலும் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியுமே இவர்களுடைய தலைவிதியையும் தீர்மானித்தது. பின்பு இயக்கங்களின் காலத்தில் இயக்கங்களுடன் இணைந்து நின்றனர். அதில் பணியாற்றினர். அவ்வளவுதான். அதிலும் சமையற்காரர்களாகவும் காவலர்களாகவும் கிணறு தோண்டிகளாகவும் விறகு கொத்திகளாகவுமே பெரும்பாலானோரும் இருந்தனர். இளைய தலைமுறையினர் இயக்கத்தில் சேர்க்கப்பட்டுப் போராளிகளாக இருந்தனர். அதுவே 2009 வரையான இவர்களுடைய அரசியல் பிரதிநிதித்துவமும் பங்கேற்புமாக இருந்தது. 2009 க்குப் பின்னர் இவர்களில் ஒரு சாராரை தமிழ்த் தேசிய சக்திகள் பயன்படுத்திக் கொண்டன. அதாவது வாக்குகளைப் போடும் இயந்திரங்களாக மட்டும். விதிவிலக்காக வவுனி யாவைச் சேர்ந்த ஒரேயொருவருக்கு மட்டுமே மாகாண சபையில் பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டது. அதுவும் வரையறுக்கப்பட்ட அளவில். மற்றும்படி பாராளுமன்ற தேர்தல்களில் வேட்பாளர்களாகக் கூட இந்த மக்களிடமிருந்து ஒரு பிரதிநிதி கூட நிறுத்தப்பட்டதில்லை. உள்ளூராட்சி சபைகளில் அங்கொன்று இங்கொன்றாக சிலர் நிறுத்தப்பட்டனர். அது அந்த மக்கள் வாழிடப் பிரதிநிதித்துவத்தை மறுக்க முடியாது என்ற காரணத்தினால்.

இதேவேளை தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கோரிக்கைக்கு எதிராகத் தாம் இருந்து விடக் கூடாது என்ற அடிப்படையில் இந்த அரசியல் புறக்கணிப்பை வேத னையோடு பொறுத்திருக்கின்றனரே தவிர, உள்ளே அனலாகக் கொதித்துக்கொண்டேயுள்ளனர். இதனால்தான் அண்மைய காலத்தில் தமக்கென தனி அடையாளத்தைக் கோருகின்ற குரல்கள் இந்த மக்களிடமிருந்து எழுந்து வருகின்றன. ஆயினும் இந்த விடயத்தில் தாம் அவசரப்பட்டு எதிர்நிலைப்பாடு எடுத்து விடக்கூடாது. அது தமிழ் மக்களுக்கும் அதில் ஒரு அங்கமாக இருக்கும் தங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என ஒவ்வொருவரும் பொறுப்பாகச் சிந்திக்கின்றனர். இதில் இந்த மக்களிடத்தில் உள்ள நிதானத்தை நாம் பாராட்டவே வேண்டும்.

இப்படி நாம் யாருக்காகவும் பொறுத்திருக்க வேண்டியதில்லை என்ற எதிர் நிலைப்பாட்டை எடுத்திருப்போரையும் நாம் அறிவோம்.

7. இந்த மக்கள் வாழும் பிரதேசங்கள் தொடர்ந்தும் அபிவிருத்தியில் புறக்கணிப்புக்குள்ளாக்கப்பட்டன. வீதி, பாடசாலை, மின்சாரம், நீர் உட்பட அனைத்து அபிவிருத்தியிலும் இந்த மக்களின் பிரதேசங்கள் பாராமுகமாகவே நடத்தப்பட்டன. இன்னும் இந்த நிலை இரகசியமாகவும் பரகசியமாகவும் தொடர்கிறது.

8. பிரதேச வரலாற்றுப் பதிவுகளிலும் சமூக அடையாளத்தை நிலைநிறுத்தும் பண்பாட்டு நடவடிக்கைகளிலும் இவர்களுக்கான இடம் மறுதலிக்கப்பட்டது.

இப்படி எந்த வகையிலெல்லாம் நிராகரிப்பையும் ஒடுக்குமுறையையும் மேற்கொள்ள முடியுமோ அதையெல்லாம் மேலாதிக்கவாதிகள் செய்தனர்.

இதனால் எழுச்சி பெற்று வந்த இந்த மக்களின் இளைய தலைமுறையினர் மிகப் பெரிய இடைஞ்சல்களையும் அவமானப்படுத்தல்களையும் சந்திக்க வேண்டியதாயிற்று.

இது மிகப் பெரிய புற நெருக்கடி மட்டுமல்ல உள நெருக்கடியையும் கொடுத்தது. இன்னும் இந்த நிலை மாறவேயில்லை.


இதற்கு ஏராளம் சான்றுகளை ஆதாரமாக முன்வைக்க முடியும்.

(தொடரும்)



# அறிந்தேன்... பகிர்ந்தேன்...

வியாக்ரன்




திரைப்படங்களில் இடம்பெறும் "DON" கதாபாத்திரங்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடும் வகையிலே கொலம்பியாவில் Pablo Escobar என்ற கடத்தற்காரர் வாழ்ந்துள்ளார். "The king of Cocaine" என்ற பட்டப்பெயரோடு போதைப் பொருள் வணிகம் செய்துள்ளார். "நாயகன்" கமல்ஹாசன் போல ஏழைகளுக்கும் உதவியுள்ளார். சிறுவர் பூங்காக்களை அமைத்துள்ளார். தம்மீதுள்ள குற்றங்களை நீக்கினால் கொலம்பியா அரசின் முழுமையான கடனையும் அடைத்துவிடுவதாக அறிவித்தார். 1993 டிசம்பரில் சுட்டுக் கொல்லப்பட்ட போது, 142 விமானங்கள், 30 உலங்கு வானூர்திகள், 32 சொகுசுக் கப்பல்கள் உட்பட பெருவளங்களுக்கு உரித்துடையவராக இருந்தார். இவரது வாழ்க்கை குறித்துப் பல நூல்களும் திரைப்படங்களும் (Escobar-2009, Killing pabio-2011) வெளிவந்துள்ளன.

1. குறில் எழுத்தின் மாத்திரை யாது? 2.ஒரு டூயற்றில் (Duet) எத்தனை பாடிகர்? 3.ஒக்ரோபஸ் (Octopus) எத்தனை இதயங்கள் கொண்டது? 4.அடிப்படை விசைகள் எத்தனை? 5.அபசுரங்களின் எண்ணிக்கை யாது? கம்பராமாயணத்தில் எத்தனை காண்டங்கள்? 7.வெள்ளொளியில் உள்ள நிறங்கள் எத்தனை? 8.சூரிய குடும்பத்திலுள்ள கோள்கள் எத்தனை? 9.ஒரே திரைப்படத்தில் சிவாஜி கணேசன் ஏற்ற அதிக வேடங்கள் எத்தனை? 10.தமிழிலுள்ள சார்பெழுத்துக்கள் எத்தனை வகை? 11.துடுப்பாட்ட போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்கள் எத்தனை பேர்? 12.குறிஞ்சி மலர்கள் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை மலரும்? 13.இறுதி இராப்போசனம் ஓவியத்தில் எத்தனை பேர் உள்ளனர்? 14.இராமனின் வனவாசகாலம் எத்தனை ஆண்டுகள்? 15.கொரிய சினிமாவில் குற்றவாளியைக் கண்டறியும் கால எல்லை எத்தனை ஆண்டுகள்? 16.விண்கல சேவலில் எத்தனை இறகுகள் உள்ளன? 17.இந்திய நாணயத்தாளில் அச்சிடப்படும் மொழிகள் எத்தனை? 18.சங்ககாலத்தில் எழுந்த நூல்கள் எத்தனை? 19.ஒகஸ்ற் மாதம் என்ன திகதியில் ஆப்கானிஸ்தான் சுதந்திரதினத்தினை கொண்டாடுகிறது? 20. குத்துச் சண்டை மேடையின் நீளம் எத்தனை அடி? 21.தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி எத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தார்? 22.மார்ச் மாதம் எந்தத் திகதியில் உலக நீர்தினம் கொண்டாடப்படுகிறது? 23. மனித உடலில் எத்தனை சோடி நிறமூர்த்தங்கள் உண்டு? 24.இதயத்தை எத்தனை விலா என்புகள் பாதுகாக்கின்றன? 25.எத்தனையாவது வருட முடிவு வெள்ளிவிழா எனப்படுகிறது?

மேலுள்ள வினாக்களுக்கான விடைகளாக வினா எண்களே அமைகின்றன.

***



விலங்குகள் அடர் இருளில் பயணிக்கின்றன. எப்படி அவற்றுக்குக் கண் தெரிகிறது என்ற சந்தேகம் வந்ததுண்டா? இருள் என்பது ஒளியற்ற இடமன்று. வெளிச்சமற்ற இடமே ஆகும். ஒளி என்பது பலவிதமான அலை நீளங்களைக் கொண்ட மிகப் பெரிய அலைக்கற்றைத் தொகுதியாகும். அந்த மிகப் பெரியதொகுதியில் இருக்கும் மிகச் சிறிய பகுதியே வெளிச்சம் ஆகும். 380 நனோ மீற்றருக்கும் 740 நனோ மீற்றருக்கும் இடைப்பட்ட அலை நீள ஒளியினையே நம் கண்களால் பார்க்க முடியும். ஒளியானது வெளிச்சக் கதிர்களை இருபுறமும் தாண்டிப் பரவிக் காணப்படுகின்றது. வெளிச்சம் தாண்டி ஏனைய ஒளியலைகளை விலங்குகளால் பார்க்க முடியும். எனினும் மனிதன் கருவிகளைக் கொண்டு பார்த்து விடுகின்றான்.

***

"பிரதி ஞாயிறு தோறும் வருகை தருவார்" என எழுதுதல் தவறாகும். பிரதி என்பதும் தோறும் என்பதும் ஒவ்வொரு என்ற பொருளையே தருகிறது. எனவே பிரதி ஞாயிறு வருகை தருவார் அல்லது ஞாயிறு தோறும் வருகை தருவார் என்றே எழுத வேண்டும். எப்படி, எவ்வாறு, எங்ஙனம், எவ்வளவு என்று சொற்றொடரைத் தொடங்கினால் அப்படி, அவ்வாறு, அங்ஙனம், அவ்வளவு என்று சமனிலைப் பண்போடு முடிக்க வேண்டும். "எவ்வாறு மகிழ்வுடன் நட்புக் கொண்டாயோ அவ்வாறே மகிழ்வுடன் பிரிந்திடுக எவ்வளவுக்கு எவ்வளவு சேமிக்கிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது"

***

இரு தந்தையர் தங்களின் பிள்ளைகளுக்கு கைவிசேடம் வழங்கினர். ஒருவர் தன் மகனுக்கு 150 ரூபாவும் மற்றொருவர் 100 ரூபாவும் கொடுத்தனர். இரு பிள்ளைகளும் தங்கள் கைவிசேடப் பணத்தினை எண்ணிப் பார்த்த போது மொத்தமாக 150 ரூபா இருந்தது. அது எப்படி சாத்தியம் என்று யோசிக்கிறீர்களா? இங்கே குறிப்பிட்ட மூவரும் தாத்தா, தந்தை, மகன் ஆகியோரே! தாத்தா தன் மகனுக்கு 150 ரூபா கொடுக்கின்றார். அதிலிருந்து தந்தை மகனுக்கு 50 ரூபா கொடுக்கிறார்.

***

முன்னிரவு நேரத்தில் பாடுவதற்கு ஏற்ற இராகமாக கௌரிமனோகரி ராகம் காணப்படுகின்றது. கீரவாணி ராகத்திற்கு மிகவும் நெருக்கமானது. "அகலே அகலே நீலாகாசம்" என்ற சாருகேசிராக மலையாளப் பாடலை எம்.எஸ்.விஸ்வநாதன் தமிழுக்குக் கொண்டுவர விரும்பினார். மூல நிறத்தினை மாற்றுவதற்கு என்ன செய்யவதென யோசித்தார். கௌரிமனோகரி ராகத்தில் அப்பாடலை உருவாக்கி விட்டார். "மலரே குறிஞ்சி மலரே" என்ற பிரபலமான பாடலே அது! "பொன் வானம் பன்னீர் தூவுது" (இன்று நீ நாளை நான்) முத்தமிழ்க் கவியே வருக (தர்மத்தின் தலைவன்) செம்மீனே (செவ்வந்தி) போன்ற பாடல்களில் இசைஞானி கௌரிமனோகரி ராகத்தினைச் சிறப்பாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

***

செம்மண், சாணம், இயற்கை உரம் போன்றவற்றை விகித சமனாகக் கலந்து உருண்டையாக்கி, அதன் நடுவில் விதைகளை வைத்து விதைப்பந்தாக்கி நாடெங்கும் கொண்டு சென்று தாவரங்களை உருவாக்கும் பசுமைப் புரட்சியாளர்களுள் அம்ரிதா ஏயெம் முக்கியமானவர். ஒளிப்பட நேசகராகவும், ஈருருளிப் பயண வேட்கையாளராகவும், கடலுயிரிக் கரிசனையாளியாகவும் காணப்படுகின்றார். ஆரண்ய யாத்ரிகனான அம்ரிதா ஏயெம் எழுதிய "விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள்" என்ற நூல் மிகவும் காத்திரமானது.

***

அருமைத்துரை காயத்திரியின் கவிதையினை அறிமுகப்படுத்தி இவ்வாரப் பதிவினை நிறைவு செய்கின்றேன்.

"இரண்டு மனங்கள் கொண்டாடிய
உயிரான குறியீட்டாக்கம்
கறை படிந்து கிடக்கும்
இரத்தக் கறையினைச் சுத்தமாக்கி
புதுமனவியலைப் பிரசவிக்கும் அதீதம்

மொழிகள் எல்லாம் செப்பமிடப்பட்டன
காட்சிகள் நீலவானத்தை விழுங்கின
ஏழிசை
அவர்களின் மொழியில்
இசையைக் கடன் வாங்கியது

அமைதியான நீட்சியாக்கம்
கலவரமான பொழுதுகளாயின
இருவர் உலகமும்
ஒன்றாகப் பயணிக்கிறது
காட்சிகளில்லாத புதிய உலகத்தில்"

# நிலைக்கண்ணாடி

தரிசனன்

## வயோதிபம் என்னும் சவாலும் கூடிவாழும் மனிதர் கடமையும்




வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் எதிர் கொள்கின்ற இயற்கையான பருவங்களில் ஒன்று வயோதிபம் என்பதை யாவருமறிவோம். பொதுவில் எவருமே தவிர்க்க முடியாத ஒரு நிலை இதுவாகும். வயதாக ஆக உடலில் தளர்ச்சி ஏற்படுவதும் உடலுறுப்புக்கள் வலிமையிழப்பதும் சாதாரணமான விடயங்கள். இந்த இயற்கை மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவும் நிலைமைக்குத் தகுந்த மாதிரித் தங்களை இசைவாக்கப்படுத்திக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். பல வயோதிபர்கள் தமது நிலைமை குறித்துக் கவலை கொள்வதையும் தமது இயலாமைகள் பற்றி எண்ணி மனமுடைந்து போவதையும் காணலாம். கூட இருப்பவர்கள் அந்த விதமான சந்தர்ப்பங்களில் அவர்களிடத்தில் பரிவுடனும் புரிந்து கொள்ளும் தன்மையுடனும் பொறுமையுடனும் அவர்களைக் கையாளுவது ஒரு பெருங்கடமையாகும்.

இன்றைய நவீன சமூக அமைப்பில் முதியவர்களை ஏனையோர் குறிப்பாகப் பிள்ளைகளே ஒரு சுமையாகக் கருதும் மனோபாவம் மிக இயல்பாக வேரூன்றி வருவதை அவதானிக்கலாம். முன்னைய காலங்களில் வயோதிபர்கள் தாத்தா, பாட்டிகளாகக் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் என்ற கௌரவத்தோடு வாழ்ந்திருந்தார்கள். அவர்களின் உடனிருப்பும் அவர்களது ஆலோசனைகளும் கவனிப்பும் குடும்பத்தின் தேவைகளாகக் கருதப்பட்ட சூழ்நிலை அக் காலத்தில் காணப்பட்டது. சமூகத்தின் மூத்த உறுப்பினர்களாக அவர்களது பங்களிப்புகளும் அறிவுசார் துணையும் அவசியமெனக் கருதப்பட்ட ஒரு நிலைமை அக் காலத்தில் நிலவியிருக்கிறது. முதியவர்களின் கண்காணிப்பும் அறிவுரைகளும் இளையோரை வழிப்படுத்தும் தன்மையோடு காணப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குரிய ஸ்தானங்கள் கௌரவமாய் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இதை எழுதும் போது எனது தந்தையார் தனது தாத்தா பற்றிய ஞாபகங்களை என்னுடன் பகிர்ந்து கொண்ட சம்பவம் நினைவுக்கு வருகிறது.

பாட்டா எனது ஆச்சியின் தகப்பனார் தொண்ணூறு வயது கடந்தும் ஆரோக்கியமாக வாழ்ந்த ஒரு விவசாயி. வயோதிபராக அவர் ஒரு குறிப்பிட்ட சூழலுக்குள்ளேயே வாழும் நிலைமை தோன்றிய பிறகும் அவரது அபிப்பிராயங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் உரிய மதிப்பு அந்த வீட்டில் இருந்தது. 1917 ஆம் ஆண்டில் பிறந்தவராகிய எனது தந்தையார் முதன் முதலாகக் கைக்கடிகாரம் வாங்கிய போது முதலில் அதனைப் பாட்டனாரிடமே காட்டினாராம். அது போல எந்த விடயம் குறித்த முடிவுகள் எடுப்பதற்கும் அவர்களின் தாத்தாவுடைய ஆலோசனை பெறப்படும் வழக்கம் அக்குடும்பத்திலிருந்துள்ளது.


நாம் இன்று வாழும் காலத்தில் பல இளையோரால் இதனை நம்ப முடியவில்லை. எதனையுமே பயன்பாட்டின் அடிப்படையில் அளந்து முடிவுகட்டும் இன்றைய காலம் மனிதப் பெறுமதியைப் பெரிதும் கணக்கிலெடுப்பதில்லை.

பல குடும்பங்களில் வயோதிபர்கள் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்படும் துயர நிலையும் காணப்படுகின்றது. அன்புக்கும் கவனிப்புக்கும் ஏங்குகின்ற எத்தனையோ தாத்தா பாட்டிகள் வயோதிபர் இல்லங்களில் பராமரிக்கப்படும் நடைமுறை இன்று சாதாரணமாகி விட்டது. மூன்று நேர உணவும் உடையும் வாழ்வதற்கு ஒரு இடமும் இருந்தால் வயோதிபர்களுக்கும் போதும் என்ற கருத்தே இன்று நிலவி வருகிறது.

இந்தப் பார்வை சரியானதா? ஆரோக்கியமாக உலா வரும் இளைய தலைமுறையினரும் பிள்ளைகள் பெரும்பாலும் முதியோரை வெறும் சுமைகளாகவே கருதுபவர்களாக இருக்கிறார்கள். 'பழசுகள்' என்று இன்று சிரிக்கப்படும் அந்த வயோதிப உள்ளங்கள் தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடைய நெருங்கிய அன்பின் சூழலில் வாழ ஆசைப்படுபவர்கள் என்பதை ஏன் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை. வயதாகி முதுமைநிலை வந்த நிலையில் பல வயோதிபர்கள் குழந்தைகள் போல் ஆகிவிடுவதைப் பார்க்கிறோமல்லவா இரண்டாவது குழந்தைமைப் பருவம் (Second childhood) என உளவியல் அறிஞர்கள் குறிப்பிடும் இயல்பான முதுமைப்பருவத்தை ஒரு தண்டனை போலவும் சாவுக்குக் காத்திருக்கும் பருவம் எனவும் கருதும் படி ஏன் இளையவர் உலகம் நடந்து கொள்கிறது? இந்த மனப் போக்கில் மாறுதல்கள் தோன்றாதா? முதுமையும் அன்பை எதிர்பார்க்கிறது என யாவரும் புரிந்து கொள்ள மாட்டோமா?

# எல்லாமே நாங்கள்தான்

செல்வின்



இன்று நாங்கள் எங்களது உரையாடலை அடுத்த தளத்திற்கு நகர்த்துவோம்...

உணவு இறையாண்மை என்ற விடயம் ஏன் வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு முதன்மையாகவும் அவசியமாகவும் உள்ளது என்ற வினாவிற்குள் பிரவேசிக்க முன்னர் ஏன் நாங்கள் உணவுப்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து உணவு இறையாண்மை என்ற விடயத்திற்கு நகரவேண்டியுள்ளது என்பதனைப் புரிந்துகொள்ளல் இங்கு முக்கியமாக உள்ளது.

யுத்தமும் தொடர்புறக்கணிப்புகளும் ஏமாற்றங்களும் இலவுகாத்த கிளிகளாக காத்திருத்தலுமே தொடர்கதையாக மாறிப்போயுள்ள தேசத்தில் தனி மனிதர்களாகவும் குடும்பங்களாகவும் பிறதேசங்களுக்கு பரதேசிகளாக செல்லும் எத்தனங்கள் எவ்வித்திலும் எமது எதிர்காலத்தலைமுறைக்கு பாதுகாப்பானதாகவும் செழுமையானதாகவும் அமையப் போவதில்லை.

மீண்டெழுவதற்காக, இத்தீவினுள் கண்ணியமும் சரிகள் எங்களுக்கான உணவு இறையாண்மை பற்றிய புரிதலினைக் கட்டியெழுப்பவேண்டி யுள்ளது.

இத்தகைய பின்புலத்திலேயே நாம் உணவு இறையாண்மை என்பதனை புரிந்துகொண்டு முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதுவரை காலமும் உணவுப்பாதுகாப்பு என்ற விடயத்தை முன்னிறுத்தி வலியுறுத்தி வந்த ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்களும் ஏனைய மனிதாபிமான அமைப்புகளும் கூட தற்போது தங்களது பார்வையினை உணவு இறையாண்மை என்ற விடயத்தை நோக்கித் திருப்பியுள்ளன.

உலகத்தின் பல கோடி மக்களை குறிப்பாக தென்னரைக்கோள நாடுகளான ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளை உணவுப் பஞ்சமும் பட்டினியும் தொற்றுநோய்களும் பொருளாதார நெருக்கடிகளும் அச்சுறுத்தியபோது பட்டினித்த விர்ப்பும் அதுசார்ந்த மரணங்களைக் குறைத்தல் என்ற உலகின் கவனத்தில் முதன்மைபெற்றிருந்தது.

பட்டினியாலும் உணவின்மையாலும் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கான உணவுப்பாதுகாப்பு என்பது நான்கு விடயங்களை அடிப்படை நோக்கங்களாக கொண்டு கட்டமைக்கப்பட்டது.

1). மக்களுக்கு தேவையான அளவு உணவினை உற்பத்தி செய்தல். (Availability)

2). மக்கள் அந்த உணவினை கொள்வனவு செய்ய

> சமகாலத்தில் அமெரிக்காவின் கோதுமை, சோளம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் இலாபவீதம் குறைந்து விடாதபடி உயர் விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையினையும் சோளத்தையும் சீனியையும் வாங்கி எமது மக்கள் அமெரிக்க விவசாயிகளையும் நியூசிலாந்து பால்பண்ணையாளர்களையும் காப்பாற்றுகின்றார்கள். இதனூடாக மிகப் பெரிய பொருளாதார காலனித்துவம் எமது சமையலறைகளுக்குள்ளும் உணவுப் பண்பாட்டிற்குள்ளும் எமது நாவின் சுவையுணர்வு நரம்புகளுக்குள்ளும் ஊடுருவியுள்ளது.

சமமான உரிமைகளும் கொண்டவர்களாக எம்மைக் கட்டியெழுப்புவதற்கு நாங்கள்தான் உழைக்கவேண்டும். நாங்கள்தான் சிந்திக்க வேண்டும். நாங்கள்தான் கொள்கை வகுக்க வேண்டும். நாங்கள்தான் மூலோபாயங்களை கண்டறிய வேண்டும். நாங்கள்தான் திட்டங்களைத்தீட்டி செயற்படுத்த வேண்டும். நாங்கள்தான் வளங்களைத் தேடித் திரட்டவேண்டும். அவற்றை முகாமை செய்யவேண்டும். எல்லாமே நாங்கள்தான். இதனை விடுத்து "குளம் வற்றும் வற்றும் எனக் காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கின் கதையாக" எங்கள் கதை மாறி விட அனுமதிக்க முடியாது.

உலகின் புதிய ஒழுங்கில் முறைசார்ந்த ஆட்சியதிகாரம் ஒரு அவசியமான விடயமாக உருவகிக்கப்பட்டாலும் ஆட்சியதிகாரமற்ற மக்கள் கூட்டங்கள் மேலெழுந்த வரலாறுகள் கண்முன்னே நிரம்ப உண்டு. அமெரிக்காவின் அணுக் குண்டு அழிவிற்கு பின்பும் கூட தோல்வியை ஏற்றுக்கொண்டு சரணடைந்த பின்பும் ஒரு அமெரிக்க இராணுவத்தளபதியின் கீழான நிர்வாகத்தின் கீழ்தான் யப்பானியர்கள் மீண்டும் யப்பானிய பொருளாதார பேரரசாக மீண்டெழுந்தார்கள். அதற்காக 50 ஆண்டுகளுக்கு அடிமைத்தன நிபந்தனைகளுக்கு பணிந்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் தங்களை தொலைநோக்குடன் மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு 50 நாட்கள் கூட காத்திருக்கவில்லை. அமெரிக்காவின் கட்டற்ற சனநாயக சிந்தனைகள் வாழ்க்கை விழுமியங்கள் எல்லாவற்றுக்கு கீழும் தங்களை யப்பானியர்களாக கட்டமைத்தார்கள். பொதுவெளியில் அமெரிக்காவின் கைப்பற்றப்பட்ட ஆட்சியின் குடிமக்களாக காணப்பட்டாலும் தங்கள் வீட்டினுள்ளும் சமூக வாழ்விலும் யப்பானியர்களாகவே தங்களைத் தக்கவைத்தார்கள். தங்களது எதிர்காலத்தின் செல்நெறியை தாங்களே தீர்மானித்தார்கள். இது எங்களுக்கு மிகப் பொருத்தமான பாடமாகும்.

நாங்களும் அவர்கள் போல்...

முதலில் எங்களுடைய விரைவான மீளெழுச்சிக்கான முன்நிபந்தனைகள் எவ்வாறு அமையலாம் என்பதனை நாங்கள் வரையறுக்கவேண்டும்.

இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு நிலப்பரப்பில் வாழுகின்ற மக்கள் தங்களுக்கான விவசாயம் கால்நடை வளர்ப்பு மீன்படி சிறுகைத்தொழில்கள் மற்றும் நடுத்தர பாரிய கைத்தொழில் வர்த்தக முயற்சிகள் ஆகியவற்றை முன்னெடுக்கும்போது பலவிடயங்களை கவனத்திற் கொண்டு தங்களது தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டியுள்ளது.

எவற்றையெல்லாம் நாம் கொண்டிருக்கவேண்டும்.

அ) ஆரோக்கியமானதும் அறிவாற்றல்களும் உழைப்புச்சக்தியும் கொண்ட குடிமக்கள் வளம்

ஆ) நோய்களையும் எதிர்பாராத தொற்றுநோய் அபாயங்களையும் போசாக்கின்மையினையும் குறை ஆயுளினையும் எதிர்த்துப்போராடக்கூடிய வலிமை கொண்ட பௌதீக உடலியல் கட்டமைப்புக்கொண்ட மானிடர்கள்

இ) பரந்துபட்ட நிலப்பரப்பினையும் நீண்ட நெடுங் கடலினையும் கடல்படு வளங்களினையும் கையாளவும் ஆளுகை செய்யவும் கட்டுப்படுத்தவும் ஏதுவான வாழ்வியல் ஒழுங்கமைப்பும் பொருண்மியம் மற்றும் உற்பத்தி முயற்சிகளும் அதற்கு பொருத்தமான நிறுவனப்பொறிமுறைகளும்.

ஈ) எமது சமூகத்தின் நீடித்த இருப்பு, உயர்நிலையில் தன்னைத்தக்கவைக்கக்கூடிய வலுக்கொண்ட மனித இனத்தின் பரம்பல், நோயற்றதும் ஆற்றல்களும் ஆளுமைகளும் மிக்கதுமான மனிதர்களின் தொகுதி, ஆகியவற்றை உறுதிப்படுத்தக்கூடியதும் ஆரோக்கியமானதும் பண்பாட்டு ரீதியாக ஏற்புடைத்ததும் எந்தச்சூழ்நிலையிலும் மற்றவர்களின் ஆணைகளினால் கட்டுப்படுத்தப் பட முடியாததுமான உணவு உற்பத்தி மற்றும் விநியோகப் பொறிமுறை, குடிநீர், காற்று, சமையலுக்கும் வெளிச்சத்திற்குமான சக்திமூலம் போன்றன.

உ) எமது சமூகத்தினதும் இளம் தலைமுறையினதும் செழுமையும் வலிமையுமான எதிர்காலத்தைக்கட்டமைக்கக்கூடியதும் அதற்கு ஏதுவாக அவர்களின் தனித்துவமான பிறப்பாற்றல்களை மிளிரச் செய்வதற்கும் அவர்களை சிந்தனைத் திறனும் தலைமைத்துவ ஆளுமையும் வினையாற்றலும் புத்தாக்கத் தேடலும் தொழிலாண்மையும் கொண்டவர்களாக உலகின் முன்னணிக் குடிமக்களின் தொகுதியில் இணைப்பதற்கு ஏதுவான கல்வியும் வாழ்க்கை வழிகாட்டல்களும் பயிற்சியும் பட்டறைகளும் அதற்கான தனித்துவமான நிறுவனங்களும்

ஊ) பெருகிவரும் எமது இளம்தலைமுறையினரின் ஆற்றல்களை செம்மைப்படுத்தி செழுமைப்படுத்தி தொழிலுலகிற்குள் உள்வாங்குவதற்கும் உள்ளூர் மக்களுக்கும் நாட்டிற்கும் உலகின் சந்தைகளுக்கும் கைத்தொழில் உற்பத்தி மற்றும் கைவினைப்பொருட்களைப் படைத்து சந்தைப்படுத்தக்கூடிய அதிர்வாற்றல்கள் கொண்ட தொழில்முனைப்புகளும் அவற்றுக்கு வலுச்சேர்க்கும் நிதி நிறுவனங்கள், தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்திக்கும் ஆராய்ச்சிக்குமான அமைப்புக்கள் தொடர்பாடல் வலையமைப்புக்கள் ஆகியன.

இவ்வாறு எங்களது முன்னுரிமைப்பட்டியல் தொடர்ச்சியாக நீண்டும் விரிந்தும் செல்லலாம். இங்கு எங்களின் கடந்தகால பட்டறிவு என்பது மட்டுமல்லாது விரைந்து அச்சுறுத்தும் பூகோளந்தழுவிய காலநிலை மாற்றங்கள், பெருந்தொற்றும் அதனைத் தொடர்ந்து உலகின் அரசியல், பொருளாதார மற்றும் வாழ்வியல் முறைகளில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் மாற்றங்களும் எங்களுக்கான எதிர்காலத்தைக் கட்டமைப்பதில் நாங்கள் கொண்டிருக்கவேண்டிய தவிர்க்கமுடியாத கடப்பாட்டினை வலியுறுத்தி நிற்கின்றது.

ஒடுக்கு முறைக்கு உட்பட்ட மக்கள் தொடர்ச்சியாக ஒடுக்கு முறையாளனின் அபிவிருத்தித் தந்திரோபாயத்திற்குள்ளும் அணுகுமுறைக்குள்ளும் சிக்குப்பட்டிருப்பார்களேயானால் அவர்களின் அழிவு என்பது மிகவும் விரைவில் நிதர்சனமாகும்.

எங்களது ஆற்றல்களையும் எங்களிடமுள்ள வளங்களையும் நாங்கள் கொண்டிருக்கக்கூடிய தலைமுறைகள் தாண்டிய பட்டறிவினையும் புதியதோர் திசைநோக்கி நகர்த்தவேண்டியுள்ளது. தொடர்ந்து "இருட்டறையில் கறுப்புப் பூனையினைத் தேடுகின்ற குருட்டாட்டம்" தேவையில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் முன்னிறுத்தியே நாங்

கூடியளவுக்கு அடிப்படை வருமானத்தை கொண்டிருப்பதனை உறுதி செய்தல். (Affordability)

3) மக்களால் அணுகக்கூடிய தூரத்தில் இலகுவாக கிடைக்கக்கூடிய விநியோக முறைமைகளுக்கு ஊடாக போதியளவு உணவு உரிய காலங்களில் கிடைப்பதனை உறுதி செய்தல் (Accessibility)

4) உணவினை மக்கள் சரியான முறைகளில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் உரிய முறையில் அதன் கலோரிப்பெறுமானங்கள் இழக்கப்படாமல் சமைத்து உண்பதற்குமான பொருத்தமான அறிவினைப் பெற்றுக் கொண்டிருத்தல் (Utilization).

இந்த உணவுப்பாதுகாப்பு கருப்பொருளில் பட்டினிச் சாவினை தவிர்ப்பதற்காக உணவினை மக்கள் உண்ணுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. உலக மக்களுக்கு தேவையான அதிக அளவு உணவினை விரைந்து உற்பத்தி செய்வதற்காக விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களும் உணவு பதனிடல் பொதியிடல் விலையிடல் சார்ந்த விற்பன்னர்களும் தங்களது புலமைசார் திறமைகளுடனும் பல்தேசிய கம்பனிகளின் பெருமளவு நிதிவளத்துடனும் பல்வேறு சாதனைகளைப் படைத்தனர்.

உணவுத் தாவரங்களின் மூலக்கூறுகளில் அடிப்படையான மாற்றங்களைச் செய்ததன் ஊடாகவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களின் கலப்பினங்களை உருவாக்கியதன் மூலமும் அதிகூடியளவு விளைச்சலைத் தரக்கூடிய பயிரினங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு அதி உயர் திறன் கொண்ட கலப்பினங்களின் கூடிய விளைச்சலை உறுதி செய்வதற்காக அவற்றுக்கு வேண்டிய உயிர்ச்சத்தை வழங்கக்கூடிய புதிய பசளைவர்க்கங்கள் ஆராய்ச்சி நிலையங்களில் உருவாக்கப்பட்டு செயற்கை இரசாயன உரங்களான பெருமளவில் நவீன தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைகளை ஆக்கிரமித்தன. செயற்கை உரங்களில் தங்கி உயர் விளைச்சல் தரக்கூடியதாக அறிமுகப்படுத்தப்பட்ட பயிரினங்கள் பூச்சிகள் மற்றும் பயிர்கொல்லிகளின் தாக்கத்தை எதிர்கொள்ளும் ஆற்றல்கள் குறைந்தவையாக இருந்தமையினால் அப்பயிர்களை அத்தகைய தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக செறிவூட்டப்பட்ட இரசாயன உள்ளீடுகளைக்கொண்ட கிருமிநாசினிகளும் பீடைகொல்லிகளும் விளைநிலங்களை நிறைத்தன. குறுகிய காலத்தினுள் கூடிய விளைச்சலினைப் பெற்று சந்தைக்கு வழங்கி அதிகூடிய இலாபத்தினை உழைக்கலாம் என்கின்ற குறுகிய சிந்தனை விவசாயிகள் மத்தியில் ஆழமாகப் பதிக்கப்பட்டது. பாரம்பரியமாக விவசாயத்தில் ஈடுபட்டிராத ஏனையோர்களும் விவசாயத்தை அதி கூடிய இலாபம் தரும் பொருளாதார முயற்சியாக கருதி விவசாயத்துறையினுள் பிரவேசித்ததனால் மூலதனச் செறிவானதும் தொழில்நுட்பச்செறிவானதுமான துறையாக உணவு உற்பத்திக் கைத்தொழில் விரிவடைந்தது. விளைநிலங்களின் மீளுற்பத்தி உயிராற்றல் முற்றாக சிதைக்கப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட உணவு விளை பொருட்களை பாதுகாப்பதற்கும் சந்தைப்படுத்தும் வரை பழுத டந்து விரயமாகும் அளவினைக் குறைப்பதற்காகவும் செயற்கையான இரசாயன பதப்படுத்தற் (14 ஆம் பக்கம் பார்க்க...)



# 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிட முயலும் இந்தியா

சி.அ.யோதிலிங்கம்.



இந்திய வெளியுறவுச் செயலர் ஸ்ரீ ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லாவின் மூன்று நாள் இலங்கைப் பயணம் 13 ஆவது திருத்தம் பற்றிய வாதப் பிரதிவாதங்களைத் தமிழ் அரசியல் சூழலில் மிகவும் கிழப்பிவிட்டிருக்கின்றது. அவர் 13 ஆவது திருத்தம் தொடர்பாகத் தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துச் சென்றிருக்கின்றார்.

வடக்குக் கிழக்கில் திருக்கோணமலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் அவர் விஜயம் செய்திருக்கின்றார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் தமிழ் முற்போக்கு முன்னணியையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் தனித்தனியாக சந்தித்துக் கலந்துரையாடி இருக்கின்றார். வடக்கு கிழக்கில் கூட்டமைப்பில் இல்லாத தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளைத் தனியாகச் சந்திக்கவில்லை. ஏனைய சிவில் அமைப்புக்களுடன் சேர்ந்தே யாழ்ப்பாணத்தில் சந்தித்திருக்கின்றார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் அண்மையில் வடக்கு கிழக்குக்கு வருகை தந்த போது தமிழ்த்தேசியப் பரப்பில் செயற்படும் மூன்று தரப்பினரையும் தனித் தனியாகச் சந்தித்திருக்கின்றார். இதனால் குறிப்பாக அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியா முன்வைத்திருக்கும் கருத்துக்கு மாற்றான கருத்துக்கள் பலமான நிலையில் வெளிவந்திருந்தன. இந்தியா தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ஒற்றை ஆட்சி அடிப்படையில் அமைந்த 13 ஆவது திருத்தத்தையே சிபார்சு செய்கின்றது. இந்த 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக எந்தத் தமிழ்த்தேசியக் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பு நிலையை சற்று அடக்கியே வாசிக்கின்றது. இதனால் மாற்றுக் கருத்துக்கள் ஏனைய இரண்டு தரப்புக்களான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம் இருந்தும், விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணியிடமிருந்தும் வர வேண்டி இருந்தது. இந்த இரண்டு தரப்பினரையும் தனித்தனியாக சந்தித்தால் 13 ஆவது திருத்தத்திற்கு எதிரான கருத்துக்கள் பலமாக வந்து விடலாம் எனக் கருதியே தனித்தனியான சந்திப்புக்களை வெளியுறவுச் செயலர் தவிர்த்திருக்கலாம்.

இத்தனைக்கும் மலையகத் தரப்பில் செயற்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு முன்னணி ஆகிய இரண்டையும் தனித்தனியாகவே சந்தித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் சமனாக தனியாக தங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதால் விக்கினேஸ்வரன் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. கொழும்பில் தனியாகச் சந்திக்க முயன்றபோதும் அவருக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் அவரது கூட்டணியைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரனும் சிவாஜிலிங்கமும் சந்திப்பில் கலந்து கொண்டனர். இவ்விருவரும் கூட ஒருங்கிணைந்த அடிப்படையில் செயற்படவில்லை மாறாக தனித்தனியாகவே செயற்பட்டனர். சிவாஜிலிங்கம் சில மகஜர்களைக் கையளித்திருந்தார். இவ் மகஜர் விக்கினேஸ்வரனின் கூட்டணியுடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மணிவண்ணன் யாழ்மாநகர மேஜர் என்ற வகையில் தனியாகக் கலந்து கொண்டார். அவர் அரசியல் பற்றி எதுவும் பேசவில்லை. கலாசார மண்டபப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசினார். சிவில் தரப்பினர் என்ற வகையில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர், யாழ் வர்த்தக சங்கத் தலைவர் கருத்துருவாக்கிகளான பேராசிரியர் கணேசலிங்கம், நிலாந்தன் ஆகியோர் உட்பட வேறும் பலர் கலந்து கொண்டனர்.

> “சிவில் தரப்பில் வந்த அதிகாரிகள் நிவாரணக் கோரிக்கைகளையே முன் வைத்தனர். அரசியல் கோரிக்கைகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என அவர்கள் கருதுகின்றார்களோ தெரியாது. மொத்தத்தில் பெருமளவிற்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சந்திப்பாகவே இச் சந்திப்பு முடிவடைந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான தனியான சந்திப்பின் போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையே பிரதானமாக வலியுறுத்தி வெளியுறவுச் செயலரை மகிழ்ச்சிப் படுத்தியிருந்தார்.”

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கஜேந்திரகுமார் கலந்து கொண்டார். அவருக்கு சற்று அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. வெளியுறவுச் செயலரின் ஆசனத்துக்குப் பக்கத்தில் அவருக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. மறுபக்கத்தில் யாழ் பல்கலைக் கழக உப வேந்தருக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. கஜேந்திரகுமாருக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் சொன்ன செய்தி “உங்களிலும் கவனம் செலுத்துகின்றோம்” என்பதாக இருக்கலாம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் போல தங்களுக்கு வழங்கப்படவில்லை என கஜேந்திரகுமார் நினைக்கக் கூடாது என வெளியுறவுச் செயலர் கருதியிருக்கலாம். எல்லாவற்றிலும் சுயமரியாதை பார்க்கும் கஜேந்திரகுமார் இதில் ஏன் கோட்டை விட்டார் என்பது வியப்பைத் தருகின்றது. தனியான முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதற்காக விக்கினேஸ்வரன் தவிர்த்ததைப்போல் கஜேந்திரகுமாரும் சந்திப்பை தவிர்த்திருந்திருந்தால் இது வலிமையான செய்தியை இந்தியத் தரப்பிற்கு சொன்னதாக அமைந்திருக்கும்.

கஜேந்திரகுமார் தான் என்ன கருத்துக்களைக் கூறியிருந்தேன் என்பதை ஊடகவியலாளர் மாநாட்டின் மூலம் தெரிவித்திருக்கின்றார். குறிப்பாக மூன்று கருத்துக்களைக் கூறியதாக அவர் தெரிவித்துள்ளார். அதில் முதலாவது தமிழர் பிரச்சினைகளுக்கு ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு வழங்கக் கூடிய எந்த ஒரு பொறிமுறையையும் இந்தியா முன்வைக்கக் கூடாது என கூறியதாகக் குறிப்பிட்டார். இரண்டாவதாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் வட கிழக்குப் பகுதியில் முன்னெடுப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் எனக் கூறியிருந்தார். மூன்றாவதாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்தியாவினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்திட்டங்களை வரவேற்று போரினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பொருளாதார ரீதியாக நேரடியாகப் பலப்படுத்தக் கூடிய செயற்திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டியது அவசியம் எனக் கூறியிருந்தார். வெறுமனே உட்கட்டமைப்பு வசதிகளை மாத்திரம் விரிவுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தும் பட்சத்தில் அபிவிருத்தி என்ற விடயம் தமிழ் மக்களின் அடையாளங்கள் அழிக்கக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்கும் எனவும் கூறியிருந்தார்.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்த ஒரு பொறிமுறையையும் யோசனையையும் இந்தியா முன்வைக்கக் கூடாது எனக் கூறிய போதும் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் நேரடியாகக் கூறவில்லை. இதுபற்றிய வாதப் பிரதிவாதங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ஈழநாட்டின் ஆசிரிய தலையங்கத்திலும் வந்திருக்கின்றது. எல்லா இடங்களிலும் நேரடியாகவே தனது அரசியல் நிலைப்பாடுகளை முன்வைக்கின்ற கஜேந்திரகுமார் இதில் ஏன் அவ்வாறு முன்வைக்கவில்லை என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

இரண்டாவதாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் வடகிழக்கில் இடம்பெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்பது அவர் தொடர்ச்சியாகக் கூறிவருகின்ற விடயம்தான். ஆனால் அதனைத் தடுக்கும் வகையில் அவரது கட்சி எந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது? எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கிறது? என்பது பற்றி தெளிவாக எதனையும் கூறவில்லை. பொதுவாக தமிழ் அரசியல் தரப்பு என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றியும் எதுவும் கூறவில்லை. வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இந்தியாவிற்கு எதிராக சீனாவில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடலட்டைப் பண்ணை தொடக்கம் தீவுப்பகுதிகளில் காற்றாலை மின்சாரம்வரை பல செயற்திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கஜேந்திரகுமாரின் இந்த நிலைப்பாடு இந்திய தேசிய பாதுகாப்பிற்கு நாம் ஒத்துழைக்கத் தயார். ஆனால் இந்தியா தமிழ் மக்களோடு நிற்க வேண்டும் என்ற மறைமுக செய்தியையும் சொல்லியிருந்தது.

மூன்றாவதாக அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அவர் கூறிய விடயங்களைப் பொறுத்தவரை போரினால் பாதிக்கப்பட்ட மக்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவது பற்றி அவர் கூறிய கருத்துக்கள் வரவேற்கத் தக்கதே! கட்டமைப்புசார் அபிவிருத்தி என்ற பெயரில் இடம்பெறும் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் பற்றி அவர் கூறியவையும் வரவேற்கத்தக்கதே.

இந்தக் கட்டமைப்புசார் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய உதாரணங்களைக் குறிப்பிட்டு கருத்துக்களைக் கூறியிருந்தால் விடயங்கள் இன்னமும் தெளிவாக வந்திருக்கும். இதைவிட அபிவிருத்தித் திட்டங்கள் வடகிழக்கில் மேற்கொள்ளப்படுகின்ற போது மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்திருக்கலாம். அபிவிருத்தித் திட்டங்களோடு தமிழ் உள்ளூராட்சிச் சபைகளை இணைக்க வேண்டும் என்ற கருத்தையும் முன்வைத்திருக்கலாம். தமிழ் மக்களைப் பங்காளி ஆக்காது சிங்கள அரசுடன் இணைந்து மட்டும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தமிழ் மக்களுக்கு ஆபத்துக்களைக் கொண்டுவரலாம் என்பதையும் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

சிவில் தரப்பிலிருந்து பேராசிரியர் கணேசலிங்கம் 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கப் போதுமானதல்ல எனவே அதற்கப்பாலான தீர்வை நோக்கி இந்தியா செல்ல வேண்டும். இது தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். இதற்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் கூறிய பதில் “தற்போது இந்தியாவின் நிலைப்பாடு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்பதே எதிர்காலத்தில் நீங்கள் கூறிய விடயங்களையும் இந்தியா கருத்தில் எடுக்கும்” என்பதாக இருந்தது. சமூக ஆய்வாளர் நிலாந்தன் “இந்தியாவிற்கும், தமிழ் மக்களுக்குமிடையே இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதனைக் குறைக்க வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

சிவில் தரப்பில் வந்த அதிகாரிகள் நிவாரண கோரிக்கைகளையே முன்வைத்தனர். அரசியல் கோரிக்கைகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என அவர்கள் கருதுகின்றார்களோ தெரியாது. (15 ஆம் பக்கம் பார்க்க) ■

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

**"புதிய துறைகள் உருவாக்கப்பட்டுள்ளதால் அதற்கான ஆளணி ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது என்பது உண்மை. இதைப் புரிந்து கொண்டு பலரும் புரியாமற் சிலரும் நடந்து கொள்கின்றனர். ஆனால், சிலர் இதை தமக்குச் சுமையெனக் கருதி ஒரு விவகாரமாக்க முயற்சிக்கின்றனர். மக்களின் (நோயாளரின்) நிலைமையை மனதிற் கொண்டு சிந்தித்தால் இவ்வாறு இவர்கள் சிந்திக்க வேண்டியிருக்காது."**




# மருத்துவத்தை மக்கள் மயப்படுத்திய சேவையாளர்கள்

யாழ்ப்பாணத்தின் மருத்துவச் சரித்திரத்தில் இரண்டு பெயர்கள் முக்கியமானவை. ஒன்று Dr. சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் (Dr Samuel Fisk Green) இரண்டாவது Dr. சத்தியமூர்த்தி. 1800 இன் பிற்பகுதியில் Dr. கிறீன் யாழ்ப்பாணத்தின் மருத்துவத்துறையில் ஒரு புதிய பாதையைத் திறந்தார். அதுவரையும் தமிழ் வைத்தியம் அல்லது கை வைத்தியம் என்று சொல்லப்படும் மரபுவழியான சித்த மருத்துவமே நடைமுறையிலிருந்தது. Dr. கிறீனுடைய காலகட்டத்திலேயே ஆங்கில மருத்துவத்துறை யாழ்ப்பாணத்தில் பரவலாக்கமடைந்தது.

அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து மருத்துவத் துறையில் பயின்ற Dr. கிறீன் இலங்கைக்கு வந்து பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் ஆகிய இடங்களில் அமெரிக்க மிஷனில் பணியாற்றினார். அப்பொழுதுதான் மானிப்பாயில் ஒரு மருத்துவமனையை Dr. கிறீன் ஆரம்பித்தார். இன்றும் அது Dr. கிறீனின் ஞாபகார்த்த மருத்துவ மனையாக இருப்பதைக் காணலாம். அந்த மருத்துவமனையை ஆரம்பித்ததோடு Dr. கிறீன் நிற்கவில்லை. யாழ்ப்பாணத்தில் முறைப்படுத்தப்பட்ட மருத்துவக் கற்கையை அவர் ஆரம்பித்தார். அதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 115 பேர் பட்டம்பெற்று வெளியேறிச் சேவையாற்றினார்கள். இதைத் தவிர Dr. கிறீனின் பணிகள் வேறு துறைகளிலும் இருந்தன. அவைபற்றி இன்னொரு போது பார்க்கலாம். ஆனால் Dr. கிறீனின் மருத்துவப் பங்களிப்பே யாழ்ப்பாணத்தின் பெருந்திரள் சமூகத்தின் மருத்துவத் தேவையை நிறைவு செய்யும் முறைமையைத் திறந்தது. இதுவே இன்றுவரை தொடர்கிறது.



Dr. கிறீனைப் போன்ற இன்னொரு ஆளுமையாகவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் Dr. சத்தியமூர்த்தி இன்று விளங்குகிறார். Dr. சத்தியமூர்த்திக்கு முன்னரும் சமகாலத்திலும் மிகச் சிறந்த, அர்ப்பணிப்பு மிக்க பலர் யாழ்ப்பாணத்தில் மருத்துவப் பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். நெருக்கடி காலத்தில் அளப்பரிய சேவைகளை ஆற்றியிருக்கின்றனர். ஆனால் அவர்களைக் கடந்த ஒரு ஆளுமையாக Dr. சத்தியமூர்த்தி விளங்குகிறார் என்பது மறுக்கவே முடியாத உண்மை. இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைப் பொறுப்பேற்ற 2015 ஒக்ரோபருக்குப் பின்னரான ஆறு ஆண்டு காலத்தில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாற்றங்களை யார் உருவாக்குகிறார்களோ, அவர்களே புதிய வாசல்களைத் திறக்கின்றனர். இந்தப் புதிய வழிகளில்தான் மக்கள் உச்சமான பயனைப் பெறமுடிகிறது. இந்த மாற்றங்களை இரண்டு பிரதான வகையாக நோக்க முடியும்.

1. மருத்துவச் சேவையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும்.
2. மருத்துவமனையின் நிர்மாணம் மற்றும் கட்டமைப்பு விரிவாக்க வளர்ச்சியும்

**மருத்துவச் சேவையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும்.**

நோயாளர்களை முதன்மையாகக் கொண்ட, மக்கள் நலனை மையப்படுத்திய மருத்துவச் சேவையும் நிர்வாகமும் என்ற எண்ணக் கருவில் போதனா மருத்துவமனையின் நிர்வாகத்தையும் சேவை முறைமையையும் Dr. சத்தியமூர்த்தி உருவாக்கினார். இதனால் தேவையற்றவிதமாக இறுக்கமாக்கப்பட்டிருந்த மருத்துவப் பணிகளும் மருத்துவமனை நிர்வாகமும் நெகிழ்ச்சியடைந்து அனைவருக்கும் சுமையற்ற விதமாகின.

இதனால் நோயாளிகளும் நோயாளிகளின் உறவினர்களான பொதுமக்களும் நிறைவடைந்தனர். இந்த நிறைவு பலரிடத்திலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. கூடவே எவரும் பணிப்பாளரையும் பொறுப்பான உத்தியோகத்தர்களையும் சந்தித்துத் தேவையான விடயங்களைப் பற்றி நட்புணர்வுடன் பேசவும் ஆலோசனைகளைப் பெறவும் முடியும் என்ற நிலையையும் உருவாக்கினார் சத்தியமூர்த்தி. குறைபாடுகளைக் களையவும் மருத்துவப் பணிக்குழுவினர் புத்தூக்கம் பெறவும் இந்த நடைமுறை உதவியது. இது மருத்துவ ஊழியர்களுக்கு மேலும் உற்சாகத்தை வழங்கியது. இன்று யாழ்ப்பாணம் மருத்துவமனை பலருடைய பாராட்டுக்கும் உரியதாக மாறியதற்கு இது அடிப்படைக் காரணமாகும்.

எனினும் போதனா மருத்துவமனையில் போதிய ஆளணி இல்லை. வளப்பற்றாக்குறையும் உண்டு. முக்கியமாக தாதியர் பற்றாக்குறை உண்டு. இருந்தாலும் இதைக் கடந்து தாதியர்கள் மிகுந்த வேலைச் சுமையோடு பணியாற்றி வருகின்றனர். ஆனால் அதை அவர்கள் நிறைவோடு, மகிழ்ச்சியோடுதான் செய்து கொண்டிருக்கின்றனர்.

முன்பு மேலதிக மருத்துவச் சிகிச்சைகளுக்காக கண்டி, கொழும்பு நோக்கிச் செல்லவேண்டியிருந்தது. அந்த நிலையை மாற்றியதில் Dr. சத்தியமூர்த்தியின் பங்களிப்புப் பெரிது. இப்பொழுது திறந்த இருதய அறுவைச் சிகிச்சையைக் கூட யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஏறக்குறைய ஒரு தேசிய மருத்துவமனையின் சேவைகளையும் வளங்களையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இன்று கொண்டுள்ளது.



மருத்துவர்களில் பெரும்பாலானோர் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். அதற்கான மனநிலையும் சூழற் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டிருப்பது இதற்கான அடிப்படையாகும். மக்கள் இன்று இந்த மருத்துவர்களை மிக அந்நியோன்னியமாக நேசிக்கின்றனர். குறிப்பாக கொரோனா நெருக்கடி நிலையில் தளர்வின்றி பணிசெய்யும் மருத்துவர்களும் பணியாளர்களும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். இதில் பணிப்பாளர் கொண்டிருக்கும் சிரத்தையும் களத்தில் அவர் முன்மாதிரியாக நடந்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

**மருத்துவமனையின் நிர்மாணம் மற்றும் கட்டமைப்பு விரிவாக்க வளர்ச்சியும்**

2015 க்குப் பின்னர் துரிதகதியில் போதனா மருத்துவமனையில் பல்வேறு நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று யாழ்ப்பாணம் மருத்துவமனை பெற்றிருக்கும் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியானது மக்களுடைய நம்பிக்கையின் குறியீடேயாகும். மருத்துவமனை வரலாற்றில் இது ஒரு பொற்காலமே. நவீன மருத்துவமனைக்கான உள்ளடக்கத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட - சிறந்த நிர்மாணிப்பணிகளை தான் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற கையோடு சத்தியமூர்த்தி ஆரம்பித்தார். இதற்காக அவர் மூன்று வழிமுறைகளைப் பின்பற்றினார். ஒன்று, அரச உதவிகளைப் பெற்றுக் கொண்டமை. இரண்டாவது, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வது. மூன்றாவது, புலம்பெயர் சமூகத்தினரின் பங்களிப்புகளை ஒருங்கிணைத்து உதவிகளைப் பெறுவது.

இந்த மூன்று வகையான உதவிகள் மற்றும் நிதிப்பங்களிப்புகளின் மூலமாக துரிதகதியில் மருத்துவமனையின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக சுகாதார அமைச்சினால் உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட இலகுக் கடன் மூலம் ஆறு தளங்களைக் கொண்ட விபத்து அவசர சிகிச்சைப் பிரிவின் முதல் இரண்டு தளங்களும் 2019 இல் திறந்து வைக்கப்பட்டது. இதன் பெறுமதி 590 பில்லியனாகும். மீதி நான்கு தளங்களுக்குமான ஒதுக்கீடு 1300 பில்லியன்.

இன்னொன்று குவைத் நாட்டின் செம்பிறைச் சங்கத்தின் நிதிப்பங்களிப்பினால் 530 பில்லியன் ரூபாய் பெறுமதியான மீள்வாழ்வுச் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சேவைகள் இன்றைய நிலையில் முக்கியத்துவமாக உள்ளன. கூடவே ஆஸ்பத்தியோடு ஆஸ்பத்திரி வீதியோரத்தில் அரச ஒசுசல என்ற அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தியின் விற்பனையகத்தையும் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளார் Dr. சத்தியமூர்த்தி. இதன் மூலம் குறைந்த விலையில் மருந்துப் பொருட்களையும் மருத்துவப் பொருட்களையும் மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இதைவிட சுகாதார அமைச்சின் நிதியில் சுமார் 100 க்கு மேற்பட்ட தாதியர்கள் தங்கக் கூடிய தாதியர் உள்ளக விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்திருக்கும் தமிழ்ச் சமூகத்தின் நிதிப்பங்களிப்பைப் பெற்று 112.5 பில்லியன் ரூபாய் பெறுமதியான 10 ஸ்லைஸ் சி.ரி ஸ்கானர் வாங்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச உதவியின் மூலம் தற்போது யாழ் போதனா மருத்துவமனையில் எம். ஆர். ஐ. ஸ்கான் இயந்திரம் பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் எம்.ஆர்.ஐ. ஸ்கான் செய்வதற்காக நோயாளர்கள் கொழும்புக்கு அல்லது கண்டிக்கே எடுத்துச் செல்லப்பட்டனர். இன்று அந்தச் சிரமம் இல்லை.

மேலும் புதிய துறைகள் உருவாக்கப்பட்டுள்ளதால் அதற்கான ஆளணி ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது என்பது உண்மை. இதைப் புரிந்து கொண்டு பலரும் புரியாமற் சிலரும் நடந்து கொள்கின்றனர்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

புலோலியூர் வேல்நந்தன்

# புதிதாய் வாசிப்போம் புதியதை யோசிப்போம்

## வாசிப்பு மாத சிறப்பு


## புதுப்புனல் 13

மணற்காடரின் ஒரு சிறு புள்ளின் இறகும் கலாநிதி ஸாதியா பௌஸரின் மலையகக் கவிதைகளும் மக்களும்

இது வாசிப்பு மாதம் வாசிப்புப் பண்பாட்டை கட்டியெழுப்பக் கூடிய பல்வேறு வகையான உரையாடல் வெளிகளும் செயற்பாட்டு வெளிகளும் வினைத்திறனுடன் செயற்படும் காலம். வாசிப்புப் பண்பாட்டில் தளமாற்றம் நிகழ்ந்துள்ளதே தவிர தலைமுறை தாண்டியும் வாசிப்புப் பண்பாடு இன்னமும் உயிர்ப்போடுதான் இருக்கிறது என்பதை மெய்ப்பிக்கும் பல செயற்பாட்டு வெளிகள் எம்மைச் சுற்றி இருப்பது அக மகிழ்வைத் தருகிறது. தனிமனித முயற்சியாகவும் நிறுவன முயற்சியாகவும் அதற்காக உழைத்துக் கொண்டிருக்கக் கூடிய அத்தனை பேரையும் போற்றிக் கொண்டு தீம்புனலின் புதுப்புனலில் இவ்வாரமும் வாசிப்பு மாதத்தையொட்டி இரு வேறுபட்ட பிரதிகளின் அறிமுகங்களோடு உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதலில் நாம் பார்க்க இருப்பது தற்போது புலம்பெயர் தேசத்தில் வாழும் ராஜாஜி ராஜகோபாலன் அவர்கள் மணற்காடர் என்ற புனைபெயரில் தந்துள்ள ஓவியா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள “ஒரு சிறு புள்ளின் சிறகு” என்ற தலைப்பில் அமைந்துள்ள பெருமளவிற்கு குறுங்கவிதைகளைக் கொண்டுள்ள கவிதைத் தொகுதியாகும். மிக எளிமையான அழகிய அட்டைப்பட வடிவமைப்புடன் இக் கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. கவிதையை பொறுத்து இது அவரது இரண்டாவது தொகுதியாகும். ஒரு ‘வழிப்போக்கனின் வாக்குமூலம்’ என்ற அவரது முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்து (2014) பல ஆண்டுகளின் பின் இத் தொகுப்பு வெளிவருகிறது. அந்தத் தொகுப்போடு ஒப்பிடும் போது உருவ உள்ளடக்க ரீதியாக இவரிடம் கவிதை குறித்து ஏற்பட்டுள்ள பல மாற்றங்களைத் தரிசிக்க முடிகிறது. தற்போது கனடாவில் வசித்து வரும் இவர் புலோலி மண்ணை பிறப்பிடமாகக் கொண்டவர். முகநூல் வெளிகளிலும் துடிப்போடு இயங்கி வருபவர். அண்மையில் இவரால் வெளியிடப்பட்டுள்ள “நாராயணபுரம்” என்ற நாவல் கூட, மண்வாசனை சார்ந்த சிறந்த நாவலாகக் கருதப்படுகின்றது.

இக் கவிதைத் தொகுதிக்கான பதிப்புரையை ஓவியா பதிப்பக வெளியீட்டாளர் வதிலைபிரபா அவர்கள் வழங்கியுள்ளார். இலையோடு இறுகப் பிணைந்த படி கிடக்கின்ற இந்த “ஒரு சிறு புள்ளின் இறகு”மாதிரி இவரது கவிதைகளும் நம் மனதோடு இறுகப் பிணைத்தபடி கவிநர்த்தனம் புரிகின்றன என்கிறார். இந் நூலுக்குரிய முன்னுரையை வழங்கியுள்ள கவிஞர் இந்திரன் அவர்கள் இக் கவிதைகள் எந்தவித ஆடம்பரமும் இன்றி எளிமையாகப் பூத்து நுட்பமான கவித்துவ நறுமணத்தைக் காற்றில் விதைக்கும் காட்டுப் பூக்களைப் போல வாசகனை ஆச்சரியப்படுத்துகின்றன என்கிறார். மண்ணின் நினைவுகள் என்பதாக மணற்காடர் இக் கவிதைத் தொகுப்பின் பிரசவ அனுபவங்களைப் பேசியுள்ளார்.




கவிதைக்குள் நுழைந்தால்

“பொட்டல் காடாக இருந்தாலென்ன
சொந்தமென்று சொல்ல
புழுதியாவது இருக்கிறதே” என்கிறது ஒரு கவிதை.
“விடிந்து விட்டது என்றார்கள்
சுதந்திரம் கிடைத்து விட்டதென்று
பிழையாக விளங்கிக் கொண்டேன்” என்கிறது

மற்றொரு கவிதை. மிக எளிமையாக ஆழமான அர்த்தங்களுக்கு அழைத்துச் செல்லும் கவிமன அனுபவங்களை இவை தருகின்றன.

“பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்துள்
அவள் வைத்த மயில் இறகு
ஒரு போதுமே குட்டி போட்டதில்லை
திருமணமான பிறகும்” என காதலின் நினைவு

களைப் பேசுகிறது மற்றொரு கவிதை. வித்தியாசமான எடுத்துரைப்பு முறைக் கவிதைக்கு சான்றாக

“பொன்னார் மேனியனே என்று
பூட்டிய அறைக்குள் பாடிக் கொண்டு
பணம் எண்ணுவார் எங்கள் தாத்தா
அன்னே உன்னையல்லால்
இனி யாரை நினைக்கேனே என்று அவர்
பாடி முடிக்கும் போது
பாட்டி சிரித்துக் கொண்டே சொல்லுவாள்
பாவம் சிவபெருமான்” என்ற கவி

தையைக் குறிப்பிடலாம். இதே போல மனதைத் தைக்கும் பல குறுங்கவிதைகளும் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக “ கிளையிலிருந்து பிரிந்து இலையோடு

இறுகப் பிணைந்தபடி கிடக்கிறது
ஒரு சிறு புள்ளின் இறகு” என்ற

கவிதையும்

“ஒருபிடி மண்ணும்
ஒரு பெட்டி நெருப்புக்குச்சும்
எடுத்து வைத்திருக்கிறேன்
எனது இறுதிச் சடங்கில்
நானும் பங்குபற்ற வேண்டும்
என்பதற்காக” என்ற கவிதையை


யும் குறிப்பிடலாம். சில இடங்களில் எல்லாம் அனுபவங்களையும் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பால் கவித்துவம் சற்றுக் குறைந்தாலும் பல இடங்களில் கவிதையை இவர் கையாண்டுள்ள முறையும் எளிமையும் புதிய கற்பனைகளும் வியப்பூட்டுவனவாய் அமைந்துள்ளன. காலம் தோறும் கவிதையின் சொல் முறையில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளும் கவிஞர்களே காலத்தை வென்று வாழும் கவிதைகளை தந்துவிட முடியும் என்பதற்குரிய கட்டியங் கூறல்களை இக் கவிதைத் தொகுப்பிலும் ஆங்காங்கு தரிசிக்க முடிகிறது. பல்துறை ஆளுமை கொண்ட எம் மண்ணின் படைப்பாளியின் இத் தொகுப்பை அறிமுகம் செய்வதில் தீம்புலனின் புதுப்புனல் அக மகிழ்வு கொள்கிறது.

புதுப்புனலில் அடுத்து அறிமுகம் காண்பது தென்கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளராகவும் மொழித்துறைத் தலைவராகவும் விளங்கும் கலாநிதி ஸாதியா பௌஸர் அவர்கள் வெளியிட்டுள்ள குமரன் புத்தக இல்ல வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ள “மலையகக் கவிதைகளும் மக்களும்” என்ற நூலாகும். மலையகக் கவிதைகள் தொடர்பாக அவர் மேற்கொண்ட பட்டமேற் கல்விக்கான ஆய்வு இப்போது விரிவாக்கப்பட்ட முறையில் நூலாக வந்திருப்பது சிறப்பு. இந் நூலுக்கான அணிந்துரையை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தமதுரையில் மலையகக் கவிதைகளை மிகப் பொருத்தமாகப் பகுப்பாய்வு செய்து இந்நூலிலே தரப்பட்டுள்ளமை இந்நூலின் ஒரு சிறப்பாகும் என்று கூறி இருப்பதுடன் இந்நூலைப் படிக்கும் போது மலையக மக்களின் நீண்டகால அவல வாழ்க்கை எங்கள் மனதைக் கவலைக்குள்ளாக்குகிறது என்று கூறியிருப்பதுடன் மலையகக் கவிதை விமர்சன வரலாற்றை மலையக மக்களின் வரலாற்றோடு இணைத்துக் கூறியிருப்பதும் இந் நூலின் சிறப்பு என்கிறார்.

நூலாசிரியர் தமது முன்னுரையில் இது வரை மலையகத்தில் எழுபது வரையான கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன தொகுதியாக வெளிவராத நூற்றுக் கணக்கான கவிதைகள், பத்திரிகை, சஞ்சிகைகள் முதலியவற்றில் வெளிவந்துள்ளன என்கிறார். இந் நூலானது பல்வேறுபட்ட இயல் பகுப்புகளாக அமைந்துள்ளன, “மலையக மக்களின் வரவும் ஆரம்ப காலகட்டப் பிரச்சினைகளும்” என்ற முதலாவது இயலில் மலையக மக்களது ஆரம்பகால வாழ்வியல் போராட்டங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. “மலையகக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்” என்ற இரண்டாவது இயல்

ஆரம்ப காலம் (1825-1920)
விழிப்புணர்ச்சிக் காலம் (1920-1950)
எழுச்சிக் காலம் (1950 தொடக்கம் இன்று வரை)

என காலகட்ட ரீதியாக மலையக கவிதைகளின் தோற்ற வளர்ச்சியை ஆராயும் இயலாக அமைந்துள்ளது. அந்த வகையில் நாட்டார் பாடல்களாகத் தொடங்கும் மலையக கவிதை மரபு காலம் தோறும் எவ்வாறு தன்னை மாற்றி அமைத்துக் கொண்டது என்பதை பல்வேறுபட்ட கவிதைத்




தொகுப்பு முயற்சிகள், கவிஞர்கள் பற்றிய ஆணவப் படுத்தல்கள் கவிதைகள் வழி எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமை சிறப்புக்குரியது. மிக விரிவாகப் பேசப்பட வேண்டிய நூலாக இது அமைந்துள்ள போதும் இப்பத்தி அதற்கு இடந்தராமையால் சுருக்கமானதொரு அறிமுகத்துடன் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. அடுத்து அமைகின்ற இரண்டு இயல்களும் மலையக மக்களது பல்வேறுபட்ட பிரச்சினைகள் அவற்றுக்கு எதிரான அரசியற் போராட்டங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டுகளாக சில மலையக கவிதைகளைக் கூறி நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

“பாதையிலே வீடிருக்க
பழனிச்சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏண்டி வந்தே கண்டிச்சீமை
ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்...” என்றவாறாக

மலையக கவி மரபின் தொடக்கப் புள்ளியான நாட்டார் பாடல்கள் அமைகின்றன.

கோண கோண மலையேறி...
எண்ணிக் குழிவெட்டி... போன்ற பாடல்

அடிகளையும் குறிப்பிடலாம். இந்த வகையில் மீனாட்சி அம்மை நடேசையர், சி.வி.வேலுப்பிள்ளை, சக்திபாலையா, குறிஞ்சித் தென்னவன், அல்அஸூமத், சி.வே.ராமையா, க.ப.லிங்கதாசன், சாரல்நாடன் தமிழோவியன், வெலிமடைக்குமரன், பூண்டுலோயா தர்மு, அரு.சிவானந்தன், முத்துசம்பந்தர், வீரா. பாலச்சந்திரன், சு.முரளிதரன், இரா.நித்தியானந்தன், சிவசேகரம், மல்லிகை சி.குமார், இராஜேந்திரன், பன்னீர் செல்வம், தம்பையா, குறிஞ்சிநாடன் (வெள்ளைச்சாமி), பெனி, மாரிமுத்து, சிவகுமார் என ஒரு மிக நீண்ட பட்டியல் வழி மலையகக் கவிதைகளில் கலந்தோறும் ஏற்பட்ட போக்கு நிலை மாற்றங்களை இவர் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய கவிஞர்கள் குறித்த சில விடுபாடுகளும் இதில் இடம் பெற்றிருக்கலாம். இவர்கள் அனைவரதும் கவிக் குரலின் பொதுக் குரலாய் சி.வி.வேலுப்பிள்ளையின் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையில் வரும்

புழுதிப் படுக்கையில் புதைந்த - எம்
மக்களைப் போற்றும் இரங்கற்
புகழ்மொழி இல்லை...

ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்
அடியின் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
இங்கு எவர் வாழவோ தன்னுயிர்
தருவன்... என்ற கவிவரிகளைக் காணிக்கை ஆக்கி

எம் சகோதரர்களாம் மலையக மக்களின் வாழ்வு விடியப் பிரார்த்தித்து... நூலாசிரியரின் பயணம் சிறக்க வாழ்த்தி, புதுப்புனலில் இந்நூலை அறிமுகம் செய்வதில் அகமகிழ்கிறோம்.

**தங்களுடைய நூல்கள் புதுப்புனலில் அறிமுகமாக வேண்டுமெனில் தங்களின் இரண்டு பிரதிகளை தீம்புனல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

# எழுத்தின் இயங்கியல்

## ஆரம்பித்தல்

மயூரரூபன்

எழுத்தின் இயங்கியல் என்பது ஒரு வகையான தொடர்ச்சியையும் மாற்றங்களையும் கூட்டிணைவையும் அடையாளப்படுத்தியிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். பொதுவாக அறிவினது வளர்ச்சிப் போக்கினை இயங்கியல் செயல் முறையாகப் பார்ப்பதுண்டு. அதே போல் நாம் அறிய முனைகின்ற அனைத்துப் பொருண்மைகளிலும் இத்தகைய இயங்கியல் தன்மையினை நாம் அடையாளங் காணமுடியும். குறிப்பாக, சமூகத்தின் கூறுகளில் இயங்கியல்ப் பண்பினை நாம் கண்டு கொள்ளலாம். சமூகம் தனக்குரிய வகையிலான நுண்கூறுகளாலானதும், மாற்றங்களை உள்வாங்கி, தேக்கமடையாத இயங்கு தன்மையைப் பெற்றிருப்பதை நாம் அறிய முடிந்தால் அதுதான் சமூகத்தின் இயங்கியல் ஆகும்.

இதுபோல பண்பாடு, இனம், கோட்பாடு எனப்பலவகை இயங்கியல் வடிவங்களைக் கண்டு கொள்ளலாம். அதுபோலவே எழுத்தும் தனக்கான இயங்கியல் தன்மையைக் கொண்டமைந்திருக்கிறது என்பது இயல்பான ஒன்று.

மார்க்சிய அறிதல் முறைகளிலேயே பொதுவாக இந்த 'இயங்கியல்' என்கிற பதம் அதிகமாகக் கையாளப்படுகிறது. குறிப்பாக,

1. இயங்கியல் பொருள்முதல்வாதம்
2. பண்பாட்டு பொருள்முதல்வாதம்

என்கிற இரண்டு விடயங்களை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

சமூகவியல் கற்கைப் பரப்புகளிலும் சமூக இயங்கியல் சார்ந்த எண்ணக்கருக்களும் தொடர்புடைய கோட்பாட்டு வடிவங்களும் இன்று அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

மார்க்சியம் - லெனினியம் இந்த இயங்கியல் என்பதை, சுழல்வட்டம் போல் நடக்கும் இயக்கச் செயல்முறையாக அடையாளங் காண்கிறது. இயங்கியல் அடுத்தடுத்த தொடர் படிமுறைகளைக் கொண்டதாகவும் விளக்கப்படுவது கவனத்திற்குரியது.

முதற் படிநிலை : புலனறிவு வாதம்

புற உலகிலுள்ள பொருட்களுடன் தொடர்பு கொள்கின்ற நிலையை இது குறித்து நிற்கிறது. அறிவென்பது அனுபவங்களிலிருந்து தொடங்குகிறது என்கிற விடயத்தைப் புலனறிவு வாதம் பேசுகிறது. இது பொருள்முதல்வாத அறிவுக் கோட்பாடாகச்

> **"எழுத்தும் தன் இயங்கியலில் இதனைத்தான் செய்கிறது. வாசிப்புக்கான பிரதி என்பது மீண்டும் சமூகத்தை நோக்கிய இயக்கமே. சமூகத்திலிருந்து சமூகத்தை, இயல்பை, இருப்பை அறிந்து கொண்ட ஒருவன் அதனை பகுத்து, உணர்ந்து, கால, தள இயல்புக்கேற்ற வகையில் ஒருங்கிணைத்து உருவாக்கும் பிரதியை மீண்டும் சமூகத்துக்கு வெளிப்படுத்துகிறான்."**

சொல்லப்படுகிறது.

எழுத்தின் இயங்கியலிலும் நாம், ஒரு தனியனை அவனது சுயத்தை, உளவியலை, சமூகத்தை, அதன் கூறுகளை அறிந்து கொள்ளுகின்ற ஆரம்ப நிலைகளை (எழுத்துக்கு முன்னான நிலை) இந்த முதற்படிநிலையாக அடையாளங்கண்டு கொள்ளலாம்.

இரண்டாம் படிநிலை : பகுத்தறிவு வாதம்

முன்னர் நாம் புலனறிவு வாதத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அறிவை ஒழுங்குபடுத்துவதும், கட்டமைப்பதும் ஒருங்கிணைப்பதும் பகுத்தறிவு வாதமாகச் சொல்லப்படுகிறது.

இது இயங்கியல் பொருள்முதல் வாதத்திற்கான இயல்புகளை அடையாளப்படுத்தக்கூடியது.

எழுத்தின் இயங்கியலில் நாம் முதற்பகுதிகளில் பார்த்த, கருத்துருவம், உடல், கோட்பாடு என்பன நாம் முதல்படிமுறையில் அறிந்து கொண்ட சமூகத்தை, தன்னை, அதன் அரசியலை வகைப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் வகை செய்கின்றன. இங்கு எழுத்துக்கான உருவாக்குதல், மதிப்பிடுதல், உய்த்துணர்தல் என்கிற இயங்கு தன்மைகள் கொடுக்கப்படுகின்றன.

மூன்றாவது படிநிலை : கோட்பாட்டிலிருந்து நடைமுறைக்கு நகர்தல்.

அறிவு மற்றும் அறியப்பட்டவை கோட்பாட்டறிவுக்கூடாகத் தேவையான நகர்வைப் பெற்றுக் கொள்ளும். அது ஒரு நடைமுறை நோக்கிய நகர்வாக அமையும்.

இங்கு நடைமுறையிலிருந்து அறிதல் நிலைக்கு வந்து பின்னர் நடைமுறைக்குச் செல்லுகின்ற ஒரு சுழல் ஒழுங்கை நாம் காண முடிகிறது. கோட்பாட்டை பரிசீலித்து அதனை வளர்க்கின்ற செயன்முறையாகவும் இதனை நாம் காணலாம்.

எழுத்தும் தன் இயங்கியலில் இதனைத்தான் செய்கிறது. வாசிப்புக்கான பிரதி என்பது மீண்டும் சமூகத்தை நோக்கிய இயக்கமே. சமூகத்திலிருந்து சமூகத்தை, இயல்பை, இருப்பை அறிந்து கொண்ட ஒருவன் அதனைப் பகுத்து, உணர்ந்து, கால, தள இயல்புக்கேற்ற வகையில் ஒருங்கிணைத்து உருவாக்கும் பிரதியை மீண்டும் சமூகத்துக்கு வெளிப்படுத்துகிறான்.

பெற்றுக் கொண்டது அப்படியே மீண்டும் போய்ச் சேரவில்லை. அங்கு அந்தப் பிரதிக்கான எழுத்து ஒரு நிலைத்த பொருண்மைத் தன்மையையும் நிலையற்ற இயங்கியலையும் கொண்டிருக்கிறது. அதுவே எழுத்தின் இயங்கியலாக அறியப்படக் கூடியது.

இங்கு சமூக இருப்பிற்கும் அல்லது நடைமுறைக்கும் எழுத்தின் இயங்கியலுக்கும் இடையில் பாரிய வேறுபாட்டை நாம் காண்கிறோம். இரண்டும் எதிரிடைப் பண்புகளாலும் விமர்சனங்களாலும் உருப் பெற்றவை. தங்களை இந்த இயங்கியல் தன்மையால் புதுப்பித்துக் கொள்வதை நாம் பார்க்கிறோம்.

மனிதன், தன்னை, சமூகத்தை, அதன் கூறுகளை, அதிலுள்ள மாற்றங்களைப் புரிந்து கொள்கிறான். தனக்கேற்ற வகையில் அடையாளமிட்டு ஒழுங்குபடுத்திக் கொள்கிறான். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வான். அவனுக்கான பிரதி அவனுக்குரிய இயங்கியலையே கொண்டிருக்கும். இன்னொரு வகையில் வாசிப்பவனிடமும் இவ்வாறான ஒரு மூன்று படிநிலைகளிலாலான தொடர் செயல்நிலை நடைபெறும். அங்கு வாசிப்பவன் தனக்கான இயங்கியலைப் பிரதியிடம் அடையாளங்கண்டு கொள்கிறான்.

எழுத்து கொண்டிருக்கக் கூடிய இயங்கியல் தன்மை என்பது இரண்டு தளங்களில் உணரப்படக் கூடியது.


1. மாற்றங்களிலாலானது
2. ஒருங்கிணைந்த இயக்கங்களிலாலானது

மாற்றமும் ஒருங்கிணைந்த இயக்கமும் சமூகப் பொருண்மைகள் ஒவ்வொன்றிலும் மாற்றமின்றி நிகழக் கூடியதே.

இன்னொரு வகையில் எழுத்து என்பது இரண்டு வகையான இயந்திர இயல்பு நிலைகளாலானது.


1. நிலையான தன்மை (Static Mode)
2. இயங்கியல் தன்மை (Dynamic Mode)

நிலையான தன்மை என்பது, எழுத்து எவ் வகையில் உருவாக்கப்பட்டது? அவற்றின் நுண் கூறுகள் என்ன? இணைந்து என்ன உருவத்தைப் பெற்றிருக்கிறது என்கிற ஒரு பௌதீக அடையாளத்தைக் காட்டுகின்றமையாக அமையும்.




இங்கு இத் தொடரில், எழுத்தின் இயங்கியல் பகுதிக்காக என்னால் குறித்துச் சொல்லப்பட்ட பகுதிகளை மேலே ஒரு சிறிய ஒழுங்கில் தந்திருக்கிறேன். இவை ஒவ்வொன்றும் இணைந்து முழுதளாவிய ஒரு உருவத்தை எழுத்தின் இயங்கியலுக்கு வழங்குகிறது. ஒவ்வொன்றையும் இணைத்து ஒருங்கிணைத்து நாம் வரைகின்ற அறிதற் கோடுகளிலான அந்தச் சித்திரத்தை எமக்குள் உருவாக்கும். அதுவே அதன் நிலையியல் தன்மை.

இயங்கியல் தன்மை என்பது, ஒவ்வொரு கூறுகளும் தங்களுக்குள் தனித்தனி தொடர் இயக்கத்தைக் கொண்டிருக்கும் அத்தோடு முழுதளாவிய ஓர் ஒட்டு மொத்த இயக்கத்தை அது ஒருங்கிணைத்து தோற்றுவிக்கும்.






இந்த விளக்கப்படம் சற்றுக் குழப்பகரமானதான தோற்றத்தைத் தரலாம். ஆனாலும் நாம் சுருக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டியது. எடுத்துக்காட்டாக, கருத்துருவத்துக்கும் மொழிக்குமான தொடர்பியக்கம் உண்டு. மொழிக்கும் வரலாற்றுக்குமான தொடர்பியக்கமுண்டு. இவ்வாறு ஒவ்வொரு தனித்தனிக் கூறுகளும் ஏனைய தனித்தனிக் கூறுகளுடன் ஓர் தொடர்பியக்கத்தைக் கொண்டுள்ளன. இந்த பரஸ்பர தொடர்பியக்கம், சிந்தனையை, புரிதலை, அணுகுமுறையை, வாசிப்பை, எழுத்தை, கோட்பாட்டுப் புரிதலை, விமர்சனத்தை என எல்லாவற்றையும் ஒரு வேறு தளத்திற்கு நகர்த்திச் செல்லக் கூடிய இயங்கியல் தன்மையை கொண்டமைந்திருப்பதை விளங்கிக் கொள்ள முனைவோம்.

உண்மையில் ஒரு எழுத்து ஒரு குறிப்பிட்ட ஒரு பொருளுடன் மட்டும் வைத்து பொருத்திப் பார்ப்பது என்பது பொருத்தமற்றது. அதே நேரத்தில் எழுதிய வரை, அவரது உழைப்பை சொற்பமானதாக்கும் வேலையையும் செய்து விடுகிறது. நாங்கள் அங்கிருக்கின்ற உழைப்பையும், அது கொண்டிருக்கக் கூடிய புறத் தோற்றங்களையும் அக இயக்கத்தையும் ஒரு சேர கவனிக்கத் தவறிவிடுகிறோம்.

தெலூஸ் - கத்தாரி என்கிற கோட்பாட்டுச் சிந்தனையாளர்கள் ஒரு விடயத்தைக் கூறுகின்றனர். அது இங்கு மிகவும் பொருத்தமானது. இயற்கையில் வேர்கள் பூமியில் ஆழமாகச் செல்லும் ஆணிவேர் மற்றும் பல்வேறாகப் பிரிந்தும், பக்கம் பக்கமாகச் சார்ந்தும் வட்டமாகக் கிளை பிரியும் வேர்கள் என்றும் இரண்டு இருக்கின்றன. இவை இரண்டு என்ற ஆதிக்கத்துக்கு உரியதாக இல்லை. மனிதனின் சிந்தனைக்கு உரியதாக இல்லை. மனித சிந்தனை என்பது இயற்கையை விடப் பின்தங்கி இருக்கிறது. எனவே ஒரு புத்தகம் என்பது சிந்தனையால் ஆனது என்பதால் அது இயற்கையை விட பின் தங்கியிருக்கிறது. அது இயற்கையின் யதார்த்தப்படி ஓர் ஆணி வேராகும். அந்த வேர் அதனுடைய மைய அச்சாக, முதுகுத்தண்டாக இருக்கிறது. அதைச் சுற்றிலும் இலைகள் சூழ்ந்திருக்கின்றன. அப்போது அது மரம் அல்லது வேர் என்கிற படிமத்துடன் பொருத்திப் பார்த்தால் அது முடிவற்று ஒன்று, இரண்டு ஆக மாறுவதையும், இரண்டு நான்காக மாறுவதையும் காணலாம்.

ஓர் எழுத்து இவ்வாறானதுதான். எழுத்தின் இயங்கியலைப் புரிதல் என்பது மிகவும் இரசனையானது. அதேநேரத்தில் உழைப்பைச் சிறிது வேண்டக் கூடியது.

■

# ஊராளர்

இ.சு.முரளிதரன்

நாட்டில் நல்லவர்கள் இருப்பதனால்தான் உலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்று சங்ககாலத்துப் பாடலொன்று வெளிப்படுத்துகின்றது. அவ்வாறு ஒரு ஊரில் பல்வேறு மனிதர்கள் பல்வேறு இயல்புகளுடன் இருக்கின்றார்கள். அதில் சுயநலம் விரும்பிகளாக அதிகமானவர்கள் இருக்கின்ற போதும் பொதுநலத்தின் மீது அதி தீவிரமான நம்பிக்கை கொண்டு செயற்படுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர் களை ஊக்கப்படுத்தவும் அவர்களைக் கௌரவிக்கவும் வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உரியது. அத்த கையோரை இனங்கண்டு வெளிக்கொண்டு வருவது சிறப்பு.

-ஆசிரியர்

உலகம் கவனிக்கத்தவறிய உன்னத மனிதர்கள் ஒவ்வொரு ஊரிலும் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். மனிதம் வளர்த்த இத்தகைய புனிதர்கள் அந்தந்த ஊரின் அடையாளமாகத் திகழ்கிறார்கள். அவர்கள் மண்ணுட் புதைந்து வருடங்கள் பல கடந்தாலும் அவர்கள் குறித்த நினைவுகள் நெகிழிப்பண்போடு பிரிகையடையாமல் நிலைத்து நிற்கின்றன. உணவின் அரசியலே ஆதியானது. அதுவே மணிமேகலையில் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என நீதியானது. அனைத்து உயிரினங்களுக்கும் உணவு கிடைக்க வேண்டுமென்ற மானுடப் பெருங்கனவைச் சுமந்தபடி கிராமங்களிலும் உன்னத மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அத்தகைய ஊராளர்களில் ஒருவரான கு.பாலகிருஷ்ணன் குறித்த பதிவே இது.

வடமராட்சி கரணவாய்ப் பிரதேசத்தின் பூவரந்திட்டி மயானத்திலே அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையிலே கல்லறையொன்று காணப்படுகின்றது. அக்கல்லறைக்குள்ளேதான் "பாலன் சித்தப்பா" என அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற அந்த உத்தமர் மீளாத்துயில் கொள்கிறார். வெற்றிகாட்டுப் பிள்ளையார், கலட்டிப் பிள்ளையார், கருப்பையடி அம்மன், தென் கருணையூர் முருகன் என்னும் முதன்மைத் தெய்வங்களும் நரசிங்கர், வைரவர், முதலியர் போன்ற உப கடவுளரும் பரிபாலனம் நிகழ்த்தும் கரணவாய் தெற்குக் கிராமத்திலே கு.பாலகிருஷ்ணன் என்ற கடவுள் மறுப்பாளரும் வாழ்ந்திருக்கின்றார். உயர்திணைகளுக்குக்கூட மரியாதை வழங்கத் தெரியாத மாண்புகளின் மத்தியில், அஃறிணை எனத் தமிழிலக்கணம் குறிப்பிடும் நன்றிமிகு ஜீவன்களான நாய்களை நேசித்தவர்.

தினமும் தன் கையாலேயே பிரத்தியேகமாகச் சமைத்துப் பொதி செய்து கிராமத்துத் தெருக்களில் வாழ்கின்ற நாய்களுக்கெல்லாம் உணவு கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வீட்டிலும் ஆறேழு நாய்களை வளர்த்தார். தெருவின் ஒவ்வொரு இடத்திலும் அவரின் வருகைக்காக நாய்கள் காத்திருக்கும். தினமும் உணவை வைத்துவிட்டு அந்த ஜீவன்களை அன்போடு தடவுவார். அந்தத் தருணத்திலே அவை தாய்ப்பறவை ஒன்றின் சிறகின் கதகதப்பை உணரும் குஞ்சுகளாய்க் குதூகலிக்கும். வாலை அசைத்து நன்றியை வெளிக்காட்டும். அவரது உள்ளங்கையின் மென் சூட்டிலே அந்த ஜீவன்கள் கடவுளின் ஸ்பரிசத்தை, கலப்படமற்ற காருண்யத்தை உணர்ந்திருக்கும். சக மனிதர்களிடையே பேதங்காட்டுமளவிற்கு மூளைச்சலவை செய்யப்பட்ட அனைவருக்கும் அவரின் செயற்பாடுகள் அந்நியமாகவே தெரிந்திருக்கலாம்.



ஜீவ காருண்யத்தின் மீதான இரும்புத் திரையைத் தகர்த்தபடி தன் வாழ்வினை அவர் முன்னெடுத்தார். நடப்பியல் சூழலைப் போல முகநூல் விளம்பரத்திற்காக அவர் எவற்றையுமே செய்யவில்லை. அவரது இதயம் உயிர்களின் மீதான நேசத்தால் நிரம்பியிருந்தது. எனவே பூவரந்திட்டி மயானத்திலே வெறுமனே சாம்பலாகிப் போவதிலே அவருக்குச் சம்மதமில்லை. மரணத்தின் பிறகும் மண்ணுள் வாழும் உயிர்களுக்குத் தனது உடல் உணவாகிப் போக வேண்டுமென்பதே இறுதி விருப்பாக அமைந்திருந்தது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தவரை மட்டும் ஒருமையில் பெயர் சொல்லி அழைக்கும் ஆணவத்தை, என் குழந் தைப் பருவத்திலே பலரிடம் கண்டிருக்கிறேன். பெரி யவர்களைப் பின்பற்றிச் சிறுவர்களும் அவ்வாறே அழைத் தனர். குறித்த நபர்களின் பெயரோடு "மாமா" அல்லது 'அங்கிள்' என்ற பின்னொட்டினை இணைத்து அழைக் கும் வழக்கத்தை "பாலன் சித்தப்பா" சிறார்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். அத்தோடு மனித சமத்துவம் பற்றியும் பிஞ்சுகளின் மனதிலே ஆழப்பதிக்க முயன்றார். அவ்வூர் இளைஞர்கள் துடுப்பாட்டத்தில் மிளிரப் பின்புலமாகவும் அமைந்திருந்தார். பதின்ம வயதினருக்கு பந்துவீச்சு நுட்பங்களையும், துடுப்பின் கையாளுகையினையும் நட்போடு கற்றுக் கொடுத்தார். சதுரங்கம், சீட்டுக்கட்டு, போன்றவற்றிலும் அறிவார்ந்த நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

இளவயதில் வறுமையின் பிடியிலே வாழ்ந்தாலும், அக்கறையோடு கல்வி பயின்று ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி சென்று ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் தொழில்நுட்பவியலாளரானார். மும்மொழி ஆற்றலோடு திகழ்ந்தார். மொழிபெயர்ப்பிலும், தட்டெழுத்திலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். 1960 களில் ஜோர்ஜ் ஹாரிசன், ரிங்கோ ஸ்ரார், பால் மெக்கார்ட்னி, ஜோன் லெனொன் என்னும் நால்வர் அடங்கிய "Beatles" இசைக்குழுமம் பிரபலமடைந்திருந்தது. அவர்களின் இசையினைப் பெருவிருப்போடு கேட்டு நண்பர்களுக்கும் பரிந்துரை செய்தார். நாதஸ்வர - நட்டுவ கிராமிய இசைமீதும் அலாதியான விருப்புக் கொண் டவர். பத்திரிகைகள், சஞ்சிகைள் உட் பட பன்முகப்பட்ட நூல்களையும் ஆழமாக வாசிக்கும் பண்புடையவர். தொலைக்காட்சியில் "The Muppet show" மற்றும் துடுப்பாட்டப் போட்டிகளை விருப்புடன் பார்ப்பார். சோமசுந்தரப்புலவரின் பாடல்களையும் அர்த்தம் செறிந்த திரைப்பாடல்களையும் குறித்து சிலாகித்துப் பேசுவார்.

என் முதலாவது நூலான "நுங்கு விழிகள்" ஹைக்கூத் தொகுப்பின் முதற் பிரதியினை தூய மனிதர் ஒருவருக்கே கொடுக்க வேண்டுமென விரும்பினேன். முதற் பிரதியினைப் பெற்று என்னை கௌரவித்தார். எனது திருமண நாளிலே தான், அவரது மூத்த மகளுக்கும் திருமணம் நிகழ்ந்தது. அன்றைய தினம் என் வீட்டுக்கு வந்து ஆச்சரியப்படுத்தினார். பாலறுகு வைத்து வாழ்த்தி விட்டுச் சென்றார். பேரப்பிள்ளைகளின் வயலின் இசையோடு நிகழ்ந்த அவரது இறுதியாத்திரை ஒன்பது வருடங்களுக்குப் பின்னரும் நீங்காத நினைவாகவேயுள்ளது. இத்தகைய உன்னத ஊராளர்களின் வாழ்வினைப் பாடமாகக் கற்று உய்வடைய வேண்டியது மனித சமூகத்தின் தலையாய கடமையாகும். ■

---

# எல்லாமே நாங்கள்தான்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் சந்தையினை நிறைத்தன. இதனால் உற்பத்தியின் போது மட்டுமல்லாமல் உற்பத்திக்குப் பின்னான நிலையிலும் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் அதிநச்சுத்தன்மை கொண்ட இரசாயனங்களால் செறிவூட்டப்பட்டன.

இங்கு பட்டினித் தவிர்ப்பு தந்திரோபாயமாக உணவு ஒரு சந்தைப் பண்டமாக மாற்றப்பட்டு அதனூடாக அதிக இலாபத்தைத் தேடும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை உலக மாந்தருக்கு ஆரோக்கியமாக உணவினை வழங்குதல் என்ற அறவொழுக்கம் முழுமையாக மீறப்பட்டது.

மேற்கத்தைய வல்லரசு நாடுகளின் பாரிய விவசாயப் பண்ணைகளின் உற்பத்தி விளைபொருட்களுக்கு நுகர்வுச் சந்தையாக அபிவிருத்தியில் குறைவடைந்திருந்த தேசங்களும் மக்களும் மாற்றப்பட்டனர். சொந்த நாட்டினதும் ஊரினதும் சிறு உழவர்களும் விவசாயிகளும் விலங்கு வேளாளர்களும் பாற்பண்ணையாளர்களும் இறக்குமதி செய்யப்பட்ட அந்நிய உணவுப்பொருட்களின் ஆக்கிரமிப்புக்கெதிராக போட்டியிட முடியாமல் தோற்றுப் போகச்செய்யப்பட்டனர். சமகாலத்தில் அமெரிக்காவின் கோதுமை, சோளம் போன்ற பொருட்களை உற்பத்திசெய்யும் விவசாயிகளின் இலாபவீதம் குறைந்து விடாதபடி உயர் விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையினையும் சோளத்தையும் சீனியையும் வாங்கி எமது மக்கள் அமெரிக்க விவசாயிகளையும் நியூசிலாந்து பால்பண்ணையாளர்களையும் காப்பாற்றுகின்றார்கள். இதனூடாக மிகப்பெரிய பொருளாதார காலனித்துவம் எமது சமையலறைகளுக்குள்ளும் உணவுப்பண்பாட்டிற்குள்ளும் எமது நாவின் சுவையுணர்வு நரம்புகளுக்குள்ளும் ஊடுருவியுள்ளது.

உணவுப்பாதுகாப்பு செயன்முறையின் எந்தவொரு நிலைமைகளிலும் ஆரோக்கியமானதும் உண்ணும் மக்களின் கலாசாரத்திற்கும் பௌதீக உடலியல் தன்மைகளுக்கு ஏற்புடைத்தானதும் உண்பவர்களின் உடல் ஆரோக்கியத்தையும் ஆயுள் நீட்டத்தையும் பாதிக்காததும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்துடன் இணைந்ததாகவும் பேண்தகு தன்மை கொண்டதும் சுற்றுச்சூழலுக்கு இசைவானதுமான உணவு உற்பத்தி முறைமை என்ற விடயங்கள் எல்லாமே இங்கு புறந்தள்ளப்பட்டன.

தற்போது எங்களது கவனத்தை ஈர்த்துள்ள உணவு இறைமையாண்மை என்ற கருப்பொருள் மற்றுமொரு சிந்தனைத்தளத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்ட விடயமாக மேலெழுந்துள்ளது.

உணவு இறையாண்மை என்ற எண்ணக்கருவினை ஆறு தூண்கள் தாங்குவதாக துறைசார் விற்பன்னர்களும் சிந்தனையாளர்களும் வாதிக்கின்றார்கள். மக்களுக்கான உணவு (Focuses on Food for People) என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கானது, பட்டினியை எதிர்கொள்பவர்களுக்கானது, யுத்தங்களாலும் ஒடுக்குமுறைகளாலும் எல்லைப் படுத்தப்பட்ட மக்களுக்கானது, போசாக்கின்மையாலும் தொற்று நோய்களாலும் பரம்பரைத் தொற்றா நோய்களாலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் மக்களுக்கானது, அழிவின் விளிம்பிலிருந்து மீண்டெழுவதற்குத் துடிக்கும் தனிமனிதர்களுக்கும் குடும்பங்களுக்கும் சமூகங்களுக்குமானது என்ற ஆழமான பார்வை உணவு உற்பத்திக்காக வளங்களையும் நிறுவனங்களையும் ஈடுபடுத்தும்போதும் அதனை களஞ்சியப்படுத்தி பதனிட்டு சந்தைப்படுத்தும் போதும் இருக்கவேண்டும்.

உணவு வழங்குபவர்களுக்கு மதிப்பளித்தல் (Values food Providers) உணவினை உற்பத்தி செய்யும் பொறிமுறையில் பலதரப்பான உழவர்கள், உடலுழைப்பாளர்கள், உற்பத்திக்கான உபகரணங்களையும் கருவிகளையும் தயாரித்து பராமரிக்கும் கைவினைக் கலைஞர்களும் கம்மாளர்களும் அறுவடையிலும் களஞ்சியப்படுத்தலிலும் பதனிடலிலும் சந்தைப்படுத்தலிலும் ஈடுபடும் பல் துறை உழைப்பாளர்கள் என அனைவரதும் பங்களிப்பும் உழைப்புச்சுரண்டலுக்கும் கூலிச்சுரண்டலுக்கும் அப்பாற்பட்ட முறையில் மதிப்பளிக்க வேண்டும்.

உள்ளூர் மயப்படுத்தப்பட்ட உணவுத்திட்டம் (Localises food system) உணவுப்பொருட்களின் வகைகளும் அவற்றை பதனிடல் பொதியிடல் களஞ்சியப்படுத்தல் முறைமைகளும் அந்தந்த மக்களின் வாழ்வியல் பௌதீகவியல் சூழலியல் காலநிலை மற்றும் சீதோசண தட்பவெட்ப மாற்றங்கள் ஆகியவற்றுக்கு இணைந்ததாக தெரிவுசெய்து

உள்ளூரின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் (Puts control Locally) உணவு உற்பத்திக்கான விளைநிலங்களும் அதனை அணுகுவதற்கும் பயன்படுத்துவதற்கான உரிமையும் வளங்களை ஒதுக்குதலும் விதைகளையும் நாற்றுக்களை உற்பத்தி நோக்கங்களுக்காகத் தயார்நிலையில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தலும் உற்பத்திக்கான ஏனைய அத்தியாவசிய உள்ளீடுகளான பசளைகள் களை மற்றும் நோய்கொல்லிகள் விவசாய உபகரணங்கள் பொதியிடலுக்கான பொருட்களும் கருவிகளும் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்ற விடயங்கள் யாவும் உள்ளூர் மக்களினதும் அவர்களின் நிறுவனங்களினதும் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். அறிவினையும் வினையாற்றல்களையும் கட்டியெழுப்பல் (Builds Knowledge and skills) உள்ளூர் மக்கள் தங்களுக்கான ஆரோக்கியமான உணவினை ஏற்புடைத்தான முறைகளைப்பின்பற்றி உற்பத்தி செய்வதற்கும் களஞ்சியப்படுத்தி பாதுகாப்பதற்கும் தங்களது விவசாய உபகரணங்கள் மற்றும் கருவிகளை சீர்செய்து பராமரித்து பாவிப்பதற்கும் நியாயமான விலையில் சந்தைப்படுத்துவதற்கும் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களைக்கொண்டு ஆரோக்கியமான முறையில் உணவுகளைத்தயாரித்து தங்களுக்கிடையில் பகிர்ந்துண்பதற்கும் தேவையான அறிவினையும் வினைத்திறன்களையும் கொண்டவர்களாகவும் அதனை தொடர்ச்சியாக மேம்படுத்தும் ஆர்வம்கொண்டவர்களாகவும் அடுத்த தலைமுறைக்கும் அதனைப் பரிமாற்ற வேண்டிய கடப்பாட்டினை உணர்ந்தவர்களாகவும் கட்டியெழுப்பப்படவேண்டும்

இயற்கையுடன் இணைந்து வேலைசெய்தல் (Works with Nature) உணவு உற்பத்திகளின் போது ஒதுக்கப்படும் நிலங்களும் மீள்புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்கள் யாவும் தொடர்ச்சியாக அடுத்த பலநூறு தலைமுறைக்கும் உரித்தானவை அவற்றை நாங்கள் அபரிமிதமாகப் பயன்படுத்தி விரயமாக்குவதற்கான உரிமை கொண்டவர்களல்ல என்ற மிகவும் ஆழமான பொறுப்புணர்வுடன் இயற்கைக்கும் சுற்றுச்சூழல் காரணிகளுக்கும் இசைந்ததாக உணவு உற்பத்தி தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

எங்களது பரந்த நிலம் உற்பத்தி முயற்சிகளால் காப்பாற்றப்படவேண்டும்.

எங்கள் மனிதகுலம் ஆரோக்கியமானதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நெறிமுறைகளுக்கு அமைய உற்பத்தி செய்யப்பட்ட உணவினால் வலுவூட்டப்படவேண்டும்.

எங்களை வாழவைக்கும் பாரம்பரிய தாய்நிலம் தனது கருவளம் குன்றாமலும் எமது அடுத்த பலநூறு தலைமுறைகளுக்கு உணவளிக்கும் அமுதசுரபியாக பாதுகாக்கப்படவேண்டும்.

எமது குழந்தைகள் தங்களது பிறப்பாற்றல்களால் முதன்மைபெற்ற அதிமானிடர்களாக இவ்வுலகை வெல்வதற்கு அவர்களது பெற்றோர்கள் தாங்கள் அணிந்துள்ள வர்ணக் கண்ணாடிகளைக் கழற்றியெறிந்துவிட்டு தங்கள் பிள்ளைகளை ஆற்றல் மிகு அவதாரங்களாகப் பார்க்கவேண்டும். ■

# என்ன உலகமடா பரமானந்தா? 25

தமிழ்க்கவி



“சிரிச்சுச் சிரிச்சு வந்தா சீனாத்தானா டோய்” எனக்கு நல்லாப் பிடிச்ச தத்துவப் பாட்டடா. சும்மா மேலால அண்ணாந்து பாத்துக் கொண்டு ‘ரைட்டோ ரைட்டோ’ எண்டு கேட்டுக் கொண்டு கெந்திக் கோடு விளையாடுகினமெல்லா? அதிலயே ஒரு தத்துவம் கிடக்காம். கால கீழ வச்சுக் கொண்டு கண்ணை மேல வச்சுக் கொண்டு நடந்தாலும் முள்ளியில் மிதிக்காம இலக்கில நடக்க வேணுமாம். உதுதான் வாழ்க்கைப்பாடமாம். எனக்கெண்டாச் சிரிப்ப அடக்க ஏலாமக்கிடக்கு.

இரு, எட எட எட இது நான் சொல்லேல்லயடா உந்த முகநூலில ஒருவர் விளம்பியிருக்கிறார். என்ன விளம்பியிருக்கிறார் எண்டா ஒரு நக்கலே. பேயா தமிழில நாங்கள் வாய் திறந்து பேசுறதை எப்பிடிப் பேசினம் எண்டதை காட்டிற மாதிரித்தான் சொல்லுகள் இருக்கு. அதை ஏன்ராப்பா நான் பிரயோசனப்படுத்தாம விடுறனே. பின்ன ஒருத்தர் கதைச்சதை அப்பிடியே சொல்லாம அதுக்குச் சரியான அர்த்தத்தைக் குடுத்துச் சொல்ல வேணும் பொடியா.. பார் பார் இப்ப சொன்னியே அலம்பாமப் போணை எண்டு. ஙா...அலம்புறது பேசுறதுக்குள்ள சொல்லுத்தான் மேல பறையாம கதையக்கேள். ஒருத்தர் தன்ர கருத்தச் சொல்லத்தான் மொழி ஆனா எப்பிடிச் சொல்லுறார் எண்டதை விளக்கப் பேசுதல் எண்ட சொல் தமிழ்ழ முப்பத்திரண்டு வகை இருக்கு. தெரியுமோ..பேசு, சொல்லு, கதை, கத்து, கரை, கழறு, கூவு, குழறு, பசப்பு, பரப்பு, பறை, புறுபுறு, புலம்பு, அறை, அலம்பு, அழற்று, அரற்று, அதட்டு, ஆரவாரம், இரை, விளம்பு, உரை, உழறு, உரப்பு, உறுமு, ஏசல், தூற்று, துடி,துதி, நவில், நயத்தல், குரை. இரடா கொஞ்சம் மூச்சு வாங்கிக் கொள்ளுறன்.

உந்தச் சிரிச்சுச் சிரிச்சு வந்தா சீனாத்தானா டோய்’ எங்கட நாட்டுக்க வந்த சினாபாம்தானடா. ஐயோடா காஞ்ச மாடு கம்பில விழுந்தமாதிரிச் சனமெல்லாம் ஓடுப்பட்டு ஊசி போட்டதுகளும் பயத்தில வீட்ட வந்து வயித்தால போனதுகளும் தலையச்சுத்துது எண்டு படுத்ததுகளும், இப்ப வெளிநாடுகளுக்குப் போக ஏலாதாம். மத்திய கிழக்கில வேலைக்குப் பதிஞ்சு போட்டு ஆயிரக்கணக்கில கழிபட்டு நிக்கினயாம். மெய்யேடா பொடி, முதல் ஒரு ஊசி போட்டவைக்கு இன்னு மொண்டை போட்டுப் பாத்தவையாமே அவைக்குப் பக்க விளைவுகளும் கூடவாம் எண்டு பேப்பரில போட்டிருந்தது. ஆரோ செய்த பிழை ஆரையோ சூழுது. உதுதான்ரா அந்தப் பாட்டில வருது. அது சரி இப்ப உந்த அரசாங்கம் எடுத்த சினாபாமை ஒருத்தரும் போட மாட்டமெண்ணப் போகினமே. நாலாபக்கத்தாலயும் அரசாங்கம் இடாருக்க எம்பிட்ட எலிமாதிரி நிக்கிது. இதோட ஆட்டம் குளோஸ். சுகம் வரும் ஆள் தப்பாது. எட அமெரிக்கன் மாவும் இல்லை. நியூசிலாந்தான் பால்மாவும் இல்ல. கடையள் ஒளிகடையளாப் போச்சு.

சீனாத்தானா டோய்ல, ‘தப்புகள் நடந்ததாலதான் தத்துவம் பிறந்துதாம். இன்னும் தத்துவம் பிறக்கட்டும் தப்புச் செய்யேன்ரா’ எண்டொரு வரி வருதடா... அதுக்கு மேல என்னடா... அஞ்சு புலனில வயித்த மட்டும் கவனிச்சு ரொப்பி விட்டாப் போதுமோ மற்ற நாலையும் என்ன செய்யிறது எண்டொரு இடார் கேள்விப் பாட்ட எழுதின மனிசன் கண் கலங்கி முழிபிதுங்கிப் போற மாதிரி அதுக்கொரு இசைய போட்டிருக்கிறவனை என்ன செய்தாத் தகும். நான் நெக்கிறன்டா. இப்ப படங்களில உந்தக் காக்கா வலிப்பு வந்தவை மாதிரி நெளியிறதுக்கு தக்கன மாதிரித்தான் இசை போடுறாங்கள் போல. ஆனா நீ என்ன நெக்கிறியோ தெரியாது. காதுக்குள்ள வயரை மாட்டிக் கொண்டு எங்கட மாலாவும் விநோத்தும் விசருகள் மாதிரி தலையக்குலுக்கிறதப் பாக்க வேணுமே...

> **“நாங்கள் ஒம்பது வயசில உலைவச்சு சோறாக்கின ஆக்கள். எங்கட நிலவரம் அப்பிடி இப்ப பெண்டுகள் கலியாணம் பேசயுக்கயே மாப்பிளைக்குச் சமைக்கத் தெரியுமா? எண்டு கேட்டெல்லோ சம்மதம் சொல்லுகினயாம். ஒண்டுந் தெரியாத பாப்பா உள்ளால போட்டாளாம் தாழ்ப்பா”**

இது எனக்கொரு தொடர்கதையடா அந்த நாளயில ரேடியோப் பெட்டிக்க ராப்பத்து மணிக்கு மட்டுந்தான் பாட்டு அதுகும் முப்பது நிமிசம். பகல் பத்திலயிருந்து பதினொரு மணிவரைக்கும் பாட்டிருக்கும். அப்ப நாங்கள் பள்ளிக்கூடம் போயிருவம். பின்னேரம் நாங்கள் அதை இதைக் கேக்க ரேடியோவுக்கு கிட்டப்போக, எங்கட அப்பா முழு வெறியில உந்தச் திருச்சி வானொலிக்க விட்டிட்டு தரரராராரான்னானானாஆஅஅ தந்தரரினானானாஆஆஆங்...என்டு ஆலாபனை கேட்டுக் கொண்டிருப்பார். அவரோட கதைக்கவும் முடியாதுடாப்பா நாங்களேதும் கேக்கப் போக மனிசனுக்கு இறில் வந்துதோ... சன்னதம்தான். இப்ப அந்தக் கவலை இல்லைத்தான் ரீவீக்கு கிட்டக்கூட ஒருத்த ரும் வராயினம். அவையும் அவையட பாட்டும் கைப்போனுந்தான். இனிக்காலத்தில ரீவீ சிரியலுகளெல்லாம் என்னைப்போல கிழடு கட்டையளுக்குத்தான். இளம் பிள்ளையள் உதுகள்ள மினைக் கெடுறது இல்ல.

அவள் தாய்க்காறி குழறிப் போட்டுப் போறாள் ‘எடி எழும்படி எப்பன் உந்த வீடுவாசலையெண்டாலுங் கூட்டடி’ எண்டு. அவளெங்கடா உந்த அலட்டலுக்கெல்லாம் அசையவோ. நாங்கள் ஒம்பது வயசில உலைவச்சுச் சோறாக்கின ஆக்கள். எங்கட நிலவரம் அப்பிடி இப்ப பெண்டுகள் கலியாணம் பேசயுக்கயே மாப்பிளைக்குச் சமைக்கத் தெரியுமா? எண்டு கேட்டெல்லோ சம்மதம் சொல்லுகினயாம். “ஒண்டுந் தெரியாத பாப்பா உள்ளால போட்டாளாம் தாழ்ப்பா” நல்ல வேளையடா ‘குடும்பம் நடத்தின அனுபவமிருக்கோ’ எண்ட கேள்விய இன்னுமொருத்தரும் கேக்கயில்ல. அப்பவே என். எஸ். கிருஸ்ணன் பாடினாரடா ‘காலம் மாறிப்போச்சு அகப்பை கணவன் கையிலாச்சு’ பாட்டு வந்து இப்ப அம்பத்தைஞ்சு வருசமாச்சு காட்சி மாறிட்டுதே. தீர்க்கதரிசியளடா. உந்தக் குடும்பம் நடத்திற அனுபவத்தையும் இப்ப சிலபேர் செய்யினமடா... கிட்ட வா கதை சொல்ல. வனசாட மூத்த பெட்டைபங்க ரவுணுக்க ஆரோடயோ லிவிங் ரூகெதராமடா. பின்ன எங்கட சனம் வெள்ளைக்காரன்ர எல்லா இஸ்ரைலயும் பழகினாலும் வெள்ளைக்காரனாமட்டும் ஆகேலாது... பின்ன தோல் காட்டிக் குடுத்திருமெல்லேடா

இப்பயிப்ப முதிர் கன்னர்கள் (முதிர் கன்னி ஆண்பால் முதிர் கன்னர்). அதிகமாம். சீத்தமிழ்ழ சோதிடஞ் சொல்லுற நங்கநல்லூர்...ம்... அது என்னவோ நீட்டுப் பேரா வாயுக்க வருதில்ல அவர்தான் சொல்லுறார் முதிர் கன்னர்கள் பெருகியுள்ளதுக்குப் பொம்பிளைப் பிள்ளையள் போடுற கண்டிசனுகள்தான் காரணமாம். கடைசியாப் பாருங்க இன்னுமொரு பிரச்சனை “மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை” எண்டு சொல்லுறது போல அவங்களுக்குத் தங்கதங்க வீடுகள்ள குமருகளை வச்சிருந்ததாலயும்தான் இந்த நிலமையடா. அப்பனும் ஆச்சியும் பெத்துப்போட்டு முன்னுள்ள ஆம்பிளைப் பிள்ளையின்ர தலையில அந்த சுமைய சுமத்திப் போட்டு ஆறுதலா இருப்பினம். எல்லாக்குமரையும் கரைசேர்த்து முடிய இந்த ‘குமர் முத்தி குரங்காப்போகிடும்.’ பாவம் என்ன செய்யலாம்.

இப்பதான்ரா எனக்கொண்டு வெளிச்சிது முக்காலம் காகம் முழுகிக் குளிச்சாலும் வெள்ளைக் கொக்காகாது. காலங்காலமா அடிமைத்தொழில் செய்துதான் ... எது இஞ்ச உள்ள மக்கள் வெளிநாட்டானுக்கு அடிமையா இருந்து சம்பாதிச்சதுதான் சொத்து, என்ன முன்னம் இஞ்சயிருந்து நம்மள ஆட்டிப்படைச்சான். இப்ப இஞ்சயிருந்து அங்க போய் இன்னும் அவன்ர நாட்டுக்கு உழைக்கிறாங்கள். எல்லாம் நம்மட அறிவீனமில்லாம வேறயென்ன. சிறுக்கி சிறுக்கிமக தானாப் போனா டோய். விடிஞ்சபின்னே எது நமக்கு விடிஞ்ச பின்னே விடிஞ்சபின்னே காணாப்போனா டோய்... வாழ்க்கைய வாழ வேண்டிய நேரத்தில வாழாம பணம் பணம் எண்டு அலைஞ்சா... இலவமரத்தைக் கிளி காத்த மாதிரித்தான். ■

# 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிட முயலும் இந்தியா

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தத்தில் பெருமளவிற்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சந்திப்பாகவே இச் சந்திப்பு முடிவடைந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான தனியான சந்திப்பின் போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையே பிரதானமாக வலியுறுத்தி வெளியுறவுச் செயலரை மகிழ்ச்சிப்படுத்தியிருந்தார்.

இது விடயத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் முன்வைத்த இறுக்கமான கருத்துக்களைக் கூட வடகிழக்கு தமிழ்த்தரப்பினர் முன்வைக்கவில்லை. அவர் ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி என்பதால் வடகிழக்கு விவகாரம் பற்றி அதிகம் பேச முடியாது. ஆனாலும் தென்னிலங்கையின் அரசியல் சூழலில் நின்றுகொண்டு ஆணித்தரமாகக் கருத்துக்களை முன்வைத்திருந்தார். தமிழ்மொழி அமுலாக்கம், 13 ஆவது திருத்தம் என்பவை பற்றிய அவரது கருத்துக்களுக்கு அப்பால் சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா மலையக மக்களை வெகுவாகப் பலவீனப்படுத்திவிட்டது என்பதை நேரடியாகவே கூறியிருந்தார். அந்த ஒப்பந்தம் இடம்பெற்றிருக்காவிட்டால் தென்னிலங்கையில் இருந்து 30 தமிழ்ப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்திருப்போம் எனவும் கூறியிருந்தார். மலையக மக்களைப் பொறுத்தவரை சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஒரு இன அழிப்பு நடவடிக்கையே!

இராஜதந்தரி என்பதால் துதிபாட வேண்டும் என்பது கட்டாயமில்லை. அவர்கள் விடுகின்ற தவறுகளை நாகரீகமான முறையில் வெளிப்படுத்துவதற்கு ஒருபோதும் தயங்கக்கூடாது. இருதரப்பு நலன்களும் பேணப்படுவதே! அரசியல் அறம். ஒரு தரப்பின் நலன்களுக்கு மற்றைய தரப்பின் நலன்களை விலைகொடுப்பது அறமல்ல. இதனை இந்தியத் தரப்பிற்கு உறைக்கத்தக்க வகையில் கூறிய மனோகணேசனை பாராட்டியே ஆக வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அடிப்படைப் பிரச்சினை, இன அழிப்புக்கு நீதிகோரும் பிரச்சினை, ஆக்கிரமிப்புப் பிரச்சினை இயல்புநிலையைக் கொண்டு வருதல் பிரச்சினை, அன்றாடப் பிரச்சினை என ஐந்து வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இது பற்றி இக் கட்டுரையாளர் முன்னரும் கூறியிருக்கின்றார். இப் பிரச்சினைகளை வெவ்வேறு நபர்கள் தெளிவாக முன்வைத்திருக்கலாம்.



இந்தியா விரும்பாவிட்டாலும் கூட இவற்றை முன்வைக்க வேண்டியது தமிழ்த் தரப்பின் கடமை ஆகும். இவற்றில் அரசியல் தீர்வு என்கின்ற அடிப்படைப் பிரச்சினை இன அழிப்புக்கு நீதிகோரும் பிரச்சினை என்பவை தொடர்பாக இந்தியாவிடம் தற்போதைக்குப் பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் மீதி மூன்று பிரச்சினைகள் தொடர்பாகவும் வலுவான அழுத்தங்களை தெளிவான திட்டங்களுடன் ஒருங்கிணைந்து கூறியிருக்கலாம். ஆனால் அது பற்றி பெரிதாக பேசப்பட்டதாகத் தெரியவில்லை.


13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக ஏன் அமைய மாட்டாது என்பதை சட்ட நடைமுறை அனுபவங்களுடனும் கோட்பாட்டு அடிப்படையிலும் முன்வைத்திருக்க வேண்டும். அவ்வாறு முன்வைக்கக்கூடிய ஆற்றல் நிகழ்வில் கலந்து கொண்ட பலருக்கு இருந்தது. ஆனால் இவ் விவகாரத்தை தெளிவாக எவரும் முன்வைக்கவில்லை.

சர்வதேச இராஜதந்திரிகளுடனான சந்திப்பு தமிழ் மக்களுக்கு அரிதாகவே கிடைக்கும். அந்தச் சந்திப்புக்களை வலுவான திட்டங்களுடன் பயன்படுத்தியிருக்க வேண்டும். இது நிகழாமை கவலைக்குரியதே!

இப்போது எழும்கேள்வி எதிர்காலத்திலாவது தமிழ்த்தரப்பு இந்த விடயத்தில் கவனம் செலுத்துமா? ■

## அவற்றோரன்ன.. இவற்றோரன்ன..

# மிதக்கும் வெளிகளை எழுதுதல்: நவீன கவிதையின் இரண்டு புதுமுகங்கள்



பேராசிரியர் அ.ராமசாமி

காலம், வெளி, பாத்திரங்கள் என்பன இலக்கியத்திற்குரிய சில பொதுக்கூறுகள் இம்மூன்றையும் ஒருமைப்படுத்தி இணைப்பதன் வழியாக இலக்கிய வடிவங்கள் உருவாகின்றன என்பது இலக்கியவியல் நூல்கள் கூறும் அடிப்படை விதிகள். இலக்கிய வடிவங்களில் வெளிப்பாட்டுப் பாங்கு மற்றும் உருவாக்கும் மனநிலை சார்ந்து, வடிவங்களின் சிறப்புநிலை கவனிக்கப்படுகின்றன. அடிப்படைக்கூறுகள் மூன்றையும் ஒவ்வொரு இலக்கிய வடிவமும் கொண்டிருக்கவேண்டும் என்பதும் இல்லை. அதிலும் கவிதை இம்மூன்றையும் கைவிட்டுவிட்டு உணர்வலைகளை மட்டும் உருவாக்கித் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும் இலக்கியவடிவம். எப்போதும் கவிதைக்குள் அலையும் பாத்திரங்களின் உணர்வுகளென்னும் மெய்ப்பாடுகளை வாசிப்பவர்களுக்குக் கடத்திவிடுவதன் மூலம் கவிதையின் வகைமைகள் பிரிக்கப்படுகின்றன.


வெளியையும் காலத்தையும் முதன்மையாக அடையாளப்படுத்திய திணைக் கவிதைகளைத் தமிழ்க் கவிதையின் பெருமரபாகவும் அடையாளமாகவும் இலக்கிய வரலாறுகளும் திறனாய்வாளர்களும் குறிப்பிட்டாலும் இதிலிருந்து பெரும் விலகலைச் செய்தவை சித்தர்களின் கவிதைப்போக்குதான். அக்கவிதைகளுக்குக் குறிப்பான வெளி, காலம், பாத்திரம் போன்றவற்றைச் சுட்டிக் காட்ட முடியாது. எழுதுபவர் அல்லது கவிதைசொல்லியின் ஒற்றை அடையாளத்தின் வழியாக முன்வைக்கும் காட்சிப் படிமங்களும் கருத்தியல் முன்வைப்புகளுமே அவற்றைத் தனித்துவமான போக்காக அடையாளப்படுத்தின.

நவீனத்துவத்தின் வருகையைக் கட்டியம் சொன்ன பாரதியிடம் சித்தர் மரபின் சில அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. ஆனால், அவரது காலத்திற்கு முன்பே குணங்குடி மஸ்தான் சாகிபு, தக்கலை பீர்முகமது அப்பா போன்றோர் சித்தர் மரபை அதிகமும் முன்னெடுத்தவர்களாக வெளிப்பட்டுள்ளனர். அந்த வெளிப்பாட்டுக்கு இஸ்லாமியச் சமய மரபின் தத்துவச்சொல்லாடல்கள் காரணம் என்பது விரிவான ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டவை.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய நவீனக் கவிதைகளின் முதன்மையான அடையாளமும் காலத்தையும் வெளியையும் மறைத்துக் கருத்தியல்களுக்கும், கருத்துக்களை வெளிப்படுத்தும் படிமங்களுக்கும் முதன்மை கொடுப்பனவாகவே இருந்ததைத் திறனாய்வுகள் பல நிலைகளில் விளக்கியுள்ளன. குறிப்பாக எழுத்து மரபில் வந்த பெரும்பாலான கவிகள் இவ்விரண்டையும் அழித்துத் தனிமனிதத் தன்னிலை களை முன்வைப்பதையே கவிதையின் முதன்மையான அடையாளமாகக் கருதினார்கள்.

இலங்கைப் பரப்பிற்குள் வாழும் தமிழ்பேசும் மனிதர்களிடையே உருவாகியுள்ள நவீனத் தமிழ்க்கவிதைக்குள் பொதுநிலைத் தமிழ் அடையாளம், இஸ்லாமியச் சிறப்பு அடையாளம் என்ற இரண்டு போக்குகளைக் குறிப்பான அடையாளங்கள் கொண்டு பிரித்துக் காட்ட முடியும். 1980 களில் தொடங்கி யாழ் மையத்தையும், ஈழப்போராட்டப் பின்னணியையும் கொண்ட நவீனக் கவிதைகள் காலப்பின்னணியையும் வெளியடையாளங்களையும் தொலைக்காமல், திணைக்கவிதைகளின் நீட்சியாக வெளிப்படுகின்றன. இந்தப் போக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்ட போக்கை கிழக்கிலங்கைப் பகுதியிலிருந்து எழுதும் இஸ்லாமியக் கவிகள் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில் எனது வாசிப்புக்குக் கிடைத்த தொகுதிகளிலிருந்து இந்த அவதானிப்பைச் சொல்கிறேன். அதன் நீட்சியில் புதிதாக எழுத வரும் இஸ்லாமியக் கவிகளும் இணைகின்றார்கள் என்பதற்கு அண்மையில் நான் வாசித்த இந்த இரண்டு கவிதைத்தொகுதிகளும் சான்றாக நிற்கின்றன. யசோதரையின் வீடு என்ற தலைப்பில் வந்துள்ள ரியலாஸின் கவிதைத்தொகுதியும் நாங்கூழ் என்ற தலைப்பில் வந்துள்ள மின்ஹாவின் கவிதைத்தொகுதியும் அவர்களின் முதல் கவிதைத் தொகுதிகள் என்ற நிலையிலேயே ‘வெளி தொலைத்த மரபில்’ இணைகிறார்கள் என்பது கவனிக்க வேண்டிய ஒன்று.



ரியலாஸின் தொகுப்பில் உள்ளும் வெளியும் என்ற தலைப்பிட்ட கவிதையை வாசிக்கலாம்:

நான் பேசிக்கொண்டிருந்தேன்/ அவள் மௌனமாக இருந்தாள்
ஆயினும் /குளத்தில் கல்லெறியவில்லை /மர இலைகளைப் பறித்து/ இருகூறாக்கி வீசவில்லை
நான் பேசிக்கொண்டிருந்தேன்/ அவள் மௌனமாக இருந்தாள்
வேறு வழியில்லை/ திராட்சை ரசத்திலிருந்து நரி விலகியது போல்
உரையாடல் கலைந்தது
உங்களைப் போலவே அவளும்/ எனக்குச் சொல்ல நினைத்திருப்பாள்
தனியொருவன் கதைப்பதை/ எவ்வாறு உரையாடலென அழைக்கலாமென்று

அவள், அவன் எனப் பாலடையாளங்களின் வழி உருவாக்கப்படும் காதல் சந்திப்பு என்னும் நிகழ்வில் ஆணின் ஆர்வமிகுதியையும், பெண்ணின் நிதானத்தையும் முன்வைக்கும் கவிதைக்குள் குறிப்பான காலமோ, வெளியோ உருவாக்கப்படவில்லை. காதல், தவிப்பு, மனவோட்டம் போன்றவற்றை எழுதும் கவிதைகளில் வெளியும் காலமும் முக்கியத்துவம் அற்ற கூறுகள் என்பதை உணர்ந்த நிலையில் காட்சிப்படுத்தப்படும் நிகழ்வு வழியாக வாசிக்கும் ஒவ்வொருவரும் அவரவர் அனுபவங்கள் சார்ந்து வெளியையும் காலத்தையும் உருவாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கிறது இக்கவிதை. இதேபோன்றதொரு காட்சிப்படுத்தலின் அரூபத்தை மற்றொரு கவிதையிலும் செய்கிறார் ரியலாஸ். அக்கவிதையின் தலைப்பு: கனவு காண்பவனின் காட்சியறை

ஓர் இரவு/ தூக்கத்தைத் தொலைத்து/
தெருவில் அலைந்துகொண்டிருந்தது /சூரியன்
மறுநாள், ஒரு பகல்வேளை,
தூக்கத்தைத் தொலைத்து / அதே தெருவில் /
அலைந்துகொண்டிருந்தது நிலவு
நிலவினையும், சூரியனையும் தன்னையும்/
ஒரு படுக்கை விரிப்பில்/ தூங்க வைக்கும் ஏற்பாடுகளில்/
இரவு அறை / யன்னல்களைத் திறந்து/
தூக்கம் தொலைந்து/ தெருவில் அலைந்துகொண்டிருந்தான் /
வீடற்ற யாசகன்.

வீடற்ற யாசகனின் அலைதலில் இருக்கும் வலியையும் துயரத்தையும் காட்சிப்படுத்தும் இக்கவிதை நடப்பை முரண்பாடாக்கிக் காட்டுவதன் வழியாகவே நிகழ்த்திக் காட்டுகிறது. பகலுக்குரிய சூரியனை இரவுக்குரியதாகவும், நிலவைப் பகலுக்குரியதாகவும் ஆக்குவதன் வழியாக நிதானப்படுத்தும் கவிதைச் செயல் யாசகனையும் அதனோடு ஒரு படுக்கை விரிப்பில் இணைத்துவிடுவதன் மூலம் படிமங்களைக் கட்டமைத்துள்ளது.

யசோதரையின் வீடு தொகுப்பிலுள்ள ஒவ்வொரு கவிதையிலும் உருவாக்கும் படிமங்கள் கவிதைக்குள் அலையும் பாத்திரங்களின் மனவுணர்வைக் கடத்தும் வேலையைச் செய்கின்றன. ஓர் உயிருள்ள வெப்பம் என்று கவிதைக்குத் தலைப்பிடுவதன் மூலமே படிமக்காட்சியின் தகிப்பை உணர்த்தும் திறன் கொண்டவராக வெளிப்பட்டுள்ள கவி, இன்னொரு கவிதையில். “யாருமற்ற பெருவெளியில்/ தாகித்தலைந்திருந்த வெயிலுக்கு/ வியர்த்துக்கொட்டியது” எனத்தொடங்கி “இப்படித்தான்/ பாலைவனம் இல்லாத ஊரில் பிறந்த/ ஒரு வெயிலின் கதை/ நாடற்ற அகதியாய்/ அலைந்துகொண்டிருந்தது” என முடிக்கும்போது வாசிக்கப்பட்ட கவிதை உருவாக்கும் உணர்வலைகள் வெயிலின் தகிப்போடு வாசக மனத்திற்குள் அலைவதாக மாற்றம் பெறுகிறது. அந்த மாற்றம் அனைத்துவகையான அகதி நிலையின் அலைவாகக் கவிதைக்குள் நகர்கிறது. இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கவிதைக்குள் உருவாக்கப்பட்டுள்ள படிமங்களும் அவற்றின் வழியே மிதக்கும் உணர்வுகளும் காலவெளிகளைத் தாண்டியவை கவிதை அழகியலை உள்வாங்கியவை என்பதை வாசிப்பவர்கள் உணரமுடியும்.




மின்ஹாவின் நாங்கூழ் தொகுப்புக்கவிதைகள் பெண் தன்னிலை வெளிப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் காலத்தை உருவாக்குவதைத் தவறவிட்டுள்ளன. அந்த இடைவெளியைக் குறிப்பான படிமங்களை அடுக்குவதன் மூலம் வாசிப்புக் கவனத்தைக் குவிக்கும் உத்தியைக் கைக்கொண்டுள்ளது. தொடக்க வரியொன்றின் மூலம் புத்தகங்கள் நிரம்பிய அறைக்குள் அழைத்து வாசிப்பவர்களை அழைத்துச் செல்லும் மின்ஹா, மனித மையச் சிந்தனையால் இந்த உலகம் சந்திக்கும் சிக்கல்களை முன்வைக்கிறார் ஒரு கவிதையின் உரிப்பொருளாக்குகிறார்.

புத்தகங்களால் அலங்கரிக்கப்பட்ட/ அறையொன்றினுள்/ பொழுதுகளைத்/
தின்றுகொண்டிருக்கும்/ கண்களாய் மட்டும் இருந்துவிடுதல்/
கனவுக்குறிப்பில் கத்தரிக்கப்பட்ட/ இரண்டாவது குறிப்பு
கீழே செல்லரித்துக்/ கொண்டிருக்கும்/ முதலாவது குறிப்பு:
மனிதர்களை விட்டும்/ தொலைதல்
ஓ கரையான்களே/ மனிதர்களை/ விட்டுவிடுங்கள்/ அவர்கள்/ அவர்களையே/ தின்றுகொள்கிறார்கள்.

என விரிக்கின்றது. நிர்மலம் கருத்தது என்று தலைப்பிட்ட கவிதையில் சமகால வாழ்க்கைச் சூழல்,மனிதர்களின் அறவுணர்வுகளை இல்லாமல் ஆக்கும் நிலையை, சாதாரண வாக்கியங்களால் அடுக்கிக்காட்டியுள்ளார். கவிதைக் காட்சியை உணர்ச்சிகளற்ற சாதாரணச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் விவரிக்கும் போது இரைஞ்சுதல்,

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மிச்சம் பிடித்தால்தான்...

வேதநாயகம் தபேந்திரன்



“குறைந்தளவு பொருள்களைக் கூடியளவு பணம் துரத்திச் செல்லும் ஒரு முரண்பட்ட நிலையே பணவீக்கம் எனலாம்”

கிருஸ்ணானந்தன் சேர் சுண்டிக்குளி நொதேண் ரியூட்டரியில் பணவீக்கம் குறித்துப் படிப்பித்த பொருளியல் சொல் அது. எனது ஞாபகத் திரையில் அடிக்கடி தெரியும் பொருளியல் வாழ்க்கைத் தத்துவங்களில் இது பிரதானமானது.

சமையலுக்குப் பாவிக்கும் 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு (காஸ் விலையை) அரசாங்கம் 11.10.2021 ஆம் திகதி முதல் 1257 ரூபாவால் விலையைக் கூட்டி விட்டது. சாதாரண இலங்கை மக்களின் வாழ்க்கைச் செலவைப் பாரதூரமாகப் பாதிக்கும் செயல் இது.

மேல்நடுத்தர வகுப்பு மக்களை, உயர் வருமானம் பெறும் மக்களை இந்த விலையேற்றம் பெரிதாகப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் நடுத்தர வருமானம், குறைந்த வருமானம் பெறும் மக்களை அதிகம் பாதிக்கப் போகின்றது. அது மட்டுமல்ல இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவுப் பொருள்களின் விலைகள் அதிகமாக இருக்கும் போது இலங்கை செலவு அதிகம் உள்ள ஒரு நாடாக இருக்கும். சுற்றுலாவிகள் வருவதைக் குறைத்துக் கொள்ளும்.

நடுத்தர வருமானம் பெறுவோர், குறைந்த வருமானம் பெறுவோர் பாதிக்கப்படுவதைத் தடுக்க முடியாதா? இதற்கு மாற்றுவழி இல்லையா? நிறையவே இருக்கிறது. ஆனால் வசதியாக வாழ்ந்து வாழ்க்கைப்பட்ட சோம்பேறித்தனம் பல இலங்கையர்களுக்கு மாற்றுவழிகளை நோக்கிப் போக விடுவதில்லை.

தொடர்மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு,மிகக் குறுகிய நிலப்பரப்பில் வசிப்போருக்கு காஸ் அடுப்பைத் தவிர வேறு தெரிவு ஏதுமில்லை. ஆனால் இலங்கையர்கள் முழுப்பேருமே இவ்வித மனைகளில் வசிக்கவில்லை.மேல் நடுத்தர வருமானம் அல்லது உயர் வருமானம் பெறுவோரே தொடர்மாடிகளில் வசிக்கின்றனர்.

காணியுள்ள வீடுகளில் உள்ளவர்கள் கூட விறகு அடுப்பைக் கைவிட்டு காஸ் அடுப்புக்கு மாறி விட்டார்கள். அதே வேளையில் வளவுகளில் சமையலுக்கு உகந்த விறகுகள், கறையான் அரித்து அழிகின்றது. சில இடங்களில் தென்னை மரங்களுக்கு பசளையாகத் தாழ்க்கின்றனர். அல்லது கழிவாக நினைத்து எரிக்கின்றனர். அல்லது கழிவாக வெளியே வைத்து உள்ளூராட்சி நிறுவனங்களால் கழிவாக அகற்றுகின்றனர்.

விறகு அடுப்பு, மண் சட்டி, மண்பானையில் சமைத்த காலங்களில் இலங்கையர்களின் உடல் ஆரோக்கியம் நன்றாக இருந்தது. மண் சட்டியில் சமைத்த இறைச்சி, பயிற்றங்காய்,முருங்கைக்காய் கறிகளின் பழங்கறிகளை அடுத்தநாள் காலையில் புட்டுடன் பிரட்டிச் சாப்பிட்டால் தேவாமிர்தமாக இருக்கும்.

அனுபவித்த தலைமுறைக்கு இதை வாசிக்கும் போது நாக்கில் நீரூறும்.

மண்பானையில் சமைத்த சோற்றில் தண்ணீர் விட்டு அடுத்த நாள் காலையில் வாய் கொப்பளித்த பின்பு ஒரு ரம்ளர் பழந் தண்ணீரைக் குடித்தால் வயிற்றில் மலச்சிக்கல் என்பது எட்டியும் பார்க்காது.

வேகமாக வாழப் புறப்பட்டு வேகமாகவே நோயாளியாகி வருகிறோம்.

கோவிட் - 19 உலகப் பெருந்தொற்று எமது நாட்டின் பொருளாதாரத்தையும் சரித்து விட்டது. சமையல் எரிவாயுவின் விலையைத் திடீரென 1257 ரூபாவால் அரசாங்கம் கூட்டியதன் மூலமாகப் பாவிக்கப்படாமல் இருக்கும் விறகுப் பாவனையை அதிகரிக்க எதிர்பார்க்கிறது போல உள்ளது.

மரக்காலைகளில் மரம் அரியும் மரத்தூசுகள் வீணாகக் கொட்டப்படுகின்றன. சில இடங்களில் அவை வயல்கள்,தோட்டங்களில் கொட்டப்பட்டு மண் உழப்பட்டுப் பயிர்களுக்குப் பசளையாகின்றன.

அதை விட வீணாகக் கொட்டப்படுபவற்றை உரப் பையில் சேகரித்து மரத்தூசு அடுப்பில் இட்டுச் சமையலுக்குப் பாவிக்கலாம்.

விறகைச் சிக்கனமாகப் பாவிப்பதற்கு இரட்டைச் சூட்டடுப்பு பாவிக்கலாம்.

இலங்கையரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்த காரணத்தால் காஸ் விலை விறகின் விலைக்குச் சமனாக வந்து விட்டது. விறகு வாங்குவதை விட காஸ் வாங்குவது சுகமும் இலாபமும் என்ற மனநிலை மக்களிடம் பரவலாக வந்து விட்டது. விறகு எரிக்கும் போது வரும் வெப்பம் கூடிக் குறையும். விறகைப் பார்த்துப் பார்த்து எரிக்க வேண்டும். விறகு நெருப்பு சமையல் பாத்திரங்களில் பிடித்தால் அவற்றை மினுக்குவது மிகவும் சிரமமானது.

இது போன்ற காரணங்களால் விறகு அடுப்பை வசதி வந்த போது ஏராளம் பேர் கைவிட்டு விட்டனர்.






ஆனால் குறுங்காலப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கச் சமையலுக்கான மாற்றுச் சக்தி வளங்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

இயற்கை வளங்கள் கொட்டிக் கிடக்கும் எமது நாட்டில் சமூகப் பொறுப்புள்ள நாட்டை முன்னேற்ற வேண்டுமென்ற சிந்தனை உள்ளவர்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இலங்கையில் உற்பத்தி ஆகாத இறக்குமதிச் சமையல் வாயுவில் முழுநாடுமே தங்கி இருப்பது பொருளாதாரத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

சிங்கப்பூர் ஒரு காலத்தில் இலங்கை போலத் தமது நாடு முன்னேற வேண்டுமெனப் பார்த்து ஆசைப்பட்டார்கள். ஆனால் சிங்கப்பூர் 1978 ஆம் ஆண்டில் உயர் நடுத்தர அளவு வருமானம் பெறும் நாடாக உலக வங்கியின் வகைப்படுத்தலில் மாறியது.

ஆனால் இலங்கை 2019 ஆம் ஆண்டு தான் இந்த அந்தஸ்தை எட்டிப் பிடிக்க முடிந்தது.

இப்படிப் பார்க்கையில் சிங்கப்பூருக்கும் எமக்குமான முன்னேற்ற இடைவெளி 41 வருடங்களாக உள்ளது.

**“எமது நாட்டு மக்களுக்கும் மிச்சம் பிடிக்கும் குணத்தை ஊட்ட வேண்டும். அதாவது சேமிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அன்றாடச் செலவில் கணிசமான அதிகரிப்பை உருவாக்கும் சமையல் எரிவாயு விலை அதிகரிப்புப் போன்ற நிலையில் உள்நாட்டில் பதிலீடாகக் கிடைக்கக் கூடிய வளங்களைத் தேடிப் போக வேண்டும்.”**

நாம் இப்போது உயர்வருமான நாடு என்ற இலக்கை நோக்கி நகர்கின்றோம். ஆனால் சிங்கப்பூர் 1988 ஆம் ஆண்டே சரியாகப் 10 ஆண்டுகளின் பின்பு அந்த இலக்கை அடைந்து விட்டது.

சிங்கப்பூரின் சிற்பி லீ குவான் யூ, இலவசங்கள் மக்களைச் சோம்பேறியாக்கி விடுமென இலவசங்கள் யாவற்றையும் நிறுத்தினார். அந்தப் பணத்தைக் கொண்டு தரமான பெருவீதிகள், துறைமுகங்கள், விமான நிலையம்,தொலைத்தொடர்பு வசதிகள், மின்சாரம்,தொழிற்சாலைகள் என அமைத்தார்.

தேவைப்பட்ட இடத்தில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை வரவழைத்து உற்பத்திகளைச் செய்தார். உற்பத்தி ஆற்றல் மிக்க தொழிலாளர்களை உருவாக்கினார். வெளிநாடுகள் விரும்பி வரவழைக்கக் கூடிய திறனுள்ள கல்வியாளர்களை உருவாக்கினார்.

எமது நாட்டு மக்களுக்கும் மிச்சம் பிடிக்கும் குணத்தை ஊட்ட வேண்டும். அதாவது சேமிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அன்றாடச் செலவில் கணிசமான அதிகரிப்பை உருவாக்கும் சமையல் எரிவாயு விலை அதிகரிப்புப் போன்ற நிலையில் உள்நாட்டில் பதிலீடாகக் கிடைக்கக் கூடிய வளங்களைத் தேடிப் போக வேண்டும்.

சிக்கனம் தான் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை. ஆனால் பெரும்பாலான இலங்கையர்கள் ஏனோ இந்தக் குணாம்சத்தில் பின்தங்கி உள்ளார்கள். சிங்கப்பூர் 1978 ஆம் ஆண்டில் உயர்வருமான நாடு என்ற இலக்கை அடைந்து அபிவிருத்தி அடைந்த நாடாக மாறியது.

எமது அரசாங்கமும் நாமும் மிச்சம் பிடிக்கும் பழக்கத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்தால் தான் 2029 ஆம் ஆண்டில் உயர் வருமான நாடு என்ற பெருமையை உலக வங்கியிடம் இருந்து பெற முடியும். ■

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்



உலகில் தன்னை அறியும் கல்வியை விட முக்கியமானதும், ஆர்வமூட்டுவதும், சவால்களுடன் கூடியதும், அக மற்றும் புற அமைதிக்கு வித்திடுவதுமான இன்னொரு கல்வி வேறு இல்லை என்றால் மிகையாகாது. நித்திய வெளி நோக்கிய ஆன்மீகப் பயணமானது புனிதமானது, புதிரானது ஆனாலும் ஆனந்தமயமானது. அதனால் தான் ஏற்ற, இறக்கங்களுடன் கூடிய இப்பயணத்தைத் தொடங்கியவர்களால் பின்னோக்கித் திரும்பிப் பார்க்க முடிவதில்லை, விரும்புவதில்லை. பேரின்பத்தின் சுவையில் திளைத்தவர்களுக்குப் பயணத்தடைகள் தற்காலிகமான பின்னடைவு மட்டுமே. நீண்ட கால நோக்கில் அவற்றையும் தாண்டி தம் பயணத்திலேயே குறியாக இருப்பார்கள். இவ்வுலக அமைதிக்கும், சகல மக்களினதும் பொருளாதாரத் தன்னிறைவுக்கும் தேவையானது பேச்சுவார்த்தைகளோ, நீதிமன்றங்களோ, அரசியல்வாதிகளோ அல்ல. தன்னுணர்வில் நிலைபெற்ற ஆன்மாக்களே. உள்ளக அமைதி சாத்தியமாகும் போது, வெளியுலகத் தேவைகள் தாமாகவே திருப்தி செய்யப்படுகின்றன. ‘எது ஒன்று கிடைத்தால் எல்லாம் கிடைக்குமோ, அது ஒன்று கிடைத்தால் போதும்’ என்ற வாக்கியப்படி அந்த இறைசக்தி அல்லது தடையற்ற பிராணசக்தியைப் பெறும் நிலையை அடையும் போது காயசித்தி பெற்று, தன்னுணர்விலும் நிலைபெற முடியும். “சகல மனிதர்களிலும் உள்ள ஆழமான இந்த உணர்வுநிலை (Consciousness) ஒன்றுதான். நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள், தனியானவர்கள் என்ற பிழையான எண்ணக் கருவானது பலவிதமான முரண்பாடுகளுக்கும் அழிவுகளுக்கும் வழிவகுக்கிறது.” என்ற 20 ஆம் நூற்றாண்டின் முக்கியமான பௌதிகவியலாளர் David Bohm இன் கருத்தை இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

கடந்த கட்டுரைகளில் பதஞ்சலி யோக சூத்திரம் பற்றிய அறிமுகம், மனதின் விருத்திகள், நீண்ட காலப் பயிற்சியாலும் பற்றின்மையாலும் மனதின் விருத்திகளை நிறுத்தி எமது உண்மை இயல்பான தன்னுணர்வில் பிரகாசிக்கலாம் என்றும் அதனால் சமாதிநிலை அனுபவங்களையும் பெறலாம் என்று பார்த்தோம். இந்த வார கட்டுரையில் நம் அகப்பயணத்திற்குத் தடையாகவுள்ள காரணிகளையும், அவற்றிலிருந்து நீங்கி, ஆன்மீக பயணத்தைத் தொடர்வது பற்றி பதஞ்சலி யோக சூத்திரம் கூறும் வழிமுறைகளையும் பார்க்கலாம்.

‘நோய், மனச்சோர்வு, சந்தேகம், ஊக்கமின்மை, சோம்பல், புலனின்பங்களில் பற்று, மதிமயக்கம், மனம் குவியாமை, பெற்ற நிலையில் இருந்து வழுவுதல் போன்றவற்றால் வரும் கவனச்சிதறல்கள் எமது தன்னுணர்வு நிலையை எய்துவதற்குத் தடைகளாகும்.’ - யோக சூத்திரம் 1.30

‘துக்கம், மனக்கலக்கம், உடல்நடுக்கம், மூச்சுத் தடுமாற்றம் என்பன மன ஒருமைப்பாட்டின்மைக்குக் காரணமாகின்றன.’ - யோக சூத்திரம் 1.31

நாம் உடல், உள வகையிலான நோயுற்றிருக்கையில் எமது மனநிலையானது எப்போதும் அதனைப் பற்றியதாகவே இருக்கும். நோய் சிறு புள்ளியளவானதாக இருக்க, நம் மனதின் விருத்திகள் பூதாகரமாக நோயை வளர்ந்திருக்கும்.. பதஞ்சலி முனிவரால் மேற்கூறப்பட்ட பல காரணங்களும் எமது ஆன்மீகத் தேடலில் பல தருணங்களில் உணர்ந்திருக்கிறோம். நம் புலன்வழி இன்பத் தேடல்களும், சில வேளைகளில் நட்புறவுகளின் உபதேசங்களும் கூட நாம் ஏறிய பாதையில் இருந்து சறுக்கி விட ஏதுவாகின்றன. இங்கு நாம் ஆதிசங்கரர் கூறிய உபதேசத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

‘கணநேரங்கூட தூயவர்களுடன் கொள்ளும் தொடர்பு வாழ்க்கைப் பெருங்கடலைக் கடக்க உதவுகிறது.’

இங்கே தான் நாம் யோக மார்க்கத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். தன்னொழுக்கம், சமூக ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே மனதளவில் தெளிவும் அமைதியும் ஏற்பட்டு விடுகிறது. மனதளவில் நிகழும் பல அமைதியீனங்களும், எமது பிராண ஓட்டம் நிகழும் நாடிகளில் தடைகளை ஏற்படுத்தி விடுகின்றன.. இவை உடலளவில் நோய்களாக தோன்றுகின்றன. ஆசனங்களும் பிராணாயாமமும் பிராண ஓட்டம் தடையின்றிப் பாய வழிவகுக்கின்றன. நான் யார்? என்ற தேடலுக்கு, யாரெல்லாம் நானல்ல என்ற மனத்தின் வழி கட்டமைத்த பொய்யுருவைக் கலைக்க வேண்டும். பிறப்பில் இணைந்து கொண்டதும், இறப்பில் நீங்கிச் செல்ல இருப்பதுமான அந்த சுயத்தை, வாழும் காலத்தில் உணர்ந்து வாழ்வதுவே யோக வாழ்வு. இதனைச் சாத்தியமாக்குவதற்குத் தினசரி தியானப் பயிற்சி அவசியமானது.

## (அக)பயணத் தடைகளை வெல்லும் எனும் பிரணவ மந்திரம்

பயிற்சி : ஆரம்பத்தில் ஐந்து நிமிடங்களாவது பூசை அறையில் அல்லது அமைதியான சூழலில் தகுந்த இருக்கையில், முள்ளந்தண்டு வடம் நேராக இருக்க அமர வேண்டும். நிலத்தில் அமர முடியாதவர்கள் நாற்காலியில் நிமிர்ந்து அமரலாம். ஆரம்பத்தில் வண்ணத்துப் பூச்சிகள் போல பல எண்ணங்கள் பறந்துவரும். அவற்றைப் பிடித்து வைத்து விளையாடாமல், அதே நேரம் வலுக்கட்டாயமாக எண்ணங்களை அமுக்க முயற்சிக்காமல் இருக்க வேண்டும். ஒரு எண்ணத்தோடு சென்று அதனை விரிவாக்காமல் முடிவுக்குக் கொண்டு வந்தபின், நம் சாதாரணமான மூச்சி...ல் கவனத்தைக் குவிப்பதன் மூலம் படிப்படியாக எண்ணங்கள் முடிவுக்கு வரும் காலம் ஒன்று வரும். இந்த சூனிய நிலையில் தன் சுயத்தின் அறிவும் ஆனந்தமும் கண்டவர்கள், தியானத்தில் தாமாகவே சென்று அமருவதும், தியானத்தின் காலம் நீண்டு செல்வதை உணரத் தவறி விடுதலும் நடக்கும்.

இதற்கெல்லாம் நமக்கு ஒரு குருவின் துணை அவசியமாகிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களில் யோக மார்க்கத்திற்குக் குருவின் துணை அவசியமானது. சிறுவயதில் பெற்றோர் மூலம் பல விடயங்களைத் தெரிந்து கொள்கிறோம். பின்நாளில் நம்முள் நம்மால் அறியப்படாமல் இருக்கும் அந்த அறிவை வெளியே கொண்டுவர இன்னொரு அறிவான, குருவால்தான் முடியும் நமக்குச் சரியான அறிவுரைகளையும், வித்தைகளையும் பயிற்றுவித்து, இறைத்தன்மையை அடையும் வழி இதுதான் என்று காட்டிவிடுவதோடு முதல் குருவான காரிய குருவின் வேலை முடிந்து விடுகிறது. உண்மைப் பொருளை உணர்ந்து பயின்றுவர எமது இரண்டாவதும் காரண குருவுமான ஆத்மா தன்னை உணர்த்துவதோடு, இறைப்பயணத்திற்கும் துணையாகிறது.

(தொடரும்)

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

**டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்**
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

# கொரோனாவும் சித்த மருத்துவ காப்பு முறைகளும் கற்ப மூலிகைகளும்



உடலை அழியாது காக்கும் காய கற்ப மூலிகைகளையும், யோகாசன பிராணாயாம முறைகளையும் சித்தர்கள் (Sages) விரிவாகவும் விளக்கமாகவும் கூறியிருப்பதைப் பார்க்கும் போது சித்தர்களின் அறிவியல் நுண்மாண்நுழை புலத்தைக் காணக் கூடியதாகவுள்ளதுடன், தமிழர் அறிவியல் செழும் புதையல்களை ஆழமான முறையில் ஆய்வு செய்வது காலத்தின் தேவையாக உள்ளது. கோரக்கர் எனும் சித்தர் தமது மலைவாகடத்தில் “தொழுகண்ணி” எனும் மூலிகையைப் பற்றி கூறுகின்றார்.

“பாரப்பா தந்தி மூலி
பச்சிலை நாலு வர்ணம்
ஆர்ப்பா அதுக்கே பேர்தான்
அழுகண்ணி யென்று சொல்வார்
சேரப்பா யிலைக்கி வைதான்
செலம் விருந் திருக்குமப்பா
சாரப்பா லிலையைப் பார்த்தால்
சணப்பிலை போலத் தொன்றும்

அழுகண்ணி என்ற மூலிகை இப் பாடலில் குறிப்பிடப்படுகின்றது. அழுகண்ணி என்பது ஓர் அரிய கற்ப மூலிகை. இதனைப் பயன்படுத்தி காயசித்தி பெற்ற நிலைமைகளால் இச் சித்தரை அவ்வாறு பெயர் கொண்டு அழைத்திருக்கலாம். ‘அழுகண்ணி’,‘தொழுகண்ணி’ என்ற மூலிகைகள் வைரசு நோய் நிலைமைகளில் சிறப்பாக செயலாற்றும் வன்மை உடையவை.

காய கற்ப மருந்துகள் வயது முதிர்வதைத் பிற்போடுவதுடன் (Delaying of the ageing process) உடல், உள்ளம் ஆகிய இரண்டையும் வன்மைப்படுத்தும் (Strengthens the physique and mind), வாழ்வியல் முறை மாற்றங்களால் ஏற்படும் நோய்கள் (Diseases due to changes in lifestyle) தடுப்பதுடன், நோய் எதிர்ப்பு மண்டலத்தை வன்மைப்படுத்தி நோய் ஏற்படுவதை (Occurrence of disease) தடுப்பதுடன், ஆத்மிக ரீதியாக குண்டலினி சக்தியை (Serpent power) எழுச்சி பெற செய்து அதி உன்னத நிலையை (Super conscious) அடையச் செய்வதுடன் மன அழுத்தம் (Stress) குறையச் செய்வதுடன் மனம், உடல், ஆத்மா ஊட்டம் பெறச் செய்து வளப்படுத்தி நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதன் மூலம் வைரசுகள் எமது உடலைத் தாக்குவதை காயகற்ப மருந்துகள் தடுப்பதுடன் எமது வாழ்நாளையும் நீடித்து (Increases the life span) உன்னத வாழ்வை வாழ உதவுகின்றன. இம் மருந்துகளை இடையில் நிறுத்தாது எடுப்பதுடன், உப்பு, காரம், புளிப்பு, மீன், இறைச்சி போன்றவற்றையும் இம் மருந்துகள் எடுக்கும் போது தவிர்ப்பது நன்று.

கேளென்ற “கரு நெல்லி” “கருத்த நொச்சி”
தெடியான “கரு வீழி” “கருத்த வாழை”
காளென்ற கரிய கரி சாலையோடு
“கருப்பான நீலியொடு” கரிய வேலி
கோளென்ற “கரூமத்தை”த் ‘தீப சோதி’
‘கொடுத் திரணச் சோதி’ சாயா விருட்சம்
ஏறென்ற எருமை கனைச்சான் ‘ரோம விருட்சம்’
ஏற்றமாம் ‘சுணங்க விருட்சம்’ செந்திராய்.
செந்திராய் ‘ செங்கள்ளி’ செம்மல்லி யோடு
‘சிவந்த கற் றாழை’ ‘செஞ் சித்திர மூலம்’
நந்திராய் சிவப்பப்பா மார்க்கத்தோடு
நலமான ‘கற்பிரமிகள்’ ‘கற்சேம்’ பாகும்.
பந்திராய் ‘கல்லுத்தா மரை’யினோடு
பாய்ந்த குழல் ‘ஆதொண்டை’ ‘மகா பொற் சிந்தில்’
‘வெந்திராய்’ ‘வெண்புரசு’ வெள்ளைத் துத்தி
‘மிகு வெள்ளைத் தூதுவளை’ மிடுக்கு மாமே
மிடுக்கான குண்டலமாம் ‘பாலையோடு’ ‘வெள்ளை
நீர் முள்ளி’ வெண் விண்டுக் காந்தி
கடுக்கான ‘வெள் கண்டங்காரியோடு
கசப்பான ‘பசளையொடு’ மதுர வேம்பு
கிடுக்கான ‘கிளிமூக்குத் துவரை’ அழுகண்ணி
கெடியான ‘பொன்மத்தை’ மதுரக்கோவை
படுக்கான ‘பொன்வண்ணச் சாலி யொடு
பாங்கான ‘கருந்தும்பை’ மதனத் தண்டே
தண்டொரு மூவிலையாம் குருத்துமாகும்.
தனலான சிவத்ததில்லை கருத்த வேம்பு
‘இண்டோடே இவ் வகைகள் நாற்பத்தைந்தும்
ஏற்றமாம் மலைகளிலே மிகுதி உண்டு.
பண்டோடு பாடானம் ஆறுபத்து நாலும்
பட்டுடனே கட்டுண்டு படுதிப் பற்றும்
துண்டோடு சூதமது கட்டும் ஆகும்.
சுயம்பான உபரசங்கள் சத்தும் ஆமே.
சத்தான மூலிகையில் சுருக்குச் சித்தி
சாப்பிட்டால் மண்டலந்தான் சாவோ இல்லை
மத்தான மன்மதன் போல் தேகமாகும்
மாசற்று நரைதிரைகளெல்லாம் மாறும்
எத்தான வாசியெல்லாம் இறுகிப் போகும்.
ஏறலாம் ககனத்தில் ஏற்றமாக
அத்தான அடுக்கெல்லாம் சோதித் தேறி
அண்ட ரண்ட பதமெல்லாம் அறியலாமே”

சித்த மருத்துவத்தில் கருமை என்று வரும் மூலிகைகள் சிறப்பான மருத்துவ உன்னத குணத்தைக் கொண்டவை. நரை, திரை, மூப்பு, சாக்காடு போக்கி வாழ்நாளை நீடிக்கும் 45 காயகற்ப மூலிகைகளை போகர் குறிப்பிடுகின்றார். யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவில் மூலிகை மருத்துவ அருங்காட்சியகம், பாரம்பரிய அறிவுசார் எண்மிய நூலகம் (Traditional Knowledge digital library) உருவாக்கப்பட வேண்டும். வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் ஒவ்வொரு பிரதேச சித்த மருத்துவ மனைகளிலும் மூலிகைத் தோட்டத்தையும் சித்த மருத்துவ நூலகத்தையும் அமைத்து தமிழர்களது அரிய கருவூலங்களைப் பாதுகாக்க வேண்டும். ■

**மூலிகை சுக வாழ்வு நிறுவனம்**
**கிளவ் வீதி, தெல்லிப்பளை**

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்தல், ஐயறுதல், வேண்டுதல் போன்றன உருவாகாமல், இருப்பை இருப்பாக மட்டும் சொல்லும் தொனி உருவாகிவிடும். அப்படியொரு தொனியில் விரியும் இந்தக் கவிதையை வாசித்துப் பார்க்கலாம்:

நீதியின் / கண்கள் / மூடியிருந்தன குற்றம் / பழகுகிறது/ தண்டனை தண்டனை / என்றால் என்ன துவர்ப்பைப் / பின் தொடர்கிறது / பிஞ்சுப்பாகல் மெல்ல சுவைக்கிறது / கடினம் / பழகுகிறது

அது / இருளின் / தீர்ந்துபோன / குடு வைக்குள் / வெளிச்சமாகிறது

அது பகட்டானது / உள்ளே இருளை / யார் ஒட்டி வைத்தது

அருகிலோ / தொலைவிலோ / தேடிப் பாருங்கள் / உங்களிலும் / அப்பியிருக்கலாம்

அதிகரித்து / அதிகரித்து / குற்றம் மட்டுமே / எஞ்சுகிறது
யாரெங்கே / அபகரித்துச் / செல்வது

நீதியின் / கண்களைக் / காணவில்லை / அது குற்றத்தை / முறையிடுவது

குற்றம் / வெளிச்சத்தில் / இன்னும் / பிரகாசமாக / அலைகிறது / தென்படாத / வடிவில்

தனிமனிதர்களாகவும்

## மிதக்கும் வெளிகளை எழுதுதல்:
## நவீன கவிதையின் இரண்டு புதுமுகங்கள்

சமூகத்தின் உறுப்பினர்களாகவும் வாழவேண்டிய நிலையில் குற்றம், தண்டனை, அனுசரித்துப் போதல், நீதிமுறைமை போன்றனவற்றிற்குப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டியது தேவையான ஒன்று. ஆனால் மனிதர்கள் மந்தைகளாக மாறி இவற்றிலிருந்து விலகிச் செல்வதை விடாப்பிடியாகக் கொண்டிருக்கின்றனர் இதன் பின்னணியில் பொருளியல் தேடலும் தன்முனைப்பும் இருக்கின்றன எனக் கொஞ்சம் உயர்ந்த கவிதைக்குரல் சொல்கிறது. இந்த அளவுக்குக் கூட குரலை உயர்த்தாமல் விரியும் இன்னொரு கவிதையில் வனமென்னும் வெளியை அரூபமாக்கி நெருப்பு, ஒலி என்னும் குறிப்பான குறியீடுகளால் கவிதையின் அர்த்தத்தளத்தை மாற்றுகிறார்,

வனாந்தரத்தின் கைகள் / விழுதுகளின் பெருவிருட்சம் சருகாகிவிடும் இலைகள்/ இளவேனிற்கால / இலையுதிர் மழை

ஒரு சப்தம் கேட்டுக்கொண்டிருக்கும்/ அடியொற்றிய நகர்வு / அரவங்களின் நெளிவு/ ஆசுவாசம் ஒரு வரியில் உயிர் கரிக்கும் / தீயின் இறுதி மூச்சுகள் சொட் டும் / சாம்பல் இரத்தம் / எரித்ததாகவோ / எரியேற்றியதாகவோ /

ஒரு இசையின் இறுதிச்சுவடு/ ஒலித் துக் கொண்டிருக்கையில் / சருகை நுகர்ந்த / தீக்குச்சி மரணம்

வெளியையையும் காலத்தையும் குறிப்பாகக் காட்டாத கவிதைகள் வாசிப்பவர்களுக்குத் தடைகளை ஏற்படுத்தும் சில நேரங்களில் உள்ளே நுழையவிடாமல் வெளியேற்றி விடும் வேலையையும் செய்யக்கூடியன. ஆனால் புதிதாய் எழுத வந்துள்ள ரயலாஸூம் மின்ஹாவும் அந்தத்தடைகளை உடைக்கும் விவரிப்புகளையும் முரண்நிலைச் சொற்களையும் பயன்படுத்துவதன் வழியாக்கக் கவிதையியலின் அழகியல் கூறுகளைச் சரியாகப் பயன்படுத்தி வெளிப்பட்டுள்ளனர். இந்த வெளிப்பாடு திணைசார் மரபில் வராத மாற்றுமரபின் தொடர்ச்சியும் நீட்சியும். அந்தவகையில் இவ்விரு தொகுப்பும் இலங்கைத் தமிழ்க் கவிதைப்பரப்பில் கவனிக்கத்தக்க தொகுதிகளாக வந்துள்ளன.

மின்ஹா / நாங்கூழ்/ கருப்புப்பிரதிகள் / சென்னை / 2020

றியலாஸ் / யசோதரையின் வீடு புதுப்புனைவு இலக்கியவட்டம் / மருதமுனை / 2020

■

# மக்களின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளாத அரசும்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழில் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற நாடு. இலங்கையின் அபிவிருத்தி என்பது இத் தொழில்களின் அபிவிருத்தியிலேயே தங்கியிருக்கின்றது. சுய பொருளாதாரக் கொள்கையை வளர்ப்பது அல்லது கட்டியெழுப்புவதாக இருந்தால் இத்தொழில்கள் மீதான கவனக்குவிப்பு அவசியமானது. வெறுமனே தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி என்பது ஒருவரை நோயாளியாகத் தொடர்ச்சியாக வைத்துக் கொண்டு சிகிச்சையளிப்பது போன்றது. இலங்கையின் நிலைமையும் இதுதான். பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கின்ற மக்கள் படை, தொடர்ச்சியாகத் தங்கள் வாழ்வாதாரத்துக்குப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதுவும் இந்தப் பெருந் தொற்றுக் காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கின்றவர்களாக விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் மாறியிருக்கின்றார்கள். உண்மையில் அரசிடம் சிறந்த பொருளாதாரக் கொள்கைகளோ அல்லது கொள்கைவகுப்பாளர்களோ இல்லை என்பதைத்தான் இது காட்டுவதாக எதிர்க்கட்சி தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது. பஸிலின் வருகையை மீட்பரின் வருகை போல பாசாங்கு காட்டிய அரசு, அவரின் வருகையின் பின்தான் மேலும்மேலும் தன் ஸ்திரத்தன்மையை இழந்து அல்லாடுகின்றது. இன்று நிபுணத்துவம் சார்ந்தவர்களின் பங்களிப்பு இந்த அரசுக்கு அவசியமாக இருக்கின்றது. அதை அமைச்சர்கள் மட் டத்தில் தேடமுடியாது என்பதுதான் உண்மை. ஆனால் அமைச்சர்களோ தம்மை நிபுணத்துவம் மிக்கவர்களாகக் காட் டிக்கொண்டிருக்கின்றார்கள். மக்கள் மைய அரசாக இருந்தால் ஒரு நிபுணத்துவக் கட் டமைப்பை விரைந்து ஏற்படுத்த வேண்டும். இன்றைய பொருட்களின் விலையேற்றம் சராசரி மனிதர்களின் இயல்பான வாழ்வுக்கு ஏற்றதல்ல. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் நாட்டின் பொருளாதாரச் சரிவையும் அரசிடம் சரியான பொருளாதாரக் கொள்கையும் இல்லாத தன்மையையே வெளிப்படுத்தும். ஆடம்பரப் பொருட்களின் மீதான விலையேற்றங்களை இங்கு இன்றைய நிலையில் அதிகம் கருத்திற்கொள்ளத் தேவையில்லை. மக்களின் போராட்டங்களும் அதற்கானதாக அமையாது.

வடக்கில் கடற்றொழிலாளர்கள் தொடர்ச் சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். அரசோ அதன் கடற்றொழில் அமைச்சரோ அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தவிதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் முன்வைக்கவில்லை. மக்கள் கொதித்த நிலையில் இருக்கின்றார்கள். அரசின் மீதும் அமைச்சர் மீதும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த நிலை இருக்குமாக இருந்தால் இந்த அரசும் அதன் அமைச்சரும் யாருக்கானவர்கள் என்ற கேள்வி எழுகின்றது. இந்தியாவை பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக மக்களின் வாழ்க்கையில் விளையாடுகின்றதா? என எண்ணத் தோன்றுகின்றது. கடற்றொழில் அமைச்சர் முன்னைய மக்களுடனான சந்திப்புக்களில் தன் கையைப் பலப்படுத்துமாறு மக்களிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றார். அமைச்சர் இந்த அரசில் பலமான அமைச்சுப் பதவியைத்தான் பெற்றிருக்கின்றார். அதைக் கொண்டு சீனாவையும் இந்தியாவையும் எந்த நலனுக்காகத் திருப்திப்படுத்துகின்றார் என்பதுதான் புரியாமலிருக்கின்றது. அரசோ அதன் அமைச்சரோ அல்லது கடற்படையாலோ முடியாது எனின் தங்கள் பிரச்சினையைத் தாங்களே தீர்த்துக் கொள்வதாக ஊடகங்களில் தெரிவிக்கின்றனர். இத்தகைய நிலை ஒன்று தோற்று விக்கப்படுமாக இருந்தால், அதை அரசு விரும்புகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. 2009 இற்கு முன்னர் தாங்கள் இத்தகைய நிலைகளை எதிர்கொள்ளவில்லை என மீனவர்கள் சொல்லுகின்றார்கள். ஆக யுத்த முடிவுக்குப் பின்னரான இந்த நிலை வலிந்து தோற்றுவிக்கப்பட்ட நிலையா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

அரசின் நிலைப்பாடு இவ்வாறு இருக்கின்ற போது, இந்த மக்களின் நிலைப்பாடு சார்ந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கின்றது என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். அவை வெறுமனே அறிக்கையிடல்களோடும் இந்தியத்தூதுவரைச் சந்திப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியும் என அப்பாவித் தனமாகச் சிந்தித்து செயற்பட்டுவருகின்றன. அதுவும் மாகாண சபைத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள இருக்கின்ற நிலையில், இனி தங்களுக்குள் போட்டிபோட்டு அடிபடவே அவற்றுக்கு நேரம் இருக்காது இதற்குள் மக்களின் வாழ்வாதாரமா? போராட்டமா? அவற்றுக்குச் சிந்திக்க எங்கே நேரம் இருக்கப் போகின்றது. தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் விவசாயிகளின் போராட்டம் அவர்களால் சுயமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தங்களின் வயல்களிலும் வீதிகளிலும் பதாதைகளை ஏந்திக்கொண்டு அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். விவசாய அமைச்சரின் பொம்மையைக்கூட தீயூட்டித் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். தங்களது வாழ்வதாரத்துக்காகத் தாங்கள்தான் போராட வேண்டும் என்பதன் வெளிப்பாடுதான் இது. கைவிடப்பட்ட மக்களால் வேறு என்னதான் செய்ய முடியும். பதாதை ஏந்துவதையும் கோசங்கள் எழுப்புவதையும் விட.

இந்த நிலையை அரசு தொடர்ந்தும் தக்கவைத்திருக்கப் போகின்றதா? என்பது தான் இன்றைய கேள்வி. இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் நாட்டின் எதிர்காலம் எதை நோக்கி நகரப்போகின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக முப்பது ஆண்டுகளாகப் போராடி அவர்களை ஒளித்துவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் அரசு, மக்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகப் போராடும் இன்னொரு போராட்டத்தைத் தொடங்கிவைக்க முயல்கிறதா? அரசு விரைந்து செயற்படுவதன் மூலமே சுபீட்சமான இலங்கையை மக்களுக்குக் காட்ட முடியும்.

■

# மருத்துவத்தை...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், சிலர் இதை தமக்குச் சுமையெனக் கருதி ஒரு விவகாரமாக்க முயற்சிக்கின்றனர். மக்களின் (நோயாளரின்) நிலைமையை மனதிற் கொண்டு சிந்தித்தால் இவ்வாறு இவர்கள் சிந்திக்க வேண்டியிருக்காது.

இன்று யாழ் போதனா மருத்துவமனையில் 90 க்கு மேற்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த விசேட மருத்துவ நிபுணர்கள் பணியாற்றுகின்றனர். மொத்தமாக இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் பணியாற்றும் மிகப் பெரிய நிறுவனம் இந்தப் போதனா மருத்துவமனையாகும். 24 மணி நேரமும் இயங்கும் இந்த மருத்துவனையில் தினமும் சராசரியாக 5000 க்கும் அதிகமானோருக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது. சில சிகிச்சைகளுக்காக திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிற மாவட்டங்களில் இருந்தும் நோயாளிகள் வருகின்றனர்.

சத்தியமூர்த்திக்கு முன்னர் போதனா மருத்துவமனையின் இயங்கு நிலை குறித்த அனுபவத்தை இரண்டு வகையாக நோக்க முடியும்.

1. நோயாளர்களின் அனுபவத்தின் வழியாக
2. மருத்துவ ஊழியர்களின் அனுபவம் மூலமாக.

**நோயாளர்களின் அனுபவத்தின் வழியாக**

போதனா மருத்துவமனையை, பொலிஸ் நிலையத்தைப்போல அச்சத்துடன் பார்த்த காலமொன்று இருந்துள்ளதையும் பலரும் அறிவர். அந்தளவுக்குக் கெடுபிடிகள் கோலோச்சியிருந்தன. அல்லது திருப்தியற்ற மனதுடன் சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த நிலை இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மக்களைப்பொறுத்தவரையில் இது முக்கியமான ஒன்று. பொது மருத்துவமனையில் உரிய மருத்துவ சேவையை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எவ்வளவு பெரிய சங்கதி. இதனால்தான் வெளிமாவட்ட மக்களும் நம்பிக்கையோடு இந்தப் போதனா மருத்துவமனைக்கு வருகின்றனர். மட்டுமல்ல கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட வடமாகாணத்தின் ஏனைய மாவட்ட, ஆதார, பிரதேச மருத்துவமனைகளுக்கான தாய் மருத்துவமனையாகவும் யாழ் போதனா மருத்துவமனையே விளங்குகிறது. இங்கிருந்து வருகின்ற மக்களின் மனதிலும் இன்று யாழ் போதனா மருத்துவமனை திருப்திகரமான நிலையைப் பெற்றுள்ளது.

மருத்துவ ஊழியர்களின் அனுபவம் மூலமாக

முப்பத்தெட்டு ஆண்டுகளாக இந்தப் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் மூத்த பணியாளர் ஒருவர் சொன்னார், தன்னுடைய சேவைக்காலத்தில் ஏழுக்கும் அதிகமான பணிப்பாளர்களின் கீழ் பணியாற்றியபோதும் இப்போதுள்ளதைப்போன்ற ஒரு முன்னேற்றமான நிலையை தான் காணவில்லை என்றார். முக்கியமாக ஊழலற்ற நிர்வாகத்தை சிரமங்களின் மத்தியில் Dr. சத்தியமூர்த்தி உருவாக்கியுள்ளார். மேலும் புரிந்துணர்வுடன் மதித்து பணியாளர்களையும் மருத்துவக்குழுவினரையும் நடத்துகின்ற நிர்வாகத்தைவிட்டு தான் ஓய்வு பெறுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் மகிழ முடிகிறது என்று. அவர் குறிப்பிட்டுள்ள முக்கியமான விடயம், ஊழல் முறைகேடுகள் தொடர்பானது.
நீண்டகாலமாகவே கண்டு பிடிக்கவும் கட்டுப்படுத்துவும் கடினமான முறையிலான ஊழல் இந்த மருத்துவமனையில் நிலவியதைப் பலரும் அறிவர்.

ஊழலுக்கு எதிரானவர் Dr. சத்திய மூர்த்தி என்பதால்தான் அவருக்கு ட்ரான்பரன்ஸி இன்ரநஷனல் அமைப்பினால் இன்டக்கிறிட்டி ஐக்கன் 2019 விருது வழங்கப்பட்டது. இதைப்போல சத்திய மூர்த்தியின் தன்னலமற்ற மனிதாபிமான சேவைக்கு மதிப்பளித்து அமெக்காவின் இன்ரர் அக்ஸன் போரம் A united voice for Global Change விருதினை வழங்கியது.

மாற்றம், வளர்ச்சி, புதுமை, அர்ப்பணிப்பான சேவை என்றெல்லாம் ஒரு செயற்பாட்டு அடையாளத்தை உருவாக்கினாலும் நெருக்கடிகளை ஏற்படுத்த முனையும் சக்திகளின் சதி வலை இன்று போதனா மருத்துவமனையை அபாயத்திற் தள்ளியுள்ளது. இதற்குச் சில ஊடகங்களும் பொறுப்பற்றமுறையில் துணைபோகின்றன. இது மக்கள் விரோதச் செயற்பாடாகும். தனியார் மருத்துவமனைகளின் வளர்ச்சிக்குச் சவாலாக போதனா மருத்துவமனையை இவர்கள் கருதுகிறார்கள். இதன் வெளிப்பாடே இதுவாகும். இந்தத் தவறான - அபாயமான போக்குக்கு யாழ்ப்பாணச் சமூகம் இடமளிக்குமானால் அது மிகப்பெரிய வீழ்ச்சியிற்தான் கொண்டுபோய் விடும். இதனால் முதலில் நேரடியாகப் பாதிப்படைவது ஏழை மக்களும் இடைநிலையாளர்களுமேயாகும். இதைக்குறித்துச் சிந்திக்க வேண்டிய - செயற்பட வேண்டிய அவசியத்தில் வடக்கின் புலமையாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

■




# உங்கள் அறிவுக்கொரு சவால்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | |
| | 3 | | | | 4 |
| 5 | | | | 6 | |
| 7 | | | 8 | 9 | |
| | | 10 | | | |
| 11 | | | 12 | | |

முழுப்பெயர்:- ....................
தரம்:- ....................
கற்கும் பாடசாலை:- ....................
விலாசம்:- ....................
....................
தொலைபேசி இலக்கம்:- ....................

**இடமிருந்து வலம்**

1. வாரத்தின் ஒரு நாள் (04)
5. நேரத்தை காட்டுவது (05)
7. குதிரை கட்டப்படும் இடம் (மாறியுள்ளது) (03)
9. வாழையில் போடுவது (02)
10. உள்ளம் (மாறியுள்ளது) (03)
11. வீதி (02)
12. அன்னதானம் வழங்கப்படும் இடம் (மாறியுள்ளது) (03)

**மேலிருந்து கீழ்**

1. நெற்றியில் இடுவது (04)
2. துயர் காலம் என்பதன் ஒத்தபதம் (05)
3. அதிகாலை (04)
4. புரதச் சத்துள்ள உணவு (03)
6. அரசன் சூடுவது (குழம்பியுள்ளது) (04)
8. காட்டின் ஒத்தசொல் (03)

**மேலே உள்ள குறுக்கெழுத்து அட்டவணையை சரியாக நிரப்பி அனுப்புங்கள். ரூபா 500ஐ பரிசாகப் பெறுங்கள்**

# மின் குமிழ் சொன்ன கதை



மிருதுளா என்ற தேவதை அற்புதமான சக்தி கொண்டவர். அனைத்துப் பொருளின் பாஷையும் அவருக்குத் தெரியும். அவர் ஒருநாள் பூமிக்கு வந்தார். ஒரு வீட்டில் இறங்கினார். அந்த வீட்டில் எல்லா மின்குமிழ்களும் ஒளிர்ந்தன. ஒரே ஒரு மின்குமிழ் மட்டும் ஒளிரவில்லை. ஒளிராத மின்குமிழில் சிலந்தி வலை இருந்தது. வலையை நோக்கி வந்த சிலந்தியும் மின்குமிழும் ஏதோ பேசின. தேவதை அப்பேச்சினைக் கேட்டார்.

"வாருங்கள் நனோ நுட்பக் கலைஞரே! இன்று இரை ஏதும் உங்கள் வலையில் அகப்படவில்லையா?" என்றது மின்குமிழ். "ஓ.. எனது வலையில் நனோத் தொழினுட்பம் இருப்பதையும் கண்டுபிடித்து விட்டீரா? கெட்டிக்காரன் தான்!" என்று சிலந்தி சொன்னது. "தங்குதன் இழை அறுந்து தொங்குகின்றீர்.. அது சரி முன்னர் இருந்தே உங்கள் பரம்பரையில் இதே இழைதானா?" என்று சிலந்தி கேட்டது. "இல்லை! இல்லை!! தோமஸ்அல்வா எடிசன் பிளாட்டினம் கம்பிச் சுருளைத் தான் பயன்படுத்தினார். பிறகு காபன் நுண்ணிழை. அதற்குப் பிறகு தான் தங்குதன் இழை. உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்று சொல்கிறேன். செல்பி இலத்திரனியல் நிறுவனம் தயாரித்த மின்குமிழ் நூற்றிப்பத்து வருடங்கள் ஒளிர்ந்துள்ளன. வணிக உற்பத்தியாளர்கள் எங்கள் ஆயுளை வேண்டுமென்றே குறைத்து விட்டனர். இன்னொரு விடயத்தையும் கேளுங்கள்! எடிசனின் உடல் அடக்கத்தின் போது அமெரிக்காவில் ஒரு நிமிடம் எங்கள் இனத்தை ஒளிராமல் நிறுத்தினார்களாம்" என்றது மின்குமிழ். ஒவ்வொரு பொருளும் நிறையக் கதைகளை வைத்துள்ளன என்பதை மிருதுளா அறிந்தார். அன்றிலிருந்து பூமியில் வாழ்ந்து கதை கேட்கத் தொடங்கினார்.

**ம.கனியா**
தரம் - 10
யா / வேம்படி
மகளிர் உயர்தரப் பாடசாலை

# பாவை




சின்னச் சின்னப் பாவை
சிறப்பாய் அமைந்த பாவை
வண்ண வண்ண ஆடை
வடிவாய் அணிந்த பாவை

என்னைப் போல காலும்
என்னைப் போல கையும்
கண்ணும் காதும் இரண்டும்
கண்ணியமாய் அமைந்த பாவை

கண்ணைச் சிமிட்டிப் பார்க்கும்
காதால் எதையும் கேட்கும்
பேரழகு மிக்க பாவை
பாப்பா விரும்பும் பாவை.

கி.கிருஷன்



கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
**செல்வன் பரணிகன்**
தரம் - 01
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

**பாராட்டு பெறுபவர்கள்**

**கி.கிருஷன்**
தரம் - 08A
யா/ஹாட்லிக் கல்லூரி

**தி.ஜதீபன்**
தரம் - 06
யா/இமையாணன் அ.த.க.பா

**வி.வர்ஷணன்**
தரம் - 06
யா/இமையாணன் அ.த.க.பா

**வே.வர்சினி**
தரம் - 04
யா/இமையாணன் அ.த.க.பா

**சி.அப்ஷலா**
தரம் - 05
யா/வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை

**க.சபின்**
கலைவாணி முன்பள்ளி
ஆழியவளை





12.10.2021 செவ்வாய்க்கிழமை அன்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட **அச்சுதன் வினோதினி** தம்பதியர் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கண்ணின் மீது படர்ந்த
இமை போல என்றுமே
இருவரும் நொடிப்பொழுதும் கூட
பிரியாமல் குடும்பம் என்ற பந்தத்தினுள்
ஒருங்கிணைந்து வாழ்வீர்களாக
இனிய திருமண நாள் வாழ்த்துக்கள்

**வாழ்த்துவோர்:**
**கிளப் ஹவுஸ்**
**ஐரோப்பிய நேரம் - நண்பர்கள்.**




**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 16.10.2021 அன்று ஜெயஸ்ரீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.